உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை (02.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 341

# வடக்கில் அரசின் நடவடிக்கைகளால் மீண்டும் மோதல் நிலையே உருவாகும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 02

**தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்குப் பிரதேசத்தில் நிர்வாகச் சேவைக்குப் பெரும்பான்மை இனத்தவர்களைச் சேர்த்துக்கொள்வது மீண்டும் இனப்பிரச்சினையை வன்முறைப் போராட்டத்துக்குத் திருப்பி விடும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.**

**வடக்கு நிர்வாக சேவைகளில் சிங்களவர்களை அதிகளவில் இணைத்துக்கொள்வது இனப்பிரச்சினையை மேலும் கூர்மைப்படுத்தி விடும் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.**

நிர்வாகச் சேவை நேர்முகப் பரீட்சைக்குத் தமிழ்மொழி மூலம் எவரும் தெரிவுசெய்யப்படாமை, வடக்கு மாகாணத்தில் நில அளவை உதவியாளர்களாகச் சிங்களவர்கள் பெரும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமை ஆகியவை தொடர்பாக 'உதயன்' அவரிடம் கேள்வி எழுப்பியது.

''நிர்வாகச் சேவைக்கு ஆள்களைச் சேர்த்துக்கொண்டமை திறமை அடிப்படையாக இருக்கலாம். மேலும் நில அளவை உதவியாளர் நியமனம் குறித்து முழு விவரங்கள் எனக்குத் தெரியாது. இருந்தும் வடக்கு நிர்வாகச் சேவையில் பெரும்பான்மை இனத்தவர்களைச் சேர்த்துக்கொள்வது மீண்டும் வன்முறை சார்ந்த போராட்டங்களை ஏற்படுத்தும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸில் தமிழ்ச் செல்வனுக்குச் சிலை வேண்டாம் என்கிறது இலங்கை அரசு



பாரிஸ், நவ. 02

பிரான்ஸில் சு.ப. தமிழ்ச்செல்வனின் சிலை நிறுவப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

பிரான்ஸில் இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழும் லா கோர்னியூவ் நகரில் இந்தச் சிலை நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் ஏற்கனவே நடப்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதனை இலங்கை வெளிவிவகார அமைச்சும் உறுதிப்படுத்தி உள்ளது.

சிலை நிர்மாணிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும்படி இலங்கைத் தூதரகம் லா கோர்னியூவ் நகர மேயருக்குக் கடிதமொன்றைக் கையளித்துள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக

(24ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

**இன நல்லுறவைக் குலைப்போர் மீது நடவடிக்கை தேவை**
இனங்களுக்கு இடையிலான நல்லுறவைச் சீர்குலைக்கும் வகையில் யாழ். பொது நூலகத்தில் செயற்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் சரவணபவன் எம்.பி. பக்கம் 3

**போர் உமிழ்ந்த பெண்கள்**
போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்ப நடத்தி வரும் போராட்டத்தை எடுத்துக் காட்டுகிறது கட்டுரை. பக்கம் 9

**முன்னாள் கெரில்லா போராளி பிரேஸிலின் ஜனாதிபதி**
ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்த பிரேஸில் ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் கெரில்லாப் போராளியான டில்மா ரௌஸெப் வெற்றி பெற்றார். பக்கம் 13

## விலைவாசி உயர்வை எதிர்த்து ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, நவ.02

விலைவாசி உயர்வு, அரசின் அதிகூடிய வரி விதிப்பு ஆகியவற்றுக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று கொழும்பு மெனிங் மார்க்கட் பகுதியில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் இடம் பெற்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை மன்னிப்புக் கேட்கச் சொல்வோர் கருணாவிடம் அப்படிக் கேட்கச் சொல்லாதது ஏன்?

### கேள்வி எழுப்புகிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, நவ. 02

சரத் பொன்சேகாவை மன்னிப்புக் கோரும்படி குரல் எழுப்பும் அமைச்சர்கள், கருணா அம்மான் விடயத்தில் மௌனம் சாதிப்பது ஏன்? நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், 900 பொலிஸார் கொல்லப்பட்டதற்கு கருணா மன்னிப்பு கோரவேண்டும் எனத் தெரிவித்திருந்தார். அமைச்சர்கள் கருணாவை மன்னிப்புக் கோரும்படி கேட்காதது ஏன்? - இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்க அரங்கம் முயற்சி

கொழும்பு, நவ. 02

இனப் பிரச்சினைக்குத் தீர்வு யோசனை ஒன்றை டிசெம்பர் மாத இறுதிக்குள் முன்வைக்கத் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் தயாராகி வருகிறது என அரங்கத்தின் செயலாளரும் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் தலைவருமான எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கக் கூட்டம் நாளைக் காலை கொழும்பு ஈ.பி.டி.பி. தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது. அரங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வுயோசனை ஒன்றைத் தயாரித்து வருகின்றன என்றும் அத்திட்டம்

(24ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர்**

ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்கான கணிதம்-I இல் பகுதி A,B மற்றும் கணிதம்-II இல் பகுதி A,B ஆகிய வினாத்தாள்கள்.

## புலிகளின் மீள் இணைவு சாத்தியமே

### இந்திய சட்டமா அதிபர் அடித்துச் சொல்கிறார்!

புதுடில்லி, நவ.2

விடுதலைப் புலிகள் அமைப்பில் எஞ்சி இருக்கும் போராளிகள் தமிழ்நாட்டில் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தின் ''எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள் இந்தியாவை - குறிப்பாகத் தமிழகத்தை- தாம் மீண்டும் ஒன்று சேர்வதற்கான இரகசியத் தளமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களைப் புறந்தள்ளிவிட முடியாது'' - என்று இந்திய (22ஆம் பக்கம் பார்க்க)

**தீபாவளி மலிவு விற்பனை** (விசேட கழிவுடன்)

ஸ்கேட் பிளவுஸ் -250/-
பஞ்சாபி, கவுண் -250/-
சாறி (டஸ்ற்) (Duet)-550/-, 650/-
சேட் -250/-, 450/-
ரவுசர் -600/-
மற்றும் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகள் அனைத்தும் மலிவு விலையில்....



கணேசன் சென்ரர்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.T.P: 021 222 5708

**NTC Route அனுமதியுடன் பஸ் விற்பனைக்கு**

A/C Barth Body அசோக் லேலண்ட் யூடி.நிஷான் ஆகிய இரண்டு பஸ்களும் யாழ்.-மட்டக்களப்பு NTC Route அனுமதியுடன்.

உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடனடியாக விற்க எதிர்பார்க்கின்றார்

தொடர்பு: யாழ்ப்பாணம் 0772229285
மட்டக்களப்பு: 0725173746

**முதலாம் ஆண்டு நிறைவுதினம் 02.11.2010 நியூ மெடி கெயர்**

மருத்துவமனையின் முதலாம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இன்று 02.11.2010 செவ்வாய்க்கிழமை எமது மருத்துவமனையில்

* மருத்துவ ஆலோசனைகள்
* இரத்தப் பரிசோதனைகள்
* மருந்து வகைகள்

என்பவற்றை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது சேவைகள்...

* 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு சேவை
* வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
* நவீன ஆய்வுகூட இரத்த, சலப் பரிசோதனைகள், ஸ்கான் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ மெடி கெயர்,
இல.32, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

New Medi Care Hospital

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிர்வாக சேவையில் தமிழர்கள் புறக்கணிப்பு அரச சேவையைச் சிங்கள மயமாக்கும் முயற்சியே

## திட்டமிட்ட செயற்பாடு என்றும் விசனம்

யாழ்ப்பாணம், நவ.2

இலங்கை நிர்வாக சேவைக்கு தமிழ்மொழி மூலம் தோற்றியவர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது அரச சேவையை சிங்கள மயமாக்கும் அரசின் முயற்சியையே வெளிக்காட்டி நிற்பதாக பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவையின் 2009 ஆம் ஆண்டுக்கான திறந்த போட்டிப் பரீட்சை இந்த வருடம் முற்பகுதியில் தேசிய ரீதியில் இடம்பெற்றது. இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டன. இதில் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய எவரும் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படவில்லை. சிங்கள மொழி மூலம் தோற்றியவர்களில் 257 பேர் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவாகியுள்ளனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கட்டடத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் எவரும் தமிழர்கள் இல்லை. அனைவரும் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.

தமிழ்மொழி மூலம் இந்த பரீட்சைக்குத் தோற்றியவர்கள் எவரும் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவாகாமை குறித்துப் பலரும் விசனத்தையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்வதில் விகிதாசார முறைமை கடைப்பிடிக்க வேண்டும். அது தான் முறைமை அந்த நடைமுறையே நீண்ட காலம் பின்பற்றப்பட்டு வந்தது. அதன்படி தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களே கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆனால், கடந்த இரண்டு தடவைகளாக நிர்வாக சேவைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றிய எவரும் தெரிவு செய்யப்படாதமை இந்த நாட்டில் ஜனநாயகம் சீரழிந்துள்ளதனையே வெளிக்காட்டுகிறது. இராணுவ ஆட்சியே இலங்கையில் நடக்கிறது. அரச சேவையை சிங்கள மயமாக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதே அரசின் நோக்கமாகும் - என்றார்.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளரும், இலங்கை நிர்வாக சேவை தரத்தைச் சேர்ந்தவருமான சி.வி.கே. சிவஞானம் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் திறமையை மழுங்கடித்து ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் உயர் பதவிகளில் இருந்து புறக்கணிக்கும் செயலில் அரசு இறங்கியுள்ளது.

இலங்கை நிர்வாக சேவைத் தெரிவு விகிதாசார முறையில் இடம்பெற வேண்டியது கட்டாயம். வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு ஒன்பதுக்கு இரண்டு என்ற வீதத்தில் இடம்பெற வேண்டும்.

பட்டதாரிகள் தோற்றும் இந்தப் பரீட்சையில் தமிழ் இனத்தைச் சேர்ந்த எவரும் தகுதி பெறவில்லை என்பது நம்பக் கூடிய விடயமல்ல. தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை - என்றார். (த-14)

# மிதிவெடி அபாயம் காணப்படுவதாலேயே யாழ்.மாவட்டத்தில் மீள் குடியமர்வு தாமதம்

## பாதுகாப்பு வலயங்கள் யுத்த காலத்தில் மட்டுமே இருந்தன என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ.2

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் மட்டுமே உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது அப் பிரதேசங்களில் மிதிவெடி அபாயங்கள் காணப்படுவதனாலேயே மக்கள் மீள் குடியமர்வு தாமதம் அடைகிறது. இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா எழுப்பியுள்ள விவகாரம் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

இப்போது யுத்தம் இல்லை. எனவே இராணுவத்தினர் இராணுவ முகாம்களில் மட்டும் இருந்து கொண்டு ஏனைய பிரதேசங்களை விடுவிப்பதாக இராணுவ இணைப்பதிகாரி தெரிவித்தார். அதனடிப்படையிலேயே வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இதேவேளை -

வலி. வடக்குப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றப்படும் பட்சத்தில் அப் பிரதேசத்தில் மீள் குடியமர்வை மேற்கொள்ள முடியும். இராணுவ மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு இப் பிரதேசத்தில் வேகமாகச் செயற்பட்டு வருகின்றது.

தற்போது மூன்று கிராம சேவகர்கள் பிரிவில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைத்துள்ளது. இப் பிரதேசங்களில் மக்கள் விரைவில் குடியமர்த்தப்படவுள்ளனர். இதனைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைக் கொண்டு ஆரம்பிக்க விரும்புவதால் விரைவில் அவர் கலந்து இதனை மேற்கொள்வார் - என்றார். (த-15)

# தகவல் வளங்களின் தரிசனம் கண்காட்சி சுன்னாகத்தில்

சுன்னாகம், நவ.2

நூலக விழிப்புணர்வு நிறுவனத்துடன் இணைந்து வலி.தெற்கு பிரதேச சபைநடத்தும் 'தகவல் வளங்களின் தரிசனம்' என்ற பெயரிலான கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சு.முருகநேசன் மு.ப. 9 மணியளவில் இக்கண் காட்சியை ஆரம்பித்து வைத்தார். எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை இக்கண்காட்சியைப் பார்வையிட முடியும்.

இது வெறும் நூலகக் கண்காட்சியாக அமையாமல் தகவல் வளங்களைத் தேடியறியும் பல்வேறு வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுவதோடு பண்டைக் காலம் முதல் தற்காலம் வரையிலான பல்வேறு தகவல் மூலங்களையும், அரும் பொருள்களையும் காட்சிக்குக் கொண்டிருக்கிறது. அத்துடன் தகவல்களைப் பேணுதல், காட்சிப்படுத்தல் தொடர்பானபுதிய அணுகுமுறைகளும் இக்கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



பாடசாலை மாணவர்களுக்கும், நூலக ஆசிரியர்களுக்கும் இக்கண்காட்சி பெரிதும் பயன்படும் என சுன்னாகம் பொது நூலக நூலகர் க.சௌந்தரராஜன் தெரிவித்தார். (உ-38)

# மஹிந்தவின் இரண்டாவது பதவி ஏற்பை முன்னிட்டு

# யாழ்.நகரில் இருந்து அம்பாந்தோட்டைக்கு இன்று சர்வமத ஊர்வலம் புறப்படும்

யாழ்ப்பாணம், நவ.2

நாட்டில் சாந்தி, சமாதானம், ஒற்றுமை வேண்டி அனைத்து மதங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொள்ளும் ஊர்வலம் இன்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்.நகரில் இருந்து அம்பாந்தோட்டைக்குப் புறப்படும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு மற்றும் பிறந்த நாளை முன்னிட்டு இந்த ஊர்வலத்தை ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளதாக அதன் செயலாளர் எஸ்.ஜெயராசா தெரிவித்தார்.

எதிர்வரும் 19ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தில் முதலாவது கப்பல் வெள்ளோட்டம் விடப்படும் வேளையில் அங்கு ஊர்வலம், சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

# பொதுமக்களால் தாக்கப்பட்ட நிலையில் அரியாலையில் நேற்றிரவு ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.2

அரியாலை, புங்கன்குளம் பகுதியில் வைத்து பொதுமக்களால் தாக்கப்பட்ட நிலையில், நபர் ஒருவரை யாழ்.பொலிஸார் நேற்றிரவு கைது செய்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

மேற்படி கைது செய்யப்பட்ட நபர் நேற்றிரவு 7.30 மணியளவில் பாண்டியன் தாழ்வுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியுள்ளார். இது தொடர்பான தகவல் படையினருக்குக் கிடைத்ததையடுத்துப் படையினர் அவரை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

இதன் பின்னர் இரவு 8.30 மணியளவில் இந்த நபர் அரியாலை புங்கன்குளம் பகுதியில் உள்ள வீட்டு வளவில் வாழைத் தோட்டத்தில் மறைந்திருந்ததாகவும் இதனை அறிந்த அப்பகுதி மக்கள் அவ்விடத்தில் திரண்டதையடுத்து இந்த நபர் அவர்களுடன் தகராறில் ஈடுபட்டதாகவும், அதையடுத்து அவர் பொதுமக்களால் தாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல் யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்ததையடுத்து அங்கு விரைந்து சென்று அந்த நபரைக் கைது செய்ததுடன் அவர் மறைந்திருந்த வீட்டின் உரிமையாளரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் கூறப்பட்டது. (த-26-135)

# யாழ்.ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவும் இனி இரவு 8 மணிவரையிலும் இயங்கும்

## புதிய நடைமுறை 15ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் (ஒ.பி.டி) எதிர்வரும் 15ஆம் திகதி முதல் காலை 7 மணிமுதல் இரவு 8மணிவரை சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி ப.பவானி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

ஜனாதிபதியின் பணிப்பை அடுத்து நாட்டில் உள்ள அனைத்துப் போதனா வைத்திய சாலைகளிலும் காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு இயங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அத்தகைய நடைமுறையைப் பின்பற்ற சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ)

# யாழ்ப்பாணத்தில் "தொழிற் சந்தை"

யாழ்ப்பாணம், நவ.2

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி தொழிற்சந்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற் சந்தையில் கொழும்பில் இருந்து வருகை தரும் தனியார் தொழில் நிறுவனங்களும், உள்ளூர் தொழில் நிறுவனங்களும் கலந்துகொண்டு தமது பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அன்றைய தினம் நேர்முகத் தேர்வை நடத்தி இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முன்வந்துள்ளன.

எனவே யாழ்.மாவட்டத்தில் உள்ள பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப விரும்புகின்ற நிறுவனங்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னதாக மாவட்ட செயலக திட்டமிடல் கிளையுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

# புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவு

புங்குடுதீவு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. என்று யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அந்தப் பிரதேச மக்கள் இங்கு சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி செயலகத்தில் நாளை சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாகச் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான ஓட்டுனர் பரீட்சார்த்தப் பரீட்சை நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த ஜூலை மாதம் 16ஆம் திகதியும் அதற்கு முற்பட்ட திகதிகளிலும் நடைபெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தி அடைந்தவர்களும், கடந்த ஓட்டுனர் பரீட்சார்த்தப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்களும் கலந்து கொள்ளமுடியும்.

இதன்போது பரீட்சார்த்திகள் அரச செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடனும் உரிய வாகன வசதிகளுடனும் மு.ப. 9.30 மணிக்கு முன்னர் சமூகம் தருமாறு கிளிநொச்சி அரச அதிபர். கேட்டுள்ளார். [illegible]

# கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையினர்

# வடமராட்சியில் நேற்று அதிரடிச் சோதனை; 'கள்ளக் கரண்ட்' எடுத்த பலர் சிக்கினர்!

வடமராட்சி, நவ.2

வடமராட்சிப் பிரதேசத்தில் கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களும் பிரதேச பொலிஸாரும் இணைந்து நடத்திய அதிரடிச் சோதனையின்போது சட்ட விரோதமாக மின் இணைப்புப் பெற்ற நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த மின்சாரசபை உத்தியோகத்தர்கள் பருத்[illegible] வடமராட்சிப் பிரதேசத்தில் தொண்டமானாறு தொடக்கம் குடத்தனை வரை நேற்று அதிகாலை முதல் இந்த திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது நூற்றுக்கணக்கானோர் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டதுடன் மின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட பெரும் தொகையான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

நேற்று மாலைவரை சட்ட விரோத மின்சாரத்தைப் பெற்ற 160 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மொத்தமாக பல லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட அதே சமயம் தொடர்ந்து பலருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. (ஒ-236)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி நுழைந்து சேதம் விளைவித்தவர்கள் தடுக்கப்படாதது ஏன்? கைது செய்யப்படாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், நவ.2

இனங்களுக்கு இடையிலான நல்லுறவைச் சிதைக்கும் வகையில் கடந்த 23 ஆம் திகதி யாழ். பொதுநூலகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் ஈடுபட்டவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஒரு நூல் நிலையம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது.'' இது மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேருவால் அடிக்கடி நினைவுபடுத்தப்படும் வாசகம். ஒரு நூலகம் என்பது ஒரு நாட்டினதோ சமூகத்தினதோ அறிவு வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிப்பதுடன் கலை, இலக்கியம், பண்பாடு வரலாறு போன்ற வாழ்வியல் கூறுகளை ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைகளுக்கு கையளிக்கும் பெரும் பொறுப்பையும் மேற்கொள்கிறது.

எனவேதான் நூலகம் ஒரு அறிவாலயமாக மக்களால் மதிக்கப்படுகிறது.

ஆனால் எமது மண்ணிலோ பண்டிதர் நேருவின் கூற்று எதிர்மறை யதார்த்தமாக இடம் பெற்றுள்ளது என்பது மறக்கமுடியாத ஓர் உண்மையாகும். ஒரு நூல் நிலையம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப் படுகிறது என்பதற்கு நேர்மாறாக ஒரு நூல் நிலையம் அழிக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் நிரம்புகின்றன என்பதே நாம் கண்ட அனுபவமாகும்.

1981ஆம் ஆண்டு இரு முக்கிய அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் மாவட்ட சபைத் தேர்தல் பரப்புரைகளுக்காகத் தங்கியிருந்த போது யாழ்.நூலகம் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காடையர்களாலும் துரையப்பா விளையாட்டரங்கில் பாதுகாப்புக் கடமைகளுக்காகத் தங்கவைக்கப்பட்டிருந்த ஆயுதப் படையினராலும் எரியூட்டப்பட்டது. தொண்ணூறாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள், ஓலைச்சுவடிகள், ஆவணச்சான்றுகள் என்பன எரித்துச் சாம்பராக்கப்பட்டன.

யாழ்.நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தி கேட்டு அருட்திரு. தாவீது அடிகளார் அந்த விநாடியே அதிர்ச்சியில் உயிரிழந்தார். இன்னொருவர் மனநிலை பிசகி நூல் நிலையச் சுற்றாடலில் அலைந்து திரிந்தார். வடபகுதி மக்கள் வீதி வீதியாகக் கண்ணீர் சிந்தியும் ஒப்பாரி வைத்தும் கதறி அழுதனர். ஆனால் இக்கொடுஞ்செயல் இளைஞர் சந்ததியிடம் ஏற்படுத்திய கோபமும் வெறுப்புணர்வும் பெரும் ஆவேசமாக மாற ஆயுதப் போராட்டம் புதிய வீறு பெற்றது. இதனால் பல இளைஞர்கள் சிறை சென்றதும் தலைமறைவானதும் யதார்த்தமாகியது.

ஒரு நூல் நிலையம் எரிக்கப்பட்டபோது பல சிறைச்சாலைகள் நிரப்பப்பட்டன என்பது அனுபவமாகியது.

இப்போது மீண்டும் இப்படியான ஒரு நிலைமை தோன்றிவிடுமோ என அச்சப்படுமளவுக்குச் சில சம்பவங்கள் இடம்பெற ஆரம்பித்துள்ளமை ஒரு கவலை தரும் விடயமாகும்.

சந்திரிகா அம்மையார் ஆட்சியிலிருந்த போது யாழ்.பொது நூலகம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக் கப்பட்டது. எரியூட்டல் கொடூரத்தின் வடுக்கள் வெள்ளை அடித்து மறைக்கப்பட்டன. இப்போது அது மெல்லமெல்ல பழைய நிலை மையை நோக்கி வளர்ச்சியடைந்துவருகிறது.

இப்படி ஒரு நிலைமையில் கடந்த 23ஆம் நாள் மீண்டும் இந் நூலகம் இலக்கு வைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் அதேவேளையில் ஆத்திரத்தையும் கிளப்பியுள்ளது.

இச்சம்பவம் மருத்துவர்களின் மாநாட்டைக் குழப்ப திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா அல்லது போரில் தோற்கடிக்கப்பட்ட மக்களை, அவர்களின் வெற்றி பெற்றவர்கள் எப்போதும் எப்படியும் கையாளலாம் என்ற அநாகரிக மேலதிக்க சிந்தனையில் பிறப்பெடுத்ததா என்ற கேள்வி எழுகிறது.

### வன்முறைசார் ஒழுக்க மீறல்

யாழ்ப்பாணத்தில் தங்களைக் குடியேற்றியேயாக வேண்டும் என்ற பிடிவாதத்துடன் யாழ். புகையிரத நிலையத்தில் ஒரு தொகை சிங்கள மக்கள் வந்து தங்கியிருப்பதும் சிலர் அத்துமீறி நூல் நிலைய நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் உள் நுழைவதும் அடிப்படையில் ஏதோவொரு இன மேலாதிக்கப் பின்னணியைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன என்ற சந்தேகம் எமது மக்களிடம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒவ்வொரு நிர்வாகம் உண்டு. அந்த நிர்வாகம் சில சட்டதிட்ட ஒழுங்குகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. அந்த ஒழுங்குகளை மீறி பெரும் கும்பலாக வருபவர்கள் செயற்பாட்டால் அதுவும் ஒரு வன் முறை சார் ஒழுக்க மீறல்தான்.

ஒரு நூல்நிலையம் என்பது அறிவுப் பசி தீர்க்கும் ஆலயம். அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் உலக விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொண்டவர்கள், கலைஞர்கள், இலக்கிய வாதிகள் என மனித சமூகத்தின் பெரும் பகுதியினருக்கு அறிவுப் பசி தணித்து ஆதரிக்கும் மையம்.

இங்கு எப்போதும் ஆழ்ந்த அமைதியும், புனிதமும் நிலவ வேண்டும். இங்கு எழும் ஒரு சிறு சலனம் கூட கற்பவர் கவனத்தைக் குழப்பியடித்துவிட முடியும். இப்படியான ஓர் இடத்தில் ஒரே நேரத்தில் 30 பஸ்களில் வந்த ஏறக்குறைய 1800 பேர் பார்வையாளர்களாக உள்ளே புகுந்தால் அமைதி பாதுகாக்கப்படுமா? ஒரு நூல்நிலையத்தின் இயல்பு நிலைமை பேணப்பட முடியுமா?

நூல்நிலையம் என்பது ஒரு கண்காட்சிக் கூடமோ மிருகக் காட்சிச் சாலையோ அல்லது ஒரு களியாட்ட மண்டபமோ அல்ல. அது அறிவுப் புனல் சுரக்கும் ஓர் அமைதிப் பூங்கா.

அப்படி உயர் புனிதம் கொண்ட யாழ்.நூலகத்துக்குள் தான் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப் பட்டது. அனுமதி இல்லை என்ற வாசகம் எழுதிய அறிவு தென்னிலங்கையிலிருந்து வந்தவர்களால் கிழித்து எறியப்பட்டது. அத்துமீறி உட்புகுந்த அவர்கள் புத்தகங்களை அள்ளி வீசினர்.

இத்தனை சம்பவங்களும் பொலிஸார், இராணுவத்தினர் முன்னிலையிலேயே இடம்பெற்றன. அவர்கள் இச்சம்பவங்களைத் தடுத்துநிறுத்த முயலவுமில்லை; எவரையும் கைது செய்யவுமில்லை. உயர் கல்வி அமைச்சுக்குள் புகுந்து சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படமுடியுமானால் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்து உபவேந்தரைத் தாக்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட முடியுமானால் ஓர் அறிவியல் பீடமான நூல்நிலையத்தில் அத்துமீறி நுழைந்து சேதங்களை விளைவித்தவர்கள் ஏன் தடுக்கப்படவில்லை? ஏன் கைது செய்யப்படவில்லை?

அப்படியானால் வடக்குக்கு ஒரு நீதி தெற்குக்கு ஒரு நீதி என்பது தான் இலங்கை நாட்டின் ஜனநாயகமா? 1958, 1977, 1983 ஆகிய காலப் பகுதிகளில் பொலிஸார், ஆயுதப் படையினர் முன்னிலையில் எமது மக்கள் வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் அகதிகளாக விரட்டப்படும் நிலை ஏற்படுத்தப் படும் என்பதன் முன்னறிவித்தலா? அல்லது மீண்டும் 1981 ஆம் ஆண்டு நிகழ்ந்தது போல நூலகம் எரிக்கப்படும் என்பதற் கான மிரட்டலா?

அது மட்டுமா ஈழத்துக் காந்தி என தமிழ்மக்களால் மதிக்கப்படும் தந்தை செல்வா நினைவாலய வளாகத்துக்குள் புகுந்து கொண்ட காடையர்கள் வாழைகளை வெட்டி அழித்துள்ளனர். தென்னைகளைச் சேதப்படுத்தியுள்ளனர். அருகில் இராணுவ காவல் நிலையம் இருந்து போதும் அது தடுக்கப்படவு மில்லை; எவரும் கைதுசெய்யப் படவுமில்லை.

அதேவேளையில் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சர். யாழ். மாநகர முதல்வர் அவரது கட்சியைச் சேர்ந்தவர். இவர்கள் இருவருமே தமிழ்மக்களின் சார்பில் அதிகாரத்தில் வீற்றிருப்பவர்கள்.

யாழ்.மாநகரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள நூலகத்திலும் யாழ்.மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத் தூபி அமைந்த வளாகத்திலும் இத்தகைய அத்துமீறல்கள் இடம்பெற்றபோது தடுத்த நிறுத்த இவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை? அப்படி நடந்து கொண்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இணக்க அரசியல் என்றால் எம்மீது இழைக்கப்படும் எல்லா துன்பங்களையும் அவமதிப்புகளையும் வாய்மூடி ஏற்றுக்கொள்வதா?

ஜனாதிபதி அவர்கள் ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பு வது பற்றி அடிக்கடி குறிப்பிடுவார். இத்தகைய சம்பவங்கள் எத்தகைய ஒழுக்கம் சார்ந்தது என்பதை நாம் அறிய விரும்புகிறோம். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் ஆயுதப் படையினரினதும் முன்னிலையிலேயே இப்படிச் சம்பவங்கள் இடம்பெறும் போது நாம் எங்குபோய் முறையிட முடியும்?

### எமது துயரங்கள் அவர்களுக்குப் பார்வைப்பொருள்கள்

எமது இடம்பெயர் வாழ்வும் கூடார மீள்குடியேற்றமும் வறுமையும் பசியும் துன்பமும் உறவுகளை இழந்த துயரங்களும் தென்னிலங்கை மக்களின் பார்வைப் பொருள்களாகி விட்டன என்பது உண்மைதான். அதே அடிப்படையில் எம்மால் புனிதமான ஆலயமாகப் போற்றப் படும் எங்கள் நூல் நிலையமும் அவமதிக்கப்படுவதை எம்மால் எப்படிப் பொறுக்கமுடியும்?

எப்படியிருந்தபோதிலும் இனங்களுக்கிடையேயான நல்லுறவைச் சிதைத்து கசப்புணர்வை வளர்க்கும் இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் நிற்பவர்களை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவேண்டும். அத்துடன் மருத்துவர்களின் மாநாடு இடம்பெறும் போதே



பார்வையாளர்களை உள்ளே அனுமதித்து எமது நூல்நிலையத்தின் தனித்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் நிர்வாகத்தின் ஒழுங்கு முறைகளுக்குள் தலையிடும் வகையிலும் நடந்து கொண்ட யாழ்.மாநகர முதல்வரின் செயலும் வன்மையாகக் கண்டிக் கத்தக்கது.

இந்த அசம்பாவிதம் தொடர்பாக யாழ்.நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு நடந்தது ஒரு சிறு குழப்பமேயெனவும் பத்திரிகைகளே அதை ஊதிப் பெருப்பிக்கின்றன எனவும் அங்கு நடந்தது உண்மையாக உணரப்படுமானால் அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற வகையில்தான் அதற்காக மன்னிப்புக் கேட்கிறார் எனவும் கூறியிருக்கிறார்.

### அமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா?

அவர் பத்திரிகைகளைக் குற்றம் சாட்டுவதன் மூலமும் உண்மை யாக உணரப்படுமானால் என்ற வார்த்தைகளைப் பாவிப்பதன் மூலமும் இச்சம்பவத்தைப் பூசி மெழுக முயற்சிக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

அதேவேளையில் அரச சார்பில் அவர் மன்னிப்புக் கேட்பதன் மூலமும் இந்த அத்து மீறலுக்கும் அரசுக்கும் தொடர்பு இருப் பதாக ஒப்புக் கொள்கிறாரா எனவும் கேட்கத் தோன்றுகிறது. மேலும் அவர் மன்னிப்புக் கேட்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களை சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பு விக்க அவர் முயற்சி எடுக்கிறாரா என்ற சந்தேக மும் வருகிறது.

தமிழ் மக்கள் தங்கள் அறிவாலயத்தின் மீது நடத்தப்பட்ட ஒரு பெரும் அவமதிப்பாகவும் பெரும்பான்மை இனத்தவர் தமிழ் மக்கள் மீது எவ்வித அநீதி யையும் இழைக்க முடியும் எனப் பிரகடனம் செய்யும் ஒரு நடவடிக் கையாகவுமே பொது நூலகம் மீதான தாக்குதலைப் பார்க்கின்றனர்.

மன்னிப்புக் கேட்பதன் மூலம் இதனைப் பூசி மெழுக முயற்சிக்கக் கூடாது. அதை தமிழ் மக்கள் ஏற்கவும் போவதில்லை - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் நாளை போராட்டம்

சிட்னி, நவ.02

எதிர்வரும் நவம்பர் 03ம் திகதி 12 மணிக்கு அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியின் போது, நடைபெறும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் பங்கெடுக்குமாறு தமிழர் உரிமைக்கான அவுஸ்திரேலியர்கள் எனும் அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த புறக்கணிப்பு போராட்டத்திற்கு அனைவரும் சமூகம் கொடுக்குமாறு தமிழர் உரிமைக்கான அவுஸ்திரேலியர்கள் சார்பில் பொல்ட்டன் அவர்கள் ஊடக அறிக்கை மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப் போராட்டத்திற்கு பல இடதுசாரி அமைப்புக்களும், தமிழ் அமைப்புக்களும் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

இதேபோன்ற ஓர் பகிஷ்கரிப்பு போராட்டம் சிட்னியிலும் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி ''Voice of Tamils'' அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரண்டு போராட்ட நிகழ்வுகளிற்கும் மெல்போர்ன், சிட்னி வாழ் தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு ஏற்பாட்டாளர்களினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரசில் அங்கம் வகிக்காத

## நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் விரைவில் புதியதொரு கூட்டணி

கொழும்பு, நவ.2

சிறிலங்கா அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் விரைவில் புதியதொரு கூட்டணியை அமைக்கவுள்ளன.

இது தொடர்பாக தமிழத் தேசிய விடுதலைக் கூட்டணியின் செயலாளர் சிவாஜிலிங்கம் கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்றுக்கு தகவல் வெளியிடுகை யில்;

புதிய அரசியல் கூட்டணி கூட்டுத் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண்பதற்கான வேலைத் திட்டத்தை மேற்கொள்ளும்.

ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா பிரிவு, சித்தார்த்தன் தலைமையிலான புளொட், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளை உள்ளடக்கியதாக இந்தக் கூட்டணி செயற்படவுள்ளது.

கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் இதுபற்றி எம்முடன் பேசியுள்ளது.

இந்தக் கூட்டணிக்கான [illegible] குறித்து நாம் [illegible] செய்யவுள்ளோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா வருகையை எதிர்க்கலாமா? இடதுசாரிகளிடம் வைகோ கேள்வி



சென்னை, நவ. 02

ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்து, அமெரிக்கஜனாதிபதியாகியுள்ள ஒபாமா இந்தியா வருவதை இடதுசாரிக் கட்சிகள் எதிர்க்கலாமா - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பல நூறு ஆண்டுகளாக கறுப்பு இனத்தைச் சேர்ந்த மக்கள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டனர். அமெரிக்காவிலும், உலகின் வேறு சில பகுதிகளிலும் கொடூரமாக வதைக்கப்பட்டனர்.

அத்தகைய ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியா வரும்போது, அவரை வாழ்த்தி வரவேற்க இந்திய மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் கொள்கைகள் இந்திய மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்பதால் ஒபாமா வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக இடதுசாரிக் கட்சிகள் கூறியுள்ளன.

உலகம் போற்றும் புரட்சியாளரான கியூபாவின் பிடல் காஸ்ட்ரோ, ஒபாமாவின் நேர்மையைப் பாராட்டியுள்ளார். அமெரிக்காவைக் கடுமையாக எதிர்க்கும் வெனிசூலா ஜனாதிபதி சாவேஸ் கூட ஒபாமாவைக் கடுமையாக விமர்சனம் செய்வதில்லை.

எனினும், இந்திய இடதுசாரிக் கட்சிகள் மட்டும் ஒபாமா வருகையை எதிர்க்கிறார்கள்.

ஆப்கானிஸ்தானில் இருந்த அரசுகளை கவிழ்த்துவிட்டு, ஒரு பொம்மை அரசை உருவாக்கி, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினரைக் கொண்டு போய் நிறுத்தியதற்கு சோவியத் ரஷ்யாவை இடதுசாரிகள் கண்டித்தது உண்டா?

இந்தியாவின் ஒரு பகுதியான அருணாசலப் பிரதேசத்தை, தங்கள் நாட்டுக்குச் சொந்தமானது எனக்கூறும் சீன அரசைக் கண்டித்து போராட்டம் நடத்தியது உண்டா?

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள இந்தியப் பகுதியை, பாகிஸ்தானுக்குச் சொந்தமானது என்று கூறி வரும் சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க, சீனப் பிரதமர் வென் ஜியாபோ இந்தியா வரும்போது அவரை எதிர்த்துப் போராட இடதுசாரிகள் முன்வருவார்களா?

கறுப்பு இனத்தில் பிறந்து அமெரிக்க ஜனாதிபதியாகி உள்ள ஒபாமாவை இந்திய நாட்டின் மக்கள், கட்சி, மத எல்லைகளைக் கடந்து வரவேற்க வேண்டும். எனவே, இடதுசாரிக் கட்சிகள் தங்கள் போராட்ட அறிவிப்பைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காஷ்மீர், பாரமுல்லாவில் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் பங்கேற்க வந்த உள்துறை அமைச்சர் சிதம்பரத்துக்கு முதல்வர் ஒமர் அப்துல்லா வரவேற்பு அளித்தார்.

## ரஜனியின் எந்திரன் படப் பாணியில்

# உணர்ச்சி அறிவாற்றலுடன் கூடிய ரோபோ: டேராடூன் பாடசாலை மாணவர் வடிவமைப்பு

டேராடூன், நவ. 02

மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வகையில் உணர்ச்சி அறிவாற்றலுடன் செயற்படக் கூடிய ரோபோ ஒன்றை டேராடூன் பாடசாலை மாணவர் வடிவமைத்துள்ளார்.

இதற்கு ஐ-டாக் என்று பெயரிடப்பட்டுள்ளது. இது மனிதர்களின் கோபம், மகிழ்ச்சி, துக்கம் போன்ற உணர்வுகளைப் புரிந்து கொள்ளும்.

அமெரிக்காவில் உள்ள மாசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பிரத்தியேக புரோகிராம்களை பயன்படுத்தி இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ ஆங்கிலத்தில் பேசும். மனிதர்களைப் போன்றே தொடர்புத் திறனும் இதற்கு உண்டு. கிட்டத்தட்ட எந்திரன் பட ரோபோவைப் போன்ற தன்மை கொண்ட இந்த ரோபோவை டேராடூனில் உள்ள டூன் பாடசாலையில் 12 ஆம் வகுப்பு படிக்கும் அர்ஜுன் என்ற மாணவர் வடிவமைத்துள்ளார்.

பாடசாலை நிறுவுநர் தின விழாவில் இந்த ரோபோவை காட்சிக்கு வைத்த அர்ஜுன் இது குறித்து கூறியவை வருமாறு -

இந்த ரோபோவின் உயரம் 2.5 அடி. சில சிறப்பு புரோகிராம்களைப் பயன்படுத்தி மனிதர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் வகையில் இந்த ரோபோவை மாற்ற முடியும்.

பலதரப்பட்ட குரல்களையும் இந்த ரோபோ பகுத்து உணரும் தன்மை கொண்டது. புதிய மனிதர்கள் யாரையாவது சந்தித்தால் அவர்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் சேமிக்க தனித் தொகுதி ஒன்றை இது உருவாக்கி வைத்திருக்கும். - இப்படி அவர் கூறினார்.

இந்த ரோபோவை வடிவமைப்பதில் அதே பாடசாலையில் 10 ஆம் வகுப்பு படிக்கும் சூக்ரித் மாலிக் என்ற மாணவர் அர்ஜுனுக்கு உதவியாக இருந்தார்.

# ரஹ்மானுக்கு இந்திரா காந்தி விருது பிரதமர் மன்மோகன்சிங் வழங்கினார்

புதுடில்லி, நவ. 02

தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்டதற்காக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு 'இந்திரா காந்தி தேசிய விருது' வழங்கப்பட்டது. இதைப் பிரதமர் மன்மோகன்சிங் வழங்கினார்.



தேசிய ஒருமைப்பாட்டுக்காக சிறந்த சேவை செய்கின்றவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி பெயரில் தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான தேசிய விருதுக்கு, நாராயணபுரத்தில் செயற்படும் இராமகிருஷ்ணா மிஷன் ஆச்சிரமும், ஒஸ்கார் விருது நாயகனான பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு விருது வழங்கும் விழா, இந்திரா காந்தியின் 25 ஆவது நினைவு நாளான நேற்றுமுன்தினம் டில்லியில் உள்ள தீன் மூர்த்தி பவனில் நடந்தது.

இராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமத்துக்கு, தேசிய முற்போக்குக் கூட்டணித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான சோனியா காந்தி விருது வழங்கினார். ஆசிரம தலைவர் சுவாமி வியாப்தானந்தா இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கு பிரதமர் மன்மோகன்சிங் விருது வழங்கினார்.

விருது வழங்குவதற்கு முன்னதாக சோனியா காந்தியும், மன்மோகன்சிங்கும் இருவரையும் வாழ்த்திப் பேசினார்கள். அப்போது அவர்கள் கூறியவை வருமாறு -

இந்திய மக்கள் அனைவரும் பிரிவினைவாதச் சக்திகளை அடையாளம் கண்டு அந்தச் சக்திகளைஎதிர்த்துப்போராடவேண்டும். பிரிவினைவாதி களுக்குச் சரியானபதிலடிகொடுக்கவேண்டும்.

மதசார்பற்ற நாட்டை உருவாக்கவும், தேசத்தின் வலிமை மற்றும் ஒருமைப்பாட்டைக்காக்கவும் ஒவ்வொருவரும் சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும், ஒற்றுமையை பேணிக்காக்கவும் பல வழிகள் உள்ளன. ஏ.ஆர்.ரஹ்மான் தனது இசையாலும், இராமகிருஷ்ணா மிஷன் ஆச்சிரமம் பின் தங்கிய மற்றும் ஏழைகளுக்கு கல்வி அளிப்பதன் மூலமும் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அவர்களது பணி பாராட்டுக்குரியது.

- இப்படி அவர்கள் பேசினர்.

# ரோபோ தாக்கி இளம்பெண் பலி!

ஸ்ரீபெரும்புதூர், நவ. 02

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தனியார் செல்போன் தொழிற்சாலையில் ரோபோ தாக்கி இளம்பெண் ஒருவர் பலியானார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த டி.புதூரைச் சேர்ந்தவர் அம்பிகா (வயது - 22). இவர் ஸ்ரீபெரும்புதூர் தனியார் செல்போன் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார்.

நேற்றுமுன்தினம் தொழிற்சாலையில் உள்ள ரோபோ பிரிவில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக ரோபோ ஒன்று இளம் பெண் அம்பிகாவைத் தாக்கியது.

இதில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவரைச் சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பயனின்றி இறந்தார்.

இச் சம்பவம் குறித்து ஸ்ரீபெரும்புதூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவையில் இரு குழந்தைகளை கடத்தி கொலை செய்த பாதகன் கைது!

கோவை, நவ. 02

கோவையில் இரண்டு குழந்தைகளை தண்ணீரில் தள்ளி விட்டுக் கொடூரமாகக் கொலை செய்த பாதகனை உடனடியாகத் தூக்கில் போட வேண்டும் - என்று நடிகர் விஜய் ஆவேசமாகக் கூறியுள்ளார்.

கோவையில் இரண்டு அப்பாவிக் குழந்தைகளைக் கடத்தி அநியாயமாகத் தண்ணீரில் தள்ளி விட்டுக் கொலை செய்த பாதகன் மோகன் ராஜை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தநிலையில் இச்சம்பவம் குறித்து வேதனையும், கோபமும் வெளியிட்டுள்ளார் நடிகர் விஜய்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கோவையில் பாடசாலைக்குச் சென்ற அக்கா - தம்பியான முஸ்கின், ரித்திக் என்ற இரு குழந்தைகளை பணத்துக்காகக் கடத்தி கொலை செய்த சம்பவத்தை



அறிந்ததும் என் இதயம் உறைந்து போனது.

துள்ளி திரிந்த இரு இளம் தளிர்களை ஈவு, இரக்கமில்லாமல் கொலை செய்ய எப்படித்தான் மனம் வந்ததோ தெரியவில்லை. பெற்ற குழந்தைகள் இவ்வளவு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அவர்களது பெற்றோர் மனதை என்ன பாடுபடுத்தியிருக்கும் என நினைத்துப் பார்க்கவே அச்சமாக உள்ளது.

பணத்துக்காக குழந்தைகளைக் கடத்தும் கொடூரக் கும்பலை இனியும் விட்டு வைக்கக் கூடாது. இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன - என்றுள்ளது.

**பெண் விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் ஆடை நிறுவனத்துக்கு விற்பனையாளர் தேவை. மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0772850753




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனிதநேய மன்னிப்பில் பாரபட்சம் வேண்டாமே!

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. அதானால் அரசுக்கு கைதிகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. அதன் பொருட்டு கைதிகளில் ஆகக்குறைந்தது 800 பேரையாவது பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது அல்லது அவர்களின் சிறைவாச காலத்தைக் குறைப்பது என்ற முடிவை புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் புனருத்தாரண அமைச்சு மேற்கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஹெக்டர் யாப்பாவின் தலைமையில் மூவரடங்கிய விசாரணைக் குழு ஒன்று அமைச்சர் டியூ குணசேகராவால் நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சிறைச்சாலைகள் கைதிகளால் நிரம்பி வழிவதற்கு மூன்று காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1) 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர், குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை.

2) மரண தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு, ஜனாதிபதியின் பொதுமன்னிப்புச் சலுகையால் ஆயுள் காலத் தண்டனையாகவும், ஆயுள்காலச் சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு இருபது வருட கால சிறைவாசமாகவும் குறைக்கப்பட்டன.

3) ஆயுள்காலச் சிறைத்தண்டனைக் கைதிகள் மற்றும் 20வருட கால சிறைத்தண்டனை பெற்றவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளுக்கு அனுப் பப்படுவதில்லை.

மேற்கூறிய மூன்று வகைக் கைதிகள் சிறைவாசம் அனுபவிக்க விதிக்கப்பட்ட தண்டனைகளை ஆராய்ந்து அவர்களை விடுதலை செய்வதற்கான வழிமுறைகளை விசாரணைக் குழு கண்டறியும்.

அமைச்சர் டியூ குணசேகராவின் இந்த நடவடிக்கை மனிதாபிமான ரீதியிலும் அரசின் நிர்வாக நடவடிக்கை ரீதியிலும் வரவேற்கப்படக் கூடியதாகும். தவறு செய்யாத தூயவான்கள் உலகில், எந்த நாட்டிலும் எவரும் இருக்கமுடியாது. பரிசுத்தவான்கள், நல்லோர் என்ற கருதப்படுபவர்களும் ஏதோ பல மறைமுக வழிகளில் குற்றவாளிகளாக இருப்பர் என்பது உலக 'நியதி' யாகி விட்டது.

அரசாங்கத்தின் இந்தக் காருண்யம், மனிதாபிமான நடவடிக்கை, நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீதும் விழவேண்டும்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் - அதாவது 27 வருடங்களுக்கு முன்பிருந்தே, கைது செய்யப்பட்டவர்களும் இவர்களில் அடங்குவர். சுமார் 800 தமிழ் அரசியல் கைதிகளில் சிலருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளன. மிகப் பலர் மீது நீதிமன்றத்தில் எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தாது சந்தேகத்தின் பேரில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் பெரும் எண்ணிக்கையினர் மகஸின், வெலிக்கடை, அனுராதபுரம் போகம்பரை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கணிசமான தமிழ் இளைஞர்கள் பூஸா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு சிறைச்சாலைகளிலும் கிடந்து மாய்கின்றனர். இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விட, வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய் யப்பட்ட சுமார் 12ஆயிரம் பேரில் 7 ஆயிரம் பேர் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்ட 5ஆயிரம் பேர்களே கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

8,000 + 8,000=16,000 இளைஞர்கள் விடயத்திலும் காருண்யம் காட்ட வேண்டும். மனிதாபிமானம் சிங்களக் கைதிகளுக்கு மட்டுமன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் மீதும் அரசுக்கு பிறக்க வேண்டும்.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட்டால் அவர்கள் மீண்டும் ஆயுதம் தூக்குவார்கள், அரசுக்கு எதிராகப் போராடுவார்கள் என்று அதிகாரிகள் கற்பிதம் செய்வதும் காரணம் காட்டுவதும் அதன் பொருட்டு 8 ஆயிரம் வரையான தமிழர்களை மற்றக் கண்ணால் பார்ப்பதும் வேதனைக்குரியதாகும்.

பல ஆண்டு காலமாக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 800 தமிழ் அரசியல்கைதிகள் மற்றும் வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 7 ஆயிரம் தமிழ்க்கைதிகள் விடயத்திலும் அரசாங்கம் காருண்யம் காட்ட வேண்டும். சிங்களக் கைதிகளுக்கு மட்டுமன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் மீதும் அரசுக்கு மனிதநேயம் பிறக்கவேண்டும்.

நீதியும் சட்டமும் நாட்டின் சகல பிரசைகளுக்கும் பொதுவாக இருப்பது போன்று மனித நேயமும் மனிதாபிமானமும் எல்லோர் மீதும் பொழியப்பட வேண்டும். அதுவே மனுநீதியுமாகும்.

# முதல்முறையாக 'இளையோர் நாடாளுமன்றம்' அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் தேர்தல்

## எதிர்வரும் 27 இல் நடக்கும்

கொழும்பு,நவ.2

முதல்முறையாக இளையோர் நாடாளுமன்றம் ஒன்று உருவாக்கப் படவிருக்கிறது. 332 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்த இளையோர் நாடாளுமன்றத்துக்கு பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சபைத்தலைவர் போன்ற பதவிகளுக்கு தெரிவுகளும் இடம்பெறவிருக்கின்றன.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பிரதேச செயலர் அலுவலகங்களிலும் வாக்களிப்பு இடம்பெறும்.

தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்கும் பணி நேற்று ஆரம்பமானது. இப்பணி எதிர்வரும் 10 ஆம் திகதி மதியம் 12 மணிவரை அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் இடம்பெறும்.

மேலும் 13 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் தொடர்பான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியும் என்பதோடு இத்தேர்தலில் நான்கு லட்சம் இளைய சமுதாயத்தினர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இத்தேர்தல் தொடர்பான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்கு இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரையிலும் கால அவகாசம் ஒதுக்கிவிடப்பட்டுள்ளதாக தேசிய இளையோர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி யன்று மஹரகமவிலுள்ள இளையோர் மையத்தில் அமையும். விசேட மாதிரி நாடாளுமன்றத்தில்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும்.

அன்றைய தினத்தில் மேற்படி இளையோர் நாடாளுமன்றத்தில் அரச தரப்பு எதிர்த்தரப்பு பிரதமர் உட்பட 13 பேர்களைக் கொண்ட அமைச்சரவையொன்று அமையவுள்ளது.

மேலும் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சபைத் தலைவர் என்ற பதவிகளுக்கான தெரிவுகளும் அன்றைய தினத்தில் இடம் பெறும்.

இந்த இளையோர் நாடாளுமன்றமானது ஒவ்வொரு மாதத்திலும் வரும் மூன்றாவது வெள்ளிக்கிழமையிலும் அதை அடுத்து வரும் சனிக்கிழமையிலும் கூடவுள்ளதோடு முதலாவது நாடாளுமன்றக் கூட்டம் டிசம்பர் மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் மஹரகம இளையோர் மையத்தில் கூடவுள்ளது. (ஐ-22)

# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு தொடர்ந்தும் சீனா உதவி வழங்கும்

## அந்நாட்டுப் பிரதமர் ஜனாதிபதிக்கு உறுதி

கொழும்பு,நவ.2

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு இதுவரை தாம் அளித்து வந்த ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படுமென சீனப் பிரதமர் வென் ஜீயா பாவோ இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உறுதியளித்துள்ளார்.

எக்ஸ்போ கண்காட்சிக்கு விசேட விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீன அரசால் அழைக்கப்பட்டிருந்தார். அதனையடுத்து இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை ஜனாதிபதி மேற்கொண்டிருந்தபோதே சீனப் பிரதமர் மேற்கூறிய உறுதி மொழியை அளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரு தலைவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையின் தற்போது நடைபெற்று வரும் துறைமுக விமான, மின் சாரத் துறைகளின் அபிவிருத்தியில் சீனா ஏற்கனவே பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. இலங்கையில் தற்போது மிகவும் அமைதியான சூழ்நிலை உருவாகியுள்ளதால் அபிவிருத்திப் பணிகளை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்ல முடியுமென இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

விசேடமாக சீன அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பிரமாண்டமான அம்பாந்தோட்டை துறைமுகம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. (ஐ-5)

# நீண்டகாலம் சிறைகளில் உள்ள கைதிகளின் தண்டனைக் குறைப்புக் குறித்து ஆராயக் குழு

கொழும்பு,நவ.2

தற்போது தூக்குத் தண்டனை ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கபட்டுள்ள 800 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க அல்லது தண்டனைக் காலத்தைக் குறைக்க சிறைச்சாலைகள் புனருத்தாரண அல்லது புனர்நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மூவரடங்கிய குழுவொன்று அமைச்சர் டியூ குணசேகரவின் ஆலோசனைக்கமைய நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் ஏ.திசநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஹெக்டர் எஸ்.யாப்பாவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் சிறைச்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் பீ.டபிள்யூ கொடிப்பிலி, சிறைச்சாலைகள் ஆணையாளர் (சேமநலன்) எம்.டீ.ரத்னாயக ஆகியோர் அங்கம் வகிப்பர்.

1976ஆம் ஆண்டுக்குப் பின்பு மரண தண்டனை நிறைவேற்றப்படாத காரணத்தால் வெலிக்கடை மற்றும் போகம்பரை சிறைச்சாலைகள் இத் தண்டனைகள் விதிக்கப்பட்ட கைதிகளால் நிரம்பி வழிகின்றன.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் தூக்குத்தண்டனை பெற்ற கைதிகளின் மரண தண்டனை ஆயுட் காலத் தண்டனையாகவும் ஆயுள் தண்டனைகள் 20 வருட சிறைத் தண்டனைகளாகவும் மாற்றக் கூடிய நடைமுறை 2002ஆம் ஆண்டின் பின் பின்பற்றப்படாததும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதற்கான இன்னுமொரு காரணமாகும் என அமைச்சுச் செயலாளர் திசநாயக்க சுட்டிக் காட்டினார்.

அத்துடன் இத்தகைய கைதிகள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படும் முறையும் 2002 இன் பின் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்விடயம் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழு மூன்று வார காலத்துக்குள் தனது அறிக்கையை அமைச்சருக்குக் கையளிக்க வேண்டும்.

(ஐ-5)

| நாளை | |
|---|---|
| ஐப்பசி 17 | 03.11.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : துவாதசி |
| | பி.ப. 05.21 வரை |
| நட்சத்திரம் | : உத்தரம் |
| | பி.ப. 04.14 வரை |
| சுபநேரம் | : 04.34 - 06.04 வரை |
| ராகுகாலம் | : 12.04 - 01.34 வரை |

# பெரிய வெங்காயம், உ.கிழங்கின் இறக்குமதித் தீர்வை குறைப்பு

கொழும்பு, நவ.2

பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றுக்கான இறக்குமதித் தீர்வை கடந்த வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒரு கிலோவுக்கு 30 ரூபாவாக இருந்த உருளைக்கிழங் கின் தீர்வை 10 ரூபா வரையும், ஒரு கிலோவுக்கு 25 ரூபாவாக இருந்த பெரிய வெங்காயத்தின் தீர்வை 10 ரூபா வரையும் குறைக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சந்தையில் உருளைக்கிழங்கினதும், பெரிய வெங்காயத்தினதும் விலைகள் பெருமளவு அதிகரித்திருப்பதாலும் புறக்கோட்டை மொத்த இறக்குமதியாளர்களின் வேண்டுகோளுக்கமையவும் இந்த தீர்வைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இறக்குமதித் தீர்வை அதிகரித்திருந்ததால் அண்மைக் காலங்களில் இவ்விரு பொருள்களினதும் இறக்குமதி பெருமளவு குறைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்வை வரிக்குறைப்பினால் மீண்டும் இறக்குமதிகளில் ஈடுபடப் போவதாகவும் அதன் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் அவற்றை வழங்க முடியுமென்றும் புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ - 5)

# ஸ்ரீ வராஹி சனசமூக நிலைய வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.2

கொக்குவில் மேற்கு ஸ்ரீவராஹி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவும் நூல்வெளியீடும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

சனசமூக நிலையத் தலைவர் இ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீக முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையை வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வர்தலிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஸ்ரீ வராஹி அம்பாள் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள், ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய பங்குத் தந்தை யோ. பஸ்ரியன் சத்தியயோதிநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

306 BI மாவட்ட சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டத் தலைவர் லயன் என்.ரி.எஸ்.சுபநாதன் மதிப்பீட்டுரைவழங்குவதோடு முதற் பிரதியை எம்.சி. முஹம்மது அமீன் பெற்றுக் கொள்வார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் இன் "A" தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

An 'A' Grade Hotel approved by the Ceylon Tourist Board

வெளிநாட்டினர் உள்நாட்டினர் ஆகியோருக்கு ஏற்ற அனைத்து வசதிகளுடன் யாழ். நகரில் உல்லாசப்பயணிகளுக்கு 35 குளிரூட்டப்பட்ட அறைகளுண்டு. இவற்றுள் 14 அறைகள் அதிவிசேட அறைகள்,இதில் மூவர் தங்கலாம்.

சுவையான மசாலா தோசை வெள்ளிக்கிழமைகளில் கிடைக்கும். சனி, ஞாயிறு மாலை வேளையில் கொத்து றொட்டி கிடைக்கும்.சலரோகமுள்ளவர்களுக்கு குரக்கன் பிட்டு அவித்துத் தரப்படும். இவையாவும் ஓடர் பண்ணியவர்களுக்கு மட்டும் தான் செய்து தரப்படும். ஆகையால் போனிலோ நேரிலோ ஓடர் செய்துவிட்டு வரவும். இவைதவிர சிக்கன் புரியாணி,சிக்கின் பிறைட் றைஸ் மற்றும் கடலை உணவுகள் ஓடர்களுக்கும் செய்து தரப்படும். Coffee Shop Restaurant எந்த நேரமும் திறந்திருக்கும். எமது அன்பான வாடிக்கையாளர்கள் ஒரு முறை விஜயம் செய்து எமது சேவைகளின் தரத்தை அறியலாம்.

Pillaiyar Inn,
31, Manipay Rd,
Jaffna. (105429)

Tel: 021-222-2829
Fax:021-222-4449
Email:pillaiyar.in.@gmail.com


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்

(பிரபல புகையிலை வியாபாரி - மாத்தறை)


எங்கள் குல தெய்வத்தை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தேவாலய ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
0213206334

மனைவி, பிள்ளைகள்
(பிரான்ஸ்), மருமகள்,
பேரப்பிள்ளைகள்.
(105423)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
29 . 08 . 1950



உதிர்வு
02 . 11 . 1993

### திருமதி தருமலிங்கம் சிவமணி (பேபி)

அம்மா பதினேழு வருடம் ஆகிவிட்டும் ஆறவில்லை எம் கவலை
தீரவில்லை எம் துயரம்
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றோம்
எங்கள் கண்ணீர்ப் பூக்களை
உங்கள் காலடியில் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
இ.தர்மலிங்கம் (கணவர்)

**பிள்ளைகள்:-** த.சுதாகரன் (U.K), கு.சுகந்தினி (சுவிஸ்), சி.சுபீபா (சுவிஸ்), ப.சுபரேகா (சுவிஸ்), த.சரவணபவன் (சுவிஸ்)

**மருமக்கள்:-** குணசீலன் (சுவிஸ்), சிவநேசன் (சுவிஸ்) பகீரதன் (சுவிஸ்), சர்வலோகநாயகி (U.K)

**பேரப்பிள்ளைகள்:-**
சி.ரொஜினி திசானி (சுவிஸ்),
கு.அர்ஸ்ருதா, கு.ஆருஷன் (சுவிஸ்),
ப. சுவிஸ[illegible]
[illegible]

குடும்பத்தினர்.
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

## இந்து ஆலய பிணக்குகளை தீர்க்க மத்தியஸ்த சபை

கொழும்பு,நவ.02

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களில் ஏற்படும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்து தீர்ப்பதற்கு ஏதுவாக ஒரு மத்தியஸ்த சபையை அகில இலங்கை இந்து மாமன்றம் நிறுவியுள்ளது.

இம் மத்தியஸ்த சபை தொடர்பான கலந்துரையாடலும் செயலமர்வும் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு ஒய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி க. கனகஈஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர். சுரேந்திரன், மாமன்றப் பொதுச்செயலாளர் சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்து ஆலயங்களில் அல்லது இந்து நிறுவனங்களில் ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அப்பிணக்குகள் விடயத்தில் மத்தியஸ்தம் செய்து தீர்ப்பு வழங்கு மாறு அகில இலங்கை இந்து மாமன்ற மத்தியஸ்த சபைக்கு விண்ணப்பிக்க முடியும். அந்த விண்ணப்பங்கள் இந்து மாமன்றத்தின் மத்தியஸ்த சபையின் விதிகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு மத்தியஸ்தம் செய்யப்பட்டு வழங்கப்படும் தீர்ப்புக்கள் 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டப்படி நீதிமன்றங்களால் அமுல்படுத்த முடியும். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்புபவர்கள் இந்து மாமன்றத் தலைவருடன் 0112434990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (ற)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ. 2

நல்லூர் பிரதேச சபையினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தக கண்காட்சி நாளை புதன்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும். இக்கண்காட்சிக்கு "புக் லாப்" நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-15)


SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
இணைந்த கணிதம்
★ மீதித் தேற்றம் Sat, Sun 6 p.m.
★ சமநிலை Tues, Thurs 6 p.m.
G. கண்ணன் B.Sc.
Gr. 1 முதல் O/L வரை
ENG. MED. 6 TO 11
புலமைப்பரிசில் [5]
I.C.T. சிங்களம்
SPOKEN ENGLISH



### தொடர்பு கொள்ளவும்

கிளி/ கனகபுரம் ம.வி. இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2008, 2009, 2010 ஆண்டுகளில் சித்தியடைந்த மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும் நாளை (03.11.2010) புதன்கிழமை தொடர்புகொள்ளவும்.

கிளி/ கனகபுரம் ம.வி. பாடசாலை சமூகம்.

(105444)


### ஜனஜய லொத்தர் — உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 173 | சீட்டிழுப்புத் திகதி 31.10.2010

வெற்றி இலக்கங்கள்: 09 19 46 61 | சுப்பர் இலக்கம்: 08

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 7,504,940/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 92793 | ரூ. 20/= | ரூ. 1,855,860/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 8380 | ரூ. 40/= | ரூ. 335,200/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 7257 | ரூ. 100/= | ரூ. 725,700/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 660 | ரூ. 200/= | ரூ. 132,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 163 | ரூ. 1,500/= | ரூ. 244,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 12 | ரூ. 3,000/= | ரூ. 36,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 75,04,940/= | |
| மொத்த எண்ணிக்கை | 109266 | | ரூ. 4,329,260/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 7,787,180/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### இளையகுட்டி சிவகுரு

(இளைப்பாறிய தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தர்-சாவகச்சேரி)



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சிவகுரு 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி-தங்கமுத்து தம்பதியரின் மகனும் அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகுரு-கனகம்மா தம்பதியரின் மருமகனும் ஜெகசோதியின் அன்புக் கணவரும் புவனேந்திரன் (பாபு-கனடா), திருமதி கௌசலா சிறீ விக்னேஸ்வரன் (பபி-சுவிஸ்), திருமதி றோசலா ஹரிதரன், காலஞ்சென்ற கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி பாலலோகினி புவனேந்திரன் (கனடா), சிறிவிக்னேஸ்வரன் (சுவிஸ்), ஹரிதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் குழந்தைவேலு, காலஞ்சென்ற பொன்னுத்துரை, திருமதி கனகம்மா சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரரும் நிஷாந்தன், நிக்ஷன், பிரவீனா, ரஜீனா, ராகுல், ஹம்சாளினி, ஹரிணிஆகியோரது அன்புப் பேரனும் திருமதி பரமேஸ்வரி குழந்தைவேலு, சின்னத்தம்பி, திருமதி கமலேஸ்வரி பொன்னுத்துரை, திருமதி சிவபாக்கியம் பொன்னுத்துரை, சிவபாதசுந்தரம், திருமதி விஜயகுமாரி பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற திருமதி யோகம்மா பாலகிருஷ்ணன், திருமதி செல்லம்மா சிவலிங்கம், சிவசுப்பிரமணியம், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.11.2010) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி காத்தாளம் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
கு.சுந்தரலிங்கம் (பெறாமகன்).

### மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2312 | திகதி 31.10.2010

வெற்றி எழுத்து: W | வெற்றி எண்கள்: 0 2 9 1 5 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W 0 2 9 1 5 7 | ரூபா 14,536,243/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | 0 2 9 1 5 7 | ரூபா 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | 2 9 1 5 7 | ரூபா 100,000/= | பரிசுகள் 07 |
| 3ம் பரிசுகள் | 9 1 5 7 | ரூபா 10,000/= | பரிசுகள் 74 |
| 4ம் பரிசுகள் | 1 5 7 | ரூபா 1,000/= | பரிசுகள் 733 |
| 5ம் பரிசுகள் | 5 7 | ரூபா 100/= | பரிசுகள் 7305 |
| 6ம் பரிசுகள் | 7 | ரூபா 20/= | பரிசுகள் 72834 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | 0 2 9 1 5 | ரூபா 10,000/= | பரிசுகள் 06 |
| 8ம் பரிசுகள் | 0 2 9 1 | ரூபா 1,000/= | பரிசுகள் 75 |
| 9ம் பரிசுகள் | 0 2 9 | ரூபா 100/= | பரிசுகள் 731 |
| 10ம் பரிசுகள் | 0 2 | ரூபா 50/= | பரிசுகள் 7324 |
| 11ம் பரிசுகள் | W | ரூபா 20/= | பரிசுகள் 29204 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,780,655.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,518,560.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 243[illegible]

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோவிற்குடியிருப்பில் அமைத்த வீடுகள் பயனாளிகளுக்கு தளபதியால் கையளிப்பு

தென்மராட்சி, நவ.2

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினால் நலன்புரி நிலையங்களிலிருந்து மீளக்குடியேறிய வறிய மக்களுக்கு 4 வீடுகள் அமைத்து வழங்கும் திட்டத்தின் கீழ் கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பு பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர் ரவி டயஸ், சாயி சமித்தியின் பிரதிநிதியும் யாழ். மாவட்ட நீதிவானுமாகிய ஆர்.வசந்தசேனன், கொழும்பு இந்து மன்றத்தைச் சேர்ந்த திருச்செல்வம், 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் அனுர சுதசிங்க, 521, 522, 523, 524 ஆகிய படையணிகளின் கட்டளைத் தளபதிகள் வங்கியின் உயர் அதிகாரிகள், சாவகச்சேரி கத்தோலிக்கப் பங்குத் தந்தை அருட்பணி எம்.எல். தயாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் சாவகச்சேரி, கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய சந்தியிலிருந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவினரால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

புதிய வீட்டினை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர் ரவி டயஸ் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைத்ததுடன் வீட்டின் திறப்பினை பயனாளிகளிடம் கையளித்தனர்.

வீட்டுக்குரிய பொருள்களை கொழும்பு இந்து மன்றப் பிரதிநிதி திருச்செல்வம் பயனாளிகளிடம் கையளித்தார்.

புனர்வாழ்வு பெற்று சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய இளைஞர், யவதிகளுக்கு சாயி சமித்தியின் சார்பில் நீதிவான் வசந்தசேனன் தையல் இயந்திரங்களையும் வழங்கினார். (204-207-131)



யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் ஏற்பாட்டில் கொமர்ஷல் வங்கியினால் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர் ரவி டயஸ் வீட்டினை நாடாவெட்டித் திறந்து வைப்பதனையும், கொழும்பு இந்து மன்றத்தின் பிரதிநிதி திருச்செல்வத்தினால் பயனாளிகளுக்குப் பொருள்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (207-131)

# அச்சுவேலி பஸ் நிலையம் இருளில்; பயணிகளுக்கு பெரும் அசௌகரியம்

நாவற்குழி, நவ.2

அச்சுவேலி நகர பஸ்தரிப்பு நிலையத்தில் இரவு நேரத்தில் மின்வெளிச்சம் இன்மையால் பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இயல்பு நிலை மீளத் திரும்பியதனைத் தொடர்ந்து இரவு 9 மணிவரையும் பயணிகள் இந்த பஸ்தரிப்பு நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இரவில் வெளிச்ச வசதியின்மையால் பயணிகள் தமது பயணப் பைகளை வைத்து எடுப்பதில் சிரமப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இருட்டில் திருடர்கள் களவெடுத்தால் கூட காண முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

பஸ் நிலையப் பகுதியில் பொருத்தமான நடைமுறை மூலமாக மின்வெளிச்சத்தைப் பெற்றுத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

தென்பகுதிக்குச் செல்லும் பயணிகள் இந்த பஸ் நிலையத்தை இரவு வேளையில் கூடுதலாகப் பயன்படுத்தி வருவதால் தமது பயணப் பைகளின் பாதுகாப்புக் குறித்து கவலை தெரிவிக்கின்றனர். (204-121)




# பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்கள் ஆரம்பம்

வலி வடக்கு,நவ.2

பனை அபிவிருத்திச் சபை தனது உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

பனைஅபிவிருத்திச் சபைக்கான பதில் நெறியாளர் குழு நியமனம் செய்யப்பட்டு மூன்று மாத காலம் நிறைவுபெற்ற நிலையில் சபையினர் தமது செயற்பாடுகளில் ஒன்றாக 83 உற்பத்திக் குழுக்களை அமைத்து உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பனம் பொருள் உற்பத்திக் குழுக்களாக அமைக்கப்பட்ட 83 குழுக்களிலும் தற்போது 440 பணியாளர்கள் புதிய தொழில் முயற்சியாளர்களாக இணைக்கப்பட்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இந்த தொழிலாளர்களின் தொழில் தரத்தை உயர்த்துவதற்கும் மேலதிக பயிற்சிகளை வழங்குவதற்குமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் சபையின் தலைவர் பசுபதி ஜீவரெட்ணம் தெரிவித்துள்ளார்.(204-86)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,நவ.2

ஆங்கில மொழி கற்பித்தல் முறையியல்கள் மீதான ஒரு பார்வை என்னும் தலைப்பிலான ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆய்வுக் கட்டுரையினையும் சமர்ப்பிக்க உள்ளார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானகுமாரன் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்நிகழ்வுக்கு ஆங்கிலத்துறை சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-15)

# நாள்காட்டி நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.2

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையும், காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் நாள்காட்டி வெளியீட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். சுவாமிநாதன் கலந்துகொள்வார்.

'சைவப் பெருவள்ளலும் மகளிர் கல்வியும்' எனும் தலைப்பில் இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்திசிவஞானசுந்தரமும் 'சைவப் பெருவள்ளலும் மாணவர் கல்வியும்' என்னும் தலைப்பில் பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளைத் தலைவர் சட்டத்தரணி கனகநமநாதனும், சைவப் 'பெருவள்ளலும்சமயப் பணிகளும்' என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் உரையாற்ற உள்ளதுடன் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் நாள்காட்டியை வெளியிட்டு வைக்கவுள்ளார். (204-250)

## சேமக்காலைக்கு மின்விளக்குகள்

கொழும்புத்துறை,நவ.2

யாழ். புனித மரியாள் சேமக்காலை வளாகத்திற்கு யாழ். மாநகர சபையால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

நிரந்தரமாக ஒளிரும் விதத்தில் உள்பகுதிக்கு மின்கம்பங்கள் நிறுத்தி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். கத்தோலிக்கரின் பிரதான சேமக்காலையாக விளங்கும் இதற்கு யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கொர்னேலியசின் முயற்சியால் மின்விளக்குகள் பொருத்தபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (204-135)

# மாகாண ஆங்கில எழுத்துப்போட்டி; மானி.சென்ஆன்ஸ் மாணவி முதலிடம்



யாழ்ப்பாணம், நவ.2

கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட ஆங்கில எழுத்துப்போட்டியில் மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி அற்புதலிங்கம் தாரணி வட மாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப்போட்டியில் இவர் கலந்து கொள்ளவுள்ளார் (ஐ-9)

# கூட்டுறவாளர்களின் ஆற்றலை வலுப்படுத்த இரண்டாம் கட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.2

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபையுடன் இணைந்து மாவட்டத்திலுள்ள பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு ஆற்றலை வலுப்படுத்தும் இரண்டாம் கட்டப் பயிற்சி நெறியை நவம்பர் மாதம் நடுப்பகுதியில் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இதற்கான நிதியினை சுவீடன் கூட்டுறவு மையம் வழங்கவுள்ளது.

பயிற்சி நெறியின் இறுதியில் சான்றிதழ் வழங்கும் வைபத்தில் சுவீடன் கூட்டுறவு மையத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை- இத்திட்டத்தின் முதற்கட்டப் பயிற்சிகள் இம் மாதம் நடுப்பகுதியில் கொழும்பிலிருந்து வருகை தந்த வளவாளர்களால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(எ-313-311)

# குழப்பத்தில் உள்ள மக்களை மீட்டெடுக்க சட்ட உதவிகள் அவசர தேவையாகும்

## சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.2

கடந்த கால சூழ்நிலை காரணமாக எமது மக்கள் குழம்பிப் போயுள்ளனர். எனவே அவர்களைக் குழப்பத்தில் இருந்து மீட்டெடுக்கச் சட்ட உதவிகள் தேவையாக உள்ளன.

அத்துடன் சட்டத்துறை மாணவர்கள் தமக்கு சமூகப் பொறுப்புள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறை மாணவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட 'நீதம்' மலருக்கான ஆய்வுரை நிகழ்த்தும் போதே சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.இராஜகுலேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரைநிகழ்த்தும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது மொழி பேசும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் வாழ வேண்டியேற்பட்டுள்ளது. எமக்கு தலைமை இருக்கிறதா, சட்டம் இருக்கிறதா என்ற கேள்வி எமக்குள் எழுகிறது. எனவே சட்டத்துறை மாணவர்கள் இந்த விடயம் குறித்து தெளிவாக செயற்பட வேண்டும். சமூகப் பொறுப்புணர்வு மிக அவசியமானது. தொண்டு மனப்பான்மையால் சமூகத்தை மேலெழச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் கூடிய துணிவு மிகவும் அவசியமானதாகும்.

சட்டத்துறையைச் சேர்ந்தவர்களால் உலகில் பல்வேறு வரலாற்றுப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே எங்கு அநீதி இழைக்கப்படுகிறதோ அங்கு அதற்கு எதிராகக் குரல் கொடுத்து செயற்பட சட்ட மாணவர்களும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். சட்டத்துறை மாணவர்களான நீங்களும் எதிர்காலத்தில் சட்டத்துறை வல்லுநர்களாக மாறவுள்ளீர்கள். எனவே உங்களிடமும் சமூகப்பொறுப்பு உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்- என்றார்.

இந்த நிகழ்வின்போது ஆசியுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீண்ட நாள் கனவாகவிருந்த சட்டத்துறை மூலம் முதலாவது அணி பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பட்டம் பெற்று வெளியேறியுள்ளது. சட்டத்துறையானது மிகவிரைவில் சட்டப்பீடமாக மாற்றப்படவுள்ளது [illegible] குறிப்பிட்டார். (ஒ-14)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை மாணவி ஒருவருக்குச் சின்னம் சூட்டுவதையும் அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் விமர்சையாக இரண்டாம் ஆண்டில் கால் பதிக்கும்..

# New Medi Care Hospital

T.P: 0213734505- 0214920949

**New Medi Care Hospital**

**இல.32, கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

### Dr.S. ரவிராஜ் அவர்களின் வாழ்த்துச் செய்தி



எனது கரங்களால் ஆரம்பிக்கப்பட்ட நியூமெடி கெயர் வைத்தியசாலை இன் று இரண்டாம் ஆண்டில் கால் எடுத்து வைப்ப தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன் னும் இந்த சேவை மேலும் வளர்ச்சியடைய இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்

சத்திர சிகிச்சை நிபுணர்
Dr.S. ரவிராஜ் (VS).

### வைத்தியசாலையின் வெற்றிநடை தொடரட்டும்

இன்று ஓராண்டு சேவையை முடித்த நியூ மெடி கெயர் வைத்தியசாலை ஆலமரமாக விருட்சியடைய இன்றைய நாளில் மேன்மேலும் வாழ்த்துகின்றோம்.

*ஊழியர்கள்.....*

Mr.K.Kumarasamy
Mr.N.Rajmokan
Miss.P.Danisiya
Mrs.S.Sivakala
Miss.K.Yopana
Miss.M.Dayana

### தனித்துவம் வாய்ந்த சேவை நிறுவனம்



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பொன் மொழிக்கிணங்க நாங்கள் யாவரும் நலமுடன் வாழ தனது மங்காப்புகழ்மிக்க மருத்துவ சேவையால் வழி அமைத்துவரும் **மெடி கெயர்** மருத்துவ **சேவையினர்** இன்றைய காலத்திற்கு இன்றியமையாத தேவைக்குரியவர்கள்.

இயந்திரமயமான இன்றைய உலகில் வாழ்ந் துவரும் மனித இனம் எண்ணற்ற நோய்களுக்கு ஆளாவதுதவிர்த் தற்கரிய ஒன்றா கிப் போய்விட்டது. இந்நிலையில் அனைத்து நவீனவசதிகளையும் தன்னகத்தே கொண்டதாய் சேவைநோக்கு உடையதாய் இம் மெடி கெயர் நிறுவனம் செயற்படுவது யாவ ரும் அறிந்த ஒன்று.

இங்கு பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள், ஏனைய ஊழியர்கள் என யாவரும் பாடறிந்தொழுகும் பண்பாளர்களாய் இன் முகத்தோடு இனிதுரையாடி நோயாளர்களை அணுகுவது போற்றுதற்குரிய ஒன்று. இந்நிலையில் தனது சேவையால் ஓராண்டுப் பூர்த்தியை பெருமையோடு நிறைவு செய்யும் இந்நிறுவனம் மேன் மேலும் உயர்வடைந்து தனது சேவையில் ஒப்புயர்ந்து மிளிரவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறை வன் துணைபுரிய வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து ஆசிகூறி எனது ஆசியுரையினை நிறைவு செய்கின்றேன்.

சர்வே ஜனாகா சுகினே பவந்து
சாந்தி சாந்தி சாந்தி

*சிவஸ்ரீ வி. பாலகுமாரக்குருக்கள்*
*பிரதமகுரு, கரும்பி மாவடி கந்தசுவாமி கோயில்.*
*மீசாலை, சாவகச்சேரி.*

### Dr. K. சுரேஸ்குமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி



நியூ மெடி கெயர் வைத்திய சாலை ஓராண்டினை பூரத்தி செய்வ தை இட்டு எனது மட்டற்ற மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொள்கின் றேன். நிர்வாகி **திரு. தம்பிராசா குகநேசன்** சாவகச்சேரிக்கு செய்யும் சேவை மேலும் வளர்ச்சியடைய இன்றைய நாளில் இறைவனை வேண்டுகின்றேன்.

மகப்பேற்று
பெண் நோயியல் நிபுணர்
Dr. K. சுரேஸ்குமார் (VOG)

### உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

தென்மராட்சி மக்களின் நீண்டநாள் குறையை நிவர்த்தி செய்யவே உதயமாகி நியூ மெடி கெயர் நிலையம் இன்று தனது ஓராண்டி னைப் பூர்த்தி செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக் குரியதொரு விடயமாகும். இந்த மருத்துவ நிலை யமானது மென்மேலும் வளர்ச்சியடைந்து தென் மராட்சி மக்களுக்கு நல்ல சேவையை வழங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டு மென வாழ்த்துகின்றேன்.


*போ.ஜெயக்குமார்*
*செயலாளர், தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம்.*
உதவிப் பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.











| | | | | |
|---|---|---|---|---|
| Dr.Mrs.N.நாகேந்திரா (பொது வைத்திய நிபுணர்) | Dr.N. குருபரன் (இருதய சிகிச்சை நிபுணர்) யாழ்.போதனா வைத்தியசாலை. | Dr.S. கேதீஸ்வரன் (பொது வைத்திய நிபுணர்) யாழ்.போதனா வைத்தியசாலை. | Dr.S. சுகுமாரன் (தோல் சிகிச்சை நிபுணர்) யாழ்.போதனா வைத்தியசாலை. | Dr.T. ஹம்லற் (சகல விதமான பற்சிகிச்சைகளும் பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல் கிளிப் போடுதல்) யாழ்.போதனா வைத்தியசாலை. |

| | | |
|---|---|---|
| Dr.T. சதீசன். (MBBS) (ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) | Dr.S. சிவரூபன். (MBBS) (ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) | Dr.S. பிரசன்னா. (MBBS) (ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) |

## சேவை மேலும் வளர பாராட்டி வாழ்த்துவோர்...

| | | | | |
|---|---|---|---|---|
| **K.THARSHAN** THE FINANCE CO PLC Business Service Centre No.19, Kachchai Road, Chavakachcheri. T.P: 0212222035 | **SAHITH PICTURE PALACE& ALUMINIYAM FITTINGS** No.11, Kachchai Road, Chavakachcheri. T.P: 077 6016276 | **தனுஷன் ஜுவலர்ஸ்** ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22கரட்டில் செய்து கொடுக்கப்படும். கச்சாய் வீதி, சாவகச்சேரி தொ.பே: 021 2270203- 0774911942 | உங்களுடைய சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கும்,ரெடிமெட் ஆடைகளுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம். **ராஜ் வேல்ஸ் புடைவையகம்** 24 நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி. | **அம்பாள் கபே** இல.7, கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| **ஜெகா எலக்ரிக்கல்ஸ்** இல.11, தனங்கிளப்பு வீதி,சாவகச்சேரி. T.P: 0773039444- 0212270160 | **S.K.UNAVAGAM** No.25, kandy Road, Chavakachcheri. T.P: 021 7210537 | **Phothigai Computer Graphics,** Kandy Road, Chavakachcheri. T.P: 213213517 | **S.K.SHOES LAND** No: 12, New Market, (Inside) Chavakachcheri. T.P: 0778607151 | **SANMUGAM AND SONS** Kandy Road, Chavakachcheri. |

**New Medi Care Director Thampiraja Kuganesan**

**அம்பிகை களஞ்சியம்- யாழ்ப்பாணம்.**
**Raam Supper City யாழ். ★ City Center- Colombo.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியோருக்கு ஐ. நா. நிறுவனத்தின் பல்வேறு உதவிகள்

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி மாவட்டத்தில் முகாம்களிலிருந்து வெளியேறி மீளக்குடியமர்ந்த இரு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஐ.நா. நிறுவனத்தின் நிதியுதவி இன்று வழங்கப்படவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சிவநகர், உருத்திரபுரம் வடக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 18.07.2010 அன்று மீள்குடியேறிய மக்களுக்கே இந்த நிதியுதவி வழங்கப்படும். இதில் சிவநகரைச் சேர்ந்த 49 குடும்பங்களும், உருத்திரபுரம் வடக்கைச்சேர்ந்த 254 குடும்பங்களும் இந்த 20 ஆயிரம் ரூபா நிதியுதவியைப் பெறவிருக்கின்றன.

இன்று மு.பகல் 10 மணிக்கு உருத்திரபுரம் வைத்தியசாலைக் கருகில் வைத்து இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமென கரைச்சிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க நேற்று 9 கிராமங்களைச் சேர்ந்த 26.07.2010 அன்று முகாம்களிலிருந்து மீள் குடியேறிய மக்களுக்கு ஐ.நா. நிறுவனத்தால் இந்த 20 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் புதுமுறிப்பில் 62 குடும்பங்களும், ஊற்றுப்புலத்தில் 42 குடும்பங்களும், பாரதிபுரத்தில் 66 குடும்பங்களும், மலையாளபுரத்தில் 83 குடும்பங்களும், அம்பாள் குளத்தில் 2 குடும்பங்களும், ஜெயந்திநகர், ஆனந்தபுரம், கிளிநொச்சி நகர், செல்வா நகர் ஆகிய கிராமங்களில் தலா ஒரு குடும்பமும் இந்த நிதியுதவியைப் பெற்றுக் கொண்டன.

இதேவேளை முகாமில் வசிக்காது வெளியிடங்களில் தங்கி நின்று 16.08.2010 அன்று மீள் குடியேறிய 6 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஐ.நா.நிறுவனத்தால் உதவிப் பொதியொன்று இன்று மு.பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் வைத்து வழங்கப்படும். பொன்நகர், திருவையாறு, புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீள்குடியேறிய மக்கள் இந்தப் பொதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதேவேளை நலன்புரி முகாம்களிலிருந்து 22.07.2010 அன்று மீள்குடியேறிய சிவநகரைச் சேர்ந்த 143 குடும்பங்களுக்கும், உருத்திரபுரம் மேற்கைச் சேர்ந்த 121 குடும்பங்களுக்கும் ஐ.நா. நிறுவனத்தின் 20 ஆயிரம் ரூபா நிதியுதவி நாளை மு.பகல் 10 மணிக்கு உருத்திரபுரம் ஆஸ்பத்திரிக்கு அருகில் வைத்து வழங்கப்படும்.

இந்த உதவிகளைப் பெற விரும்பும் குடும்பத் தலைவர்கள் தமது குடும்ப அட்டை, குடும்பத் தலைவரின் அடையாள அட்டை ஆகியவற்றுடன் குறித்த இடத்தில் குறிப்பிடப்பட்ட நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க-405)



கிளிநொச்சி, உருத்திரபுரம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் வகுப்பறையின்றி தரையில் இருந்து கல்வி கற்கும் காட்சியைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

## முல்லைத்தீவில் இரு கிராமங்களில் நேற்று மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர்

முல்லைத்தீவு, நவ.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இரண்டு கிராமங்களில் மக்கள் நேற்று மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். என்று அந்த மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நீராவிப்பிட்டி மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும், மடவாழ் சிங்க குளம் பகுதியிலும் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் நேற்று மட்டும் 160 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய குடும்பங்களையும் மீள்குடியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)




## மத்திய கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி,நவ.2

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபாவினை சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.ஒதுக்கீடு செய்துள்ளார்.

கல்லூரியின் கணினி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நிதி மூலமாக உரிய வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கல்லூரியின் அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (க-405)

## வணிக மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டிகள்

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான வணிக மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டிகள் இருபிரிவுகளாக நடைபெறவிருக்கின்றன.

அன்றுகாலை 8.30 மணிக்கு தரம் 10,11 ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கும், 10 மணிக்கு தரம் 12,13 ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கும் போட்டிகள் நடைபெறும்.

விடைத்தாள்கள் யாவும் உடனடியாகவே திருத்தப்படவிருப்பதால் மாணவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் ஆயத்தமாக வருமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

## ஆனையிறவு உப்பளத்தில் வேலைவாய்ப்பு

பளை, நவ.2

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆனையிறவு உப்பளத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி பளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தியமைச்சினால் ஆரம்பிக்கப்படவுள்ள ஆனையிறவு உப்பளத்திலேயே பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பிரதேசத்திலிருந்து வேலைக்குச் செல்வோரின் நலன் கருதி இலவச பஸ் சேவை நடத்தப்படுமெனவும் அமைச்சர் மேலும் கூறினார். (க-207)

## வவுனியா மாவட்டத்தில் பாம்புக்கடியினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

வவுனியா,நவ.2

வவுனியா மாவட்டத்தில் மீள் குடியேறிவரும் மக்கள் கொடிய பாம்புகளினால் கடிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்த மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி வைத்தியசாலையில் பாம்புக்கடியினால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவோரின் தொகை கடந்த மாதத்தில் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இப்பிரதேசத்திலே தற்போது மக்கள் மீள்குடியேறி வருகின்றனர். இவர்களுக்குப் பாம்புக்கடி பாரியதொரு சவாலாக மாறியுள்ளது. இதனால் இவர்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

கடந்த மாதத்தில் 12 பேருக்கு மேற்பட்டவர்கள் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளனர். இவர்களுள் பெரிய காயங்கள் உள்ளோர் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஏனையோர் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

அநேகமாக இரவு வேளையிலேயே பாம்புக்கடிச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து துன்பத்திலும், வேதனையிலும் உழன்று நிற்கும் இந்த மக்களுக்கு பாம்புகளும் தமது கைவரிசையைக் காட்டுவது வேதனைக்குரியது. (க-501)

## மாநாட்டு மண்டபம் திறந்து வைப்பு

வவுனியா,நவ.2

வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் புதிதாக அமைக்கப்பட்ட மாநாட்டு மண்டபம் கடந்த வியாழக்கிழமை வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் வவுனியா பொது வைத்தியசாலை அத்தியட்சகர் மற்றும் வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகிய பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (க-501)

## ஒட்டுசுட்டானில் அல்லல்படும் பெற்றோரை இழந்த பிள்ளைகள்

முல்லைத்தீவு, நவ.2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் யுத்தத்தின்போது தாய், தந்தையை இழந்த பிள்ளைகள் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முடிவுக்கு வந்துள்ள கொடிய போரின்போது ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பல பிள்ளைகள் தமது தாய், தந்தையரை இழந்த நிலையில் ஆதரவு வழங்குவதற்கு எவருமற்ற சூழ்நிலையில் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது உணவு, உடைகள் என்பவற்றைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதோடு பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைப் பெறமுடியாத நிலையிலும் உள்ளனர்.

இரக்க சுபாவமுடைய நல்லவர்களின் உதவி இவர்களுக்குக் கிடைக்கப் பெறுமாயின் இவர்களின் வாழ்வு வளம் பெறும். ஆகவே அறக்கொடை நிறுவனங்கள் இவர்களுக்கு உதவ வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு.

அத்துடன் இப்பிரதேசத்திலே கணவன்மார்களை இழந்த பெண்கள் பலருள்ளனர். இவர்களும் உதவுவதற்கு யாருமின்றிக் காணப்படுகின்றனர்.

ஆகவே ஆதரவற்ற இந்த ஏழைகளுக்கு உதவிகள் வழங்கப்படுமாயின் அதுவே மிகச் சிறந்த சேவையாகும். (க-500)

## வீட்டுத்திட்டம்

வட்டக்கச்சி,நவ.2

கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்மடுநகர் கிராமசேவை அலுவலர் பிரிவில் முதற்கட்டமாக 120 பயனாளிகளுக்கு 'நேப்' வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இரண்டாம் கட்டமாக 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான முதற்கட்ட வேலைகளுக்கான பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (க-450)



முழங்காவில் மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு சிறிதரன் எம்.பி. சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: உமா)

## பளை உயர் மட்ட மாநாட்டின்போது அமைப்புக்கள் மனுக்கள் சமர்ப்பிக்கலாம்

பளை, நவ.2

பளை கிறீஸ்தவக் கல்லூரியில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உயர்மட்ட மாநாட்டின்போது பொது அமைப்புக்கள் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட, குடியமர்த்தப்படவிருக்கின்றவர்களைச் சேர்ந்த மக்களின் அவசிய தேவைகள் தொடர்பான உயர் மட்ட மாநாடு எதிர்வரும் 7 ஆம் திகதி பளை கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டின்போது இந்தப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்களான சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலய பரிபாலன சபைகள் போன்றன தமது தேவைகள் குறித்து அன்றைய தினம் முற்பகல் 9 மணி தொடக்கம் கோரிக்கை மனுக்களைக் கையளிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

கிளி/ திருவையாறு மகாவித்தியாலயத்தில் 2008ஆம், 2009 ஆம் வருடங்களில் கல்வி கற்றுத் தரம் 5 பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெற்ற மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களையும் 10.11.2010 இற்கு முன் பாடசாலையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்பு இலக்கம்: 0779410483

அதிபர்,
கிளி/ திருவையாறு ம.வி.,
கிளிநொச்சி.

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



### திருமதி கமலாதேவி பாலச்சந்திரா

S.L.T.S - I

(உப அதிபர், யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய்)

**சேவை விவரம்**

| | |
|---|---|
| வ/ சைவப்பிரகாச வித்தியாசாலை | - 01.09. 1971 - 22.04.1974 |
| யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - 23.04.1974 - 31.12.1975 |
| வ/ சைவப்பிரகாச வித்தியாசாலை | - 01.01.1976 - 22.05.1978 |
| யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | - 23.05.1978 - இன்றுவரை |

விஞ்ஞான வுலகிலின்று மெய்ஞ்ஞான உலகுகாட்டி
அஞ்ஞான அறிவு நீக்கி அன்பில் - மெய்ஞ்ஞான
அறிவு தந்தீர் உளமாரப் போற்றுகின் றோமிந்த
குறிப்பினிலும் சேவை எழுதி

இன்று மணிவிழாக் காணும் எமது பாடசாலை உப அதிபரை, அவர் தம் குடும்பத்தினருடன் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரமாண்டு நீடூழி வாழ வாழ்த்தும்

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர் நலன்புரிச்சங்கம்
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

# சிறுவர் முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், நவ.2

சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் தெற்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு கோட்டக் கல்வி அதிகாரி துரை எங்கரசு, யாழ்.மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஆ.ஞானவேல், யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலைநிகழ்வுகளும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

(204-313)


## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P-4 Computer (3.0), intel board, 1 GB Ram, 160 GB HD மற்றும் புதிய ups(Proling) computer table ஆகியவையும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0729469839, 0789145140

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக் கப்பயில. by. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), K.K.S வீதி, யாழப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. Tel-0776751649

## U.K.STUDENT VISA

U.K.Student Visa வில் செல்வதற்கான Sponsorship, Bank Loans என்பன துரித கதியிலும் மற்றும் ஆவணங்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0779218444, 0214910959

(105399)

## வேலையாள்கள் தேவை

சங்கானைப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் புகைப்படத்துறை சார்ந்த நிறுவனத்திற்கு Photo Shop மற்றும் Vedio editing இல் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு: 0776567580, 0214900509.

(105422)

## மலிவு விற்பனை

தீபத் திருநாளாம் தீபாவளியை முன்னிட்டு அனைத்துப் புடைவைகளும் மலிவு விற்பனை.

**சீமாட்டி** (புடைவைக் கடல்)
129 (122), மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே,: 021 2228564.

(#1572275)

## விற்பனைப் பிரதிநிதிகள், வாகன ஓட்டுநர்கள், கூலித் தொழிலாளர்கள் தேவை

யானைச் சோடாவினை (Elephant House Soft Drinks) வாகனத்தில் சென்று விற்பனை செய்யக் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் தேவை. தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

காலம்:- நாளை (03.11.2010) புதன்கிழமை
நேரம்:- மு.ப.10 மணி தொடக்கம்
பி.ப 1 மணிவரை.

முகவரி: **பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
368/B, முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
T.P.021-2225595

(105388)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்

**ஆதனப் பெயர் மாற்றம்,**

**வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இல.83.**

வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இல.83 இல் அமைந்துள்ள ஆதனமானது வேலுப்பிள்ளை குமாரசுவாமியும் பெண் பரமேஸ்வரியும் என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு செல்லத்துரை இரத்தினராசாவும் பெண் கலாவதியும் என்பவர்களால் 232- 26.09.1987ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காகப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து செல்லத்துரை இரத்தினராசா வும் பெண் கலாவதியும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**செயலாளர்,**
வலி.தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்.

(105428)

# யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் ஆங்கில ஆசான் திருமதி தேவரஞ்சிதம் பரிமேலழகபிள்ளை அவர்களின் மணிவிழா சிறப்புமலர்- 02.11.2010

### ஆங்கிலப் புலமைமிக்க ஆசான்

ஆங்கிலப் புலமைமிக்கவர்கள் அரிதாகி வரும் இக் காலகட்டத்தில் ஆங்கிலப் புலமையும் அதனைப் பேசுவதில் உள்ள கலையும் கொண்ட திருமதி தேவரஞ்சிதம் பரிமேலழகபிள்ளை ஓய்வு பெற் றுச் செல்வது ஒரு பேரிழப்பாகும். மாணவர்களை, தன் தொழிலை நேசித்ததுடன் சக ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும் முகாமைக்கு வலது கரமாகவும் திகழ்ந்தவர். பாடசாலையில் எவ்விழா விலும் ஓடி ஓடி உழைக்கும் திருமதி தே.பரிமேலழகபிள்ளையின் ஓய்வுக் காலம் சிறப்படைய எமது வாழ்த்துக்கள். தொடர்ந்தும் ஆங் கிலக் கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்பது எமது வேண்டு கோள்.

வே.தி.செல்வரத்தினம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

### ஆங்கிலத்தின் நிறைகுடமே நீடூழிவாழ்க

வேர் கண்ட ஆழத்தின் ஆங்கிலத்தில் விரிந்த அறிவுடைய பணிக்குன்றாய் திகழ்பவர். ஆங்கிலக் கல்வியில் மட்டுமல்லாமல் ஏனைய துறைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் மணிவிழா நாயகி. இவரது ஓய்வுக் காலம் இன்பமாய் அமையவும் கல்விப்பணி தொடரவும் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம், வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

### ஆசிரியப் பணியின் பொற்காலம்

கல்வி உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய விழா நாயகியை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். விடா முயற்சியுடன் தன்னலமற்ற சேவையில் குன்றென நிமிர்ந்து நிற்பவர் ஓய்வுக்காலம் இனிதே அமைய வாழ்த்துகின்றேன்.

திரு.சி. சித்திரவடிவேல், கோட்டக்கல்வியதிகாரி, கோப்பாய்.

**Mrs.T.Parimelalakapillai** is a good dedicated and efficient teacher who shoulder her responsibilities and gave best to the schools as well our English unit of the zonal Education office Mrs. T.Parimelalakapillai retirement at a time when teachers of her calibre are much needed. But fast dwindeing will leave a void in the teaching world which will be hard to fill.

May God almighty bless her with long life.

**Mr.S.Thiakarajah. ADE (English)**

**Mrs.Thevaranjitham Parimelalakapillai** is a good teacher in its true sense. She has done her best in her career and make it a success. One who sees her work or observes her teach cannot but appreciate her dedication and duty consciousness. Besides,her contribution as a resource person is valuable. She is, as it were, synonymous with teaching. I wish contented retired life.

**Mr.S.Mohanakrishnan, Coordinator, RESC- Jaffna.**



### திருமதி தேவரஞ்சிதம் பரிமேலழகபிள்ளை

விசேட பயிற்சி- ஆங்கிலம்

**சேவை விவரம்**

- ★ யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், 15.03.1996- 14.01.1998
- ★ யா/ கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை- 15.01.1998- 31.12.1999
- ★ யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்- 01.01.2000- 31.12.2004
- ★ யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி- 01.01.2005 தொடக்கம் இன்றுவரை

**பிறப்பு- 1950.11.02**

- ★ ஆரம்பக் கல்வி- யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
- ★ இடைநிலைக் கல்வி- . யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
- ★ உயர்கல்வி- யா/ உடுவில் மகளிர் கல்லூரி

### மனிதாபிமானத்தின் சிகரம்

அச்சுவேலியில் கல்வித் தோப்புக்களில் கூர்வேலியாகி பவளவிழா கண்டுநிற்கும் பூவேலியான ஆசிரிய தி[illegible]

[illegible] சங்கம்,
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

### பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி

மணி விழாக்காணும் ஆசிரியை ஆங்கிலத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். பொறுமை, கடமை, பிறரை மதிக்கும் பண்பு ஆகியவற்றை அணிகலனாகக் கொண்ட ஆசிரியப் பெருந்தகைக்கு எனது பாராட்டுக்களும் ஆசிகளும்.

பீற்றர் துரைரட்ணம்
அச்சுவேலி பங்குத்தந்தை.

### ஆளுமை நிறைந்த ஆங்கில ஆசான்

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, சீரியபணி, திறமை ஆகிய ஆசிரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்ட ஆளுமை நிறைந்த ஆசான். எம்மோடு இணைந்திருந்த நல்லாசியரின் ஓய்வுக் காலம் இனிதே அமைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி மரிய றொசாறியோ A.C
அதிபர், யா/ அச்சுவேலி புனித தெரேசாள். ம.க

### கல்வி உலகின் கலங்கரை விளக்கு

கல்லூரி வாழ்வில் முத்திரை பதித்தவர் ஆங்கில ஆசிரியப் பணியில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தவர். மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்த மணிவிழாநாயகியின் ஓய்வுக்காலம் இன்பமாக அமைய வாழ்த்துகின்றேன்.

செல்வி.யோ.காசிப்பிள்ளை- உபஅதிபர்,
யா/அச்சுவேலி புனித தெரேசாள்.ம.க

### ஆங்கிலக் கல்வியின் அத்திபாரம்

ஆங்கிலக் கல்வியின் அத்திபாரமாய்த் திகழ்ந்து கல்விப் பணியாற்றியவர். மாணவர் மத்தியில் ஆங்கிலத்துடன் அன்பைக் கலந்து கல்வியைப் புகட்டிய பெருந்தகை. அவரது ஓய்வுக்காலம் அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டமைய அன்புடன் வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

### பண்பட்ட சொல்லழகி நீடு வாழ்க

ஆங்கிலக் கல்வியில் ஆழ்ந்த புலமையும்,
அன்புடன் இன்புடன் பழகிடும் மேன்மையும்
பாங்குடன் மாணவரை வளர்த்திடும் வாண்மையும்
பண்பட்ட சொல்லழகு என்கின்ற நேர்மையும்
ஓங்கிடும் புகழதும் மணிவிழா மகிழ்வதும்
நீங்காமல் பெற்றிங்கு நீடூழி வாழ்க.

பழைய மாணவர் சங்கம்,
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - நோர்வே இடையே வர்த்தக மேம்பாடு குறித்து ஆய்வு

கொழும்பு, நவ. 2

இலங்கை - நோர்வே இடையே வர்த்தக நடவடிக்கைளை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போது நோர்வே சென்றுள்ள வர்த்தக தூதுக்குழு வொன்று இந்த விடயம் தொடர்பாக நோர்வே வர்த்தக சமூகத்துடன் விரிவான பேச்சுகளை நடத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையே குறிப்பாக மட்பாண்டம், மாற்று சக்தி, இறப்பர் பொருட்கள், கண்ணாடி இழை படகுகள், பொறியியல் பொருள்கள், கழிவு நீர் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பொருள்களை பரஸ்பரம் ஏற்றுமதி செய்ய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நோர்வே சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே முதலீட்டாளர்களுடன் பேச்சுகளை நடத்தியிருந்தார். இந்தப் பேச்சுகள் மூதலீட்டாளர்கள் முதலீடு செய்ய இலங்கை வர்த்தகர்களை அணுகுவார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

இதேவேளை, 1994 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை - நோர்வே வர்த்தகப் பங்களிப்பின் ஊடாக இதுவரை 100 இற்கும் மேற்பட்ட திட்டங்கள் இருநாட்டு வர்த்தகர்களினாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## அதிவேக ரயில் பாதை பணிகள் ஆரம்பம்

கொழும்பு,நவ.2

கடலோராப் பாதையில் மேற்கொள்ளபட்டுவரும் அதிவேக ரயில் பாதையின் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்தில் 27 கிலோ மீற்றர் தூரம் டிசம்பர் மாத இறுதிக்குள் பூர்த்தியாகும். இதற்கென 7.8 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும். இந்தப் பாதையின் நிர்மாணம் முடிவடைந்த பின் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியுமெனவும் கொழும்பிலிருந்து மாத்தறைக்கான பிரயாண நேரம் இரண்டரை மணித்தியாலமாகக் குறையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த அதிவேக ரயில் பாதையின் நிர்மாணத்தால் ரயில் பாதையின் அயலில் வாழும் மக்கள் பலத்த அசெளகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மழைக் காலங்களில் நீர்வழிந்தோட வாய்ப்பில்லாததால் வெள்ள அனர்த்தம் ஏற்பட உள்ளதாகவும் அண்மையில் நடந்த பிரதேச இணைப்பாளர்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (204)

## பரீட்சையின்போது எஸ்.எம்.எஸில் விடைகள் பரீட்சார்த்திகள் உடற்பரிசோதனைக்கு ஆளாகினர்

கொழும்பு,நவ.2

தென்கொரியாவில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக கொரிய மொழிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் உடற்பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

கட்ந்தசனிக்கிழமை தென்கொரியாவில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு விண்ணப்பித்த சுமார் 30ஆயிரம் விண்ணப்பதாரிகள் கொரிய மொழிப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தனர்.

பரீட்சை நடப்பதற்கு முன்னர் இவர்கள் தமது கைத்தொலைபேசிகள் மூலமாகக் குறுந்தகவல் சேவைகளைப்பெற்று மோசடியில் ஈடுபடவிருப்பதாகத் தகவல் கிடைத்தது. இவர்களுக்கு வெளியில் இருந்த சிலர் குறுந்தகவல் சேவை மூலமாக விடைகளை அளிப்பதாகக் கூறி அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் தெரியவந்தது.

இதனையறிந்த கொழும்பு தெற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபரான எச்.என்.பி.ஹேரத் உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு இந்த உடற்பரிசோதனை நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். 15 பரீட்சை நிலையங்களில் 700 விசேட பொலிஸார் இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவர்கள் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் கைத்தொலைபேசிகளை எடுத்துச் செல்வதைத் தடை செய்யுமுகமாகவே இந்த உடற்பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது நூற்றுக்கணக்கானவர்கள் மோசடியில் ஈடுபட முயன்றமை கண்டு பிடிக்கப்பட்டு பரீட்சை எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

இந்தப் பரீட்சை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது. (க)

## நிதிமோசடி குற்றச்சாட்டில் பெண் கைது

கொழும்பு, நவ. 2

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவார் எனக்கூறி நிதிமோசடியில் ஈடுபட்டார் எனக் கருதப்படும் பெண்ணொருவர் அநுராதபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தப் பெண் கோடிக் கணக்கான ரூபாவை மோசடி செய்துள்ளார் என அநுராதபுரம் பொலி ஸார் தெரிவிக்கின்றனர். மேலும், பெண்ணிடம் சாரதியாகப் பணிபுரிந்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அநுராதபுரம் சுற்றுலா விடுதியொன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட குறித்தப் பெண், ராகமையில் வசித்து நீண்ட காலமாக நிதிமோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுத் தருவார் எனக் கூறி இவர் 40 பேரிடம் 6 லட்சத்துக் கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார். கைதுசெய்யப் பட்ட பெண்ணிடமிருந்து 5 லட் சம் பெறுமதியான நகைகளும், ஒரு தொகைப் பணமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன - என மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## கண்காணிப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

# பிரஜை ஒருவர் விரும்பும் மொழியிலேயே அரச ஊழியர் சேவை வழங்க வேண்டும்

### தவறும் பட்சத்தில் உயர் நீதிமன்றில் உதவி பெறலாம்

கொழும்பு,நவ.2

அரச நிறுவனங்களில் கடமையாற்றும் எவரும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இருமொழிகளில் எதில் நாட்டின் பிரஜை ஒருவர் சேவைபெற விரும்புகிறாரோ அந்த மொழியில் அவருக்கு சேவையாற்ற தகுதி பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட பிரஜை விரும்பியவாறு சேவையை வழங்க தவறும் பட்சத்தில் அவர் உச்ச நீதிமன்றத்தின் உதவியைப் பெற முடியும்.

இவ்வாறு தேசிய மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் மடுவேகெதர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த 2007ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

அரசாங்க சேவைக்குள் பிரவேசிக்கும் அனைவரும் மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். அதாவது தமிழ்மொழி மூல உத்தியோகத்தர்கள் தமிழ்மொழியிலும் சிங்களமொழிமூல உத்தியோகத்தர்கள் தமிழ்மொழியிலும் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டியது அவசியமாகும்.

தமக்கு விரும்பிய மொழியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவையை வழங்கவில்லை எனக் குற்றம் சுமத்தி ஏற்கனவே மூன்று வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் பதிவாகியுள்ளன-என்றார் மடுவேகெதர. (எ-16-319)



இடைக்காடு மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பெ.வினோபா, கலாநிதி வி.முத்துலட்சுமி, வைத்தியர் செல்வி ச.நமசிவாயம், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன், பாடசாலை அதிபர் அ.அருந்தவநேசன் ஆகியோருக்கு மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (72)

## கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரம் 270மில்.ரூபா செலவில் புனர்நிர்மாணம்

கொழும்பு,நவ.2

வன்னி கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுர புனர்நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தொலைதொடர்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் அனுஷ பெலபட்ட தெரிவித்துள்ளார்.

270 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கோபுரம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார். இந்தத் தொலைத் தொடர்புக் கோபுரங்களின் மூலம் யாழ்ப்பாண பிரதேசத்திற்கு தேவையான தொலைதொடர்புச் சேவை வசதிகளை வழங்க முடியும்.

172 மீற்றர் நீளமான கொக்காவில் தொலைத்தொடர்புக் கோபுரம் இலங்கையின் மிக உயரமான தொலைதொடர்புக் கோபுரமாகக் கருதப்படுகிறது.

போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இந்தக் கோபுரம் தகர்த்து அழிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ)

# போரில் அகப்பட்டுப் படுகொலையான மக்களுக்கு இந்நாளில் இறைவனிடம் பிரார்த்திப்போம்

கத்தோலிக்க மக்கள் இறை பதம் அடைந்தோரை நினைவு கூரும் தினம் இன்று அனுஷ்டிக்கின்றார்கள். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

கத்தோலிக்கத் திருச்சபை யானது ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் இறந்த ஆன்மாக்களை நன்றியோடு நினைக்கவும் அவர்களுக்காக இறைவேண்டல் செய்யவும் நம்மை அழைத்து நிற்கின்றது.

உத்தரிப்பு நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்கு இறைவனின் கருணை கிடைக்க வேண்டும் என்றும் அவர்கள் நிலைவாழ்வைத் தமதாக்கி இறைவனோடு ஒன்றித்து வாழவேண்டுமென்றும் நாம் மன்றாடுகின்றோம். இவற்றோடு இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்ந்து, என்றும் இறைவனோடு ஒன்றித்து வாழும் புனிதர்களிடம் பரிந்துரைக்காக மன்றாடுகின்றோம்.

இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு, நிலைவாழ்வைப் பற்றிய மறையுண்மைகளைச் சிந்திக்க வைப்பதோடு, மறைந்துவிடக்கூடியவை எவை என்றும் நிலைத்திருக்கக்கூடியவை எவை என்றும் நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வைக்கின்றது என்று திருத்தந்தை 23ஆம் யோவான் குறிப்பிடுகின்றார்.

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். (யோவான் 13:1-3) என்ற இறைவார்த்தையின் ஊடாக நிலைவாழ்வு உண்டு என்பதை எமக்குத் தெளிவாக எடுத்துக் கூறிஇருக்கின்றார். நிலைவாழ்வை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளும் நாம் மரணத்தின் ஊடாக நம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்களுக்காகச் செபிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். எமது செபங்கள், மன்றாட்டுக்கள், திருப்பலிகள், [illegible] தருமங்கள் என்பன அவர்களுக்கு பாவமன்னிப்பைப் பெற்றுக் கொடுத்து நிலைவாழ்வைப் பெறுவதற்கு வழி கோலுகின்றது.

இறந்தவர்களுக்காக நாம் முன்னெடுக்கும் அனைத்துச் செயற்பாடுகள் மூலமாகவும் இறைவன் தமது இரக்கத்தை வெளிப்படுத்தி அவர்களின் ஆன்மாவை மீட்டெடுத்து நித்திய பேரின்ப வீட்டை அருளுகின்றார் என்பது எமது நம்பிக்கை ஆகும். இறைபதமடைந்தோரின் நினைவுச் சின்னங்களையும் கல்லறைகளையும் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும்போது அவர்களோடு எமக்கிருந்த அன்புறவை நாம் மீட்டிப்பார்க்கின்றோம்.

எனவே இறந்தவர்களை விசேடமாக நினைவுகூருகின்ற இந்தக் கார்த்திகை மாதத்தில் இவ்வுலகில் வாழ்கின்ற, இறையாட்சிப் பயணம் மேற்கொள்ளும், வாழும் திருச்சபையாக இருக்கும் நாம், இறைபதம் அடைந்தவர்களுக்காக விஷேடவிதமாக மன்றாடுவோம். எம்மைப் பெற்று வளர்த்து அன்பு செலுத்தி தமது தியாகம் [illegible] பெற்றோர்களுக்காக மன்றாடுவோம்.

ஒரே தாயின் வயிற்றில் உடன் பிறந்து அன்போடு உறவு கொண்டு வாழ்வின் சோகங்களையும் சுமைகளையும் எம்மோடு பகிர்ந்து அன்றாட சிலுவைகளை எம்மோடு சேர்ந்து சுமந்து வழிநடந்த உடன் பிறப்புக்களை நினைந்து செபிப்போம். அன்போடு கண்டித்து, அறிவூட்டி எம்மை உருவாக்கிய ஆசான்களுக்காக இறைவேண்டல் செய்வோம். இன்னும் ஆன்மீக வாழ்வில் எம்மை வழிநடத்திய ஞானத்தலைவர்களையும் பங்குத்தந்தையர்களையும் நினைத்து நன்றி உணர்வோடு மன்றாடுவோம். இறுதியாக யாரும் நினையாத அந்தரித்த ஆன்மாக்களுக்காகவும் நாட்டின் போர்ச் சூழலில் அகப்பட்டு இறந்த ஆன்மாக்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும் விசேட விதமாகச் செபிப்போம்.

சேமக்காலையில் உள்ள கல்லறைகளில் எம்முன்னோர்கள் இறைவனுக்குள் உறங்குகின்றார்கள் என்பதும் இறுதி நாளில் இறைமகன் இயேசுவின் சாயலாக உயிர்த்தெழுவார்கள் என்பதும் நாம் ஏற்றுக்கொள்கின்ற உண்மை என்று சொன்னால் குறைந்தது இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை என்றாலும் கல்லறைகளைத் தரிசித்து மன்றாடுவதோடு அவற்றைச் சுத்தம் செய்து துப்புரவாக வைத்திருக்க முயற்சி எடுப்போம். எம் பெற்றோர்கள், உடன் பிறப்புக்கள், எம்மை உருவாக்கிய ஆசான்கள், ஆன்மீக வாழ்வில் எம்மை வழிநடத்திய ஞானத்தலைவர்கள் ஆகியோரை நன்றியோடு நினைத்து இவற்றைச் செய்வது இவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

முடிவாக இறந்தவர்களை நினைக்கின்ற உன்னதமான இந்த மாதத்தில் எமது மரணத்தைப் பற்றி சிந்திக்க நாம் இறைவனால் அழைக்கப்படுகிறோம் கல்லறைகளைத் தரிசிக்க இருக்கும் நாம், இக்கல்லறை வாழ்வு எமக்கு வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து ஆன்மீக வாழ்வில் புனிதம்பேணி விழிப்பாய் வாழ்ந்து எம்மையும் மரணத்திற்குத் தயார்ப்படுத்த இறையருள் வேண்டுவோம்.

இ. அ.அமலரட்ணம்
யாழ். பேராலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
மாமன், மைத்துனர்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களுக்காக உங்களின் வேலைகளைப் போட்டு விட்டு அலைவீர்கள். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வேலைப் பளு கூடும்



**இடபம்:**
திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கும் நாள். தொலைபேசி வழிச் செய்திகள் சந்தோஷம் தருவதாக அமையும். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். தெய்வ காரியங்களுக்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள். பணத்தேவை பூர்த்தியாகும்.



**மிதுனம்:**
எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். அயலாரிடம் பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப் பீர்கள். செய்ய நினைத்த வேலை ஒன்றை நாளை செய்யலாம் எனத் தள்ளி வைப்பீர்கள். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மனதில் இனம்புரியாத கவலைகள் ஆள்கொள்ளும் நாள்.



**கடகம்:**
சொல்வாக்கை காப்பாற்றிச் செல்வாக்கை அதிகரிப்பீர்கள். உறவுகளால் அனுகூலம், ஆதாயம் பெறலாம். சிந்தித்து செயற்படுவதன் மூலம் மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கோபம், வேகத்தைக் குறைத்துப் பொறுமையாகச் செயற்பட வேண்டும். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.



**சிங்கம்:**
ஒருவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். மற்றவர்களை நம்பி சில காரியங்களை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என கலக்கம் அடையலாம். செய்ய மறந்த வேலை ஒன்றால் சிரமங்களுக்கு, அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவு உண்டு.



**கன்னி:**
ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உற்றார் உறவினர்கள் சிலர் உங்களின் மூலம் காரியம் சாதித்துக் கொள்வர். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். விருந்து, விசேஷங்களால் வீட்டில் சந்தோஷம் உண்டு. மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.



**துலாம்:**
எதிர்பார்த்த நல்ல செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிடிவாதமாகச் செயற்பட்டு நினைத்த வேலைகளை முடிப்பீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். சில விடயங்களில் நன்றியுடன் நடந்து கொள்வீர்கள்.



**விருச்சிகம்:**
சிறிய பிரச்சினைக்காகப் பெரிய அளவில் பதட்டம் அடையலாம். சில வேலைகளை செய்யத் திட்டமிட்டு கடைசி நேரத்தில் முடிவை மாற்றிக் கொள்ளலாம். மற்றவர்கள் விமர்சிக்கும் வகையில் சில விடயங்களில் நடந்து கொள்வீர்கள். தண்டச் செலவுகளைத் தவிர்க்க முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது.



**தனுசு:**
உடன் பிறப்புகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். எந்த வேலையையும் சரியான நேரத்திற்குச் செய்ய முடியாமல் தவிக்கலாம். ஒருவர் உங்களின் குறைகளை சுட்டிக் காட்டி விமர்சிக்கலாம். நேசித்த ஒருவருடன் கடுமையாகப்பேசும் சூழ்நிலை உருவாகும். வீண் செலவுகள் நேரும்.



**மகரம்:**
பெற்றோர், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் சிலரை வழி அனுப்பி வைக்கலாம். மாமன், மைத்துனர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். சிலர் உதவி செய்ய முன்வந்தும் அதை மறுப்பீர்கள்.



**கும்பம்:**
எதிர்பாராத விரயங்களைச் சந்தித்தாலும் அதற்கேற்ற வரவுகள் வந்து சேரும். நண்பர்களுடன் சேர்ந்து சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்ப்பாக இருந்த சிலர், சில விடயங்களில் ஆதரவாக மாறலாம். சனி வழிபாடு மூலம் சங்கடங்கள் குறையும்.



**மீனம்:** வாய்ப்புகளை நழுவ விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நாள். உடல் ரீதியாக உபாதைகள் இருந்தாலும், முக்கியமான சில வேலைகளை முடிக்க முற்படுவீர்கள். உங்களின் வேலை ஒன்றுக்காக நண்பர்களையும் அழைத்துச் செல்வீர்கள். சில ஆதாயத்திற்காக உங்களின் கொள்கைகளில் மாற்றம் செய்யலாம். வீண் பயம் உண்டாகும்.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ.2

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை,பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

*தரம்-6:* சி.பவித்திரன், த.அறிவன், நி.தேனுசன்.

*தரம்-7:*ம. சஞ்சீவன், அ.அகீபன், உ.விதுஷன்.

*தரம்-8 :* ந.கஜேந்திரன்.

*தரம்- 9 :*தே.லக்ஸ்மன், சி.கிருசன், ஜெ. அபிராம்.

*தரம்- 10:* பா.கீர்த்தனன், தி.யோகீதன், த.சதீஸ், யோ.புவிதன்.

*தரம் -11 :*இ. பிரணவன்.

**கவிதை**

*தரம்-6:* சி.பவித்திரன், வி.வட்சாங்கிதசர்மா, சி.மகிழ்தன்.

*தரம்-7:* சு.மைத்திரேன்சர்மா, அ.ஜெசிந்தன், ட.தர்சிகன்.

*தரம்-8 :* தீ.ஆகாஷன், சி.ருக்கன், ச.திருமாலன்.

*தரம்- 9 :* ச.மயுரேசன், கி.லோகிகன், தே.லக்ஸ்மன்.

*தரம்-10:* பா.கீர்த்தனன், த.சதீஸ், ந.சிவகுலன்.

*தரம்- 11 :* இ. விது.

**பேச்சு**

*தரம்-6:* சி. பவித்திரன், நி.தேனு சன், பி.லட்சாங்கிதசர்மா.

*தரம்- 7:* உ.விதுசன், ச.அஜித்ராம், யோ.துளசிகன்.

*தரம்-9:* கி.லோகிஷன், ர.நிதூ ஷன், தே.லக்ஸ்மன்.

*தரம்-10* ந.சிவகுலன், யோ. புவிதன், இ.துசாந். (204-13)



அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப் பட்ட படம்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கம் அடிக்கல் நடுவதையும் அருகில் சனசமூக நிலைய உறுப்பினர்கள் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (204)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.2

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலை நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தொண் டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாகக் கலந்துரையா டப்படவுள்ளதால் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-ற)

# கொடுத்ததை வாங்கக்கூடாது



ஓர் ஊரில் கவிஞர் ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் பக்கத்து ஊருக்குத் திருமண வீட்டுக்காகப் போயிருந்தார்.

திருமணச் சடங்கை முடித்துவிட்டுத் திரும்பி வரும் போது வாடகைக்கு வண்டி ஒன்றைப் பிடித்தார். வண்டிக்காரனிடம் ''வாடகை எவ்வளவு'' என்று கேட்டார்.

அதற்கு அவன் ''மூன்று ரூபா வாடகை. நான் திரும்பி வர பொழுது விடிந்திருக்கும். அதனால் இரவு உணவும் தாருங்கள்'' என்றான்.

சரி என்று ஒப்புக்கொண்டு வண்டியில் புறப்பட்டார் கவிஞர்.

வண்டிக்காரன் பாட்டுப் பாடிக் கொண்டு போனான். கவிஞரும் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டு இருந்தார்.

வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாகக் கவிஞரிடம் பேச்சுக் கொடுத்தான்.

''நீங்கள் யார்? உங்களைப் பற்றி ஏதாவது சொல்லுங்களேன்?'' என்றான்.

கவிஞர் தன்னைப் பற்றிச் சொன்னார்.

''நான் இருப்பது மிதிலைப் பட்டி. எமது முன்னோர்கள் எல்லாம் வித்துவான்கள் . நிறைய நூல்கள் எழுதியிருக்கிறார்கள். வெங்களப்ப நாயனார் என்ற ஜமீன்தார் கூட இவ்வூரில் தான் இருந்தார்.

அவருடைய புண்ணியத்தில்தான் நாங்கள் கஸ்ரமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம்'' என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

பொழுது விடிந்து கவிஞரின் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

வீட்டுக்கு வந்தவுடன் வேலைக்காரனைக் கூப்பிட்டு ''பழையது கொண்டு வந்து கொடு'' என்றார் கவிஞர்.

வண்டிக்காரன் ''ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான் போகிறேன்'' என்றான்.

''நீ ஊருக்குப் போக நீண்ட நேரம் ஆகும் சாப்பிட்டுப் போ'' என்றார் கவிஞர்.

அவன் சாப்பிடவும் இல்லை. வாடகைப் பணம் வாங்கவும் இல்லை. அதற்கான காரணத்தைக் கேட்டார். கவிஞர்.

''நேற்று இரவு உங்கள் முன்னோர்களைப் பற்றிச் சொன்னீர்கள். அவர்களை ஆதரித்தவர் எங்கள் அப்பா. நாயக்கர் பரம்பரையில் பிறந்தவன்தான் நான்'' என்றான்.

எமது வீட்டுப் பெரியவர்கள் சொல்வார்கள். ''கொடுத்ததை வாங்காதே'' என்று அதுதான் எமது முன்னோர்கள் கொடுத்ததை நான் வாங்க விரும்பவில்லை என்றான் வண்டிக்காரன்.

**கோ.சுவாமிநாதன்.**

# என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

ஒருநாள் தனது வீட்டில் புத்தம் புதுக்காரின் முன்பகுதியை ஆசையோடு துடைத்துக் கொண்டிருந்தார் காரின் உரிமையாளர்.

வீட்டின் உள்ளேயிருந்து வந்த அவரது ஆறு வயது மகன் காரின் பின் பகுதியில் ஏதோ கருங்கல்லால் கிறுக்கிக் கொண்டிருந்தான். அதன் சத்தத்தைக் கேட்ட அப்பா காருக்குப் பின்னால் வந்து பார்த்தார்.

அவருக்குப் பயங்கரமாகக் கோபம் வந்தது. கருங்கல்லால் காரின் வர்ணப் பூச்சை கீறிக் கோரமாக ஏதோ எழுதி இருந்தான் அவரது மகன். இதனைக் கண்டதும் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் அந்தச் சிறுவனின் கையைப் பிடித்து பக்கத்தில் இருந்த பெரிய கல்லின் மீது வைத்து மற்றொரு கருங்கல்லால் மகனின் கையை நசுக்கினார் தந்தை.

''இப்படிக் கிறுக்குவியா...?'' என முதுகிலும் அடித்தார். அதன்பின் தான் அவரது ஞானக் கண் திறந்தது. ''ஐயோ பிஞ்சுப் பிள்ளையைப் போட்டு இப்படிக் கோபத்தில் அடித்துவிட்டேனே'' என்று யோசித்துக் கவலைப்பட்டார்.

மகனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அறுவைசிகிச்சை நடந்தது. மறுநாள் கண்விழித்துப் பார்த்த அவரது மகன் தனது கையை ஆச்சரியத்தோடு பார்த்தான்.



''அப்பா எனக்கு மறுபடியும் விரல்கள் எப்போது முளைக்கும்'' என மகன் தந்தையைக் கேட்டான்.

இதைக் கேட்டதும் தந்தை மனம் உடைந்து போய் விட்டார்.

நொருங்கிய இதயத்தோடு காரை நோக்கி நடந்து கொண்டிருந்த அவரைப் பார்த்து காரின் பின்புறமாக இருந்த அச்சிறுவனின் கிறுக்கல் அவரை ஏளனம் செய்வது போல் தென்பட்டது.

கோபத்தில் காரின் பின்புறத்தே கால்களால் உதைத்தார். பின்பு ஏதோ நினைவில் அந்தக் கிறுக்கலைப் பார்த்து அவமானத்தால் கூனிக்குறுகினார்.

அந்தக் கிறுக்கலில் ''அப்பா உன்னை நேசிக்கிறேன்'' என்று எழுதப்பட்டிருந்தது. அன்பை வெளிப்படுத்தியதற்கு இதுதான் தண்டனையா?

மகனுக்கு அன்பை ஒழுங்காக வெளிப்படுத்தத் தெரியவில்லை. அதுபோல் தந்தைக்கும் கோபத்தை வெளிப்படுத்தத் தெரியவில்லை. இதனால் வந்த வினைதான் இது.

**சு.கி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வளமான இரணைமடுக் குளத்தின் தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்துவோம்

## திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசனின் கருத்துப் பகிர்வு

மனிதனின் அன்றாட வாழ்வுக்கு மிக அத்தியாவசியமான வளம் நீர். வடமாகாணம் சகல வளங்களையும் தன்னகத்தே பூரணமாகக் கொண்டுள்ள பூமியாக வர்ணிக்கப்படுகின்றது.

எனினும் எமது குடிதண்ணீர்த் தேவை - விவசாயத் தேவை - கால்நடைத் தேவை - என்பவற்றுக்காக வளங்களைப் பங்கீடு செய்வது தொடர்பான பிரச்சினை - முரண்பாடு - என்பது நீண்டு செல்கிறது.

2000 கோடி ரூபா செலவில் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இருந்து யாழ்.குடா மக்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நன்னீரை கொண்டு வருவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டன.

**இலங்கையரசு – ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2000 கோடி ரூபா நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வலுவான திட்டத்துக்கு ஒன்றிணைந்து கைகொடுத்து வலுச் சேர்ப்போம்.**



இந்நிலையில் வளப் பங்கீடுகளில் பாதிப்பு உண்டா இல்லையா? இதற்கான தடைக்காரணிகள், திட்டத்தின் நோக்கு என்பன பற்றி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்- கிளிநொச்சி நீர்விநியோகத் திட்டத்துக்கான திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் 'உதயனுக்கு' வழங்கிய கருத்துகள் வருமாறு:-

யாழ்., கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்காக இரணைமடு நீர்த்தேக்கக் குளத்திலிருந்து நீரைப் பகிர்ந்து கொள்வதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கும் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்துக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக 2002இல் இருந்து கருத்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

இதுவரை 60 இற்கும் மேற்பட்ட முக்கிய கூட்டங்கள், கருத்தமர்வுகள், கலந்துரையாடல்கள் என்பன இது தொடர்பாக நிகழ்ந்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன்இணைந்து அரசாங்கம் 2000 கோடி ரூபா நிதியை இத்திட்டத்துக்கென ஒதுக்கீடு செய்தது. அதன் பின்னரே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமாக இரணைமடுக் குளத்து நீரைப் பாதுகாத்துப் பங்கீடு செய்து கிளிநொச்சி மற்றும்யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற பொறுப்பு எனக்கு உள்ளது.

இதனால் முக்கியகாலகட்டத்தில் அவசியமான கருத்துகளை மக்களுடன் பகிர வேண்டியுள்ளது.

இரணைமடுக் குளம் 106×500 ஏக்கர் அடி நீரைத் தேக்கக்கூடியது. அணைக் கட்டின் நீர் பிடிக்கும் எல்லை 34 அடி. 227 சதுர மைல் மழைநீர் ஏந்து பிரதேசத்தாலும் கனகராயன் ஆற்றாலும் இரணைமடுக் குளம் நிரப்பப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் கிளிநொச்சியில் கூடுதலான அளவில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் இரணைமடுக் குளத்தைப் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### இரணைமடு குளத்தின் இன்றைய நிலை

இரணைமடுக் குளத்தில் 34 அடிக்குப் பதிலாக 28 முதல் 30 அடிவரையே தற்போது நீர்பிடிக்கப்படுகிறது. மேலதிகமான நீர் வெளியே வழிந்தோட விடப்படுகின்றது.

சேதமடைந்த வான் கதவுகள் மற்றும் புனரமைக்கப்படாத அணைக்கட்டுகள் என்பன காரணமாக இவ்வாறு நீர் வெளியே வீணே செல்கிறது.

மேலும் இக்குளத்தின் பிரதான நீர் வழங்கும் கால்வாய்களும் சேதமடைந்துள்ளன. இதனாலும் பெருமளவு நீர் வீண் விரயமாகின்றது. மேட்டு நிலப்பயிர் செய்கைக்கான நீர் வழங்கல் உரிய புனரமைப்பின்மையால் தடைப்பட்டுள்ளது.

நேர்காணல்:
நவாலியூர் செ.ரமேஷ்

இத்தகைய நிலையை மாற்றி இரணைமடுக் குளத்து நீரைப் பயனுள்ள வகையில் மாற்றுவதற்குப் புனரமைப்புப் பணிகள் அவசியமாகின்றன.

மேலதிகமாக 2 அடியால் அணைக்கட்டை உயர்த்துதல், சேதமடைந்த அணைக்கட்டைப் புனரமைத்தல், அணைக்கட்டின் உறுதித் தன்மையை மேம்பாடு செய்தல், வான்கதவுகளை மீள்புனரமைப்புச் செய்தல் என்னும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் 15 ஆயிரம் ஏக்கர் அடி நீர் வருடத்துக்குச் சேர்க்கப்படக்கூடிய ஏதுநிலை தோன்றும். மேலும் சேதமடைந்த - தூர்ந்துபோன - பிரதான கால்வாய்களும் உடன் மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# போர் வடுமிழ்ந்த பெண்களின் கதை



தமது பதின்ம வயதுகளில் உள்ள எட்டு சிறுவர்களைப் பராமரிப்பது என்பது எழுபது வயது யமுனா தேவிக்கு இலகுவான காரியமாக இருக்கவில்லை.

ஆனால் இவர்கள் இருபதாண்டுகளுக்கு மேலாக சிறிலங்காவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட அவரது பேரக் குழந்தைகளாவர். ''எனக்கு வேறு வழி தெரியவில்லை. நான்தான் அவர்களைப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு வேறு யாரும் இல்லை'', என்கிறார் முல்லைத்தீவைச் சேர்ந்த யமுனா தேவி.

அவர்களில் நான்குபேர் மே 2009ல் முடிவுற்ற போரின் இறுதி நாள்களில் தமது பெற்றோரை இழந்தனர். ஏனைய நால்வருக்கும் தந்தை மட்டும் இருக்கிறார். அவரே தற்போது இந்தக் குடும்பத்திற்கான ஒரேயொரு உழைப்பாளி.

''என்னால் எவ்வளவு காலத்திற்கு இவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப முடியும் எனத் தெரியவில்லை'', என்கிறார் யமுனாதேவி.

இவ்வாறு ஈழத்தமிழ் பெண்களின் கண்ணீர்க் கதைகளை பதிவு செய்துள்ளது ஐபிஎஸ் செய்தித்தளம். அதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.

இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதியில் இவரது கதை மிகவும் பொதுவானது. தமது ஆண் உறவினர்கள் போரின் இறுதி நாள்களில் கொல்லப்பட அல்லது காணாமல்போக இளைய மற்றும் வயது முதிர்ந்த பெண்கள் தம்மைத் தாமே பார்த்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

2006 ஒகஸ்ட் முதல் 2009 மே வரை இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் மட்டும் 300,000 மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். 290,000 க்கும் மேற்பட்ட மக்கள் தமது இடங்களுக்கு மீண்டும் சென்றுள்ளனர். அல்லது தமது உறவினர்களுடன் வசிக்கிறார்கள். எவ்வாறிருந்தும், அவர்களது பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.

தமது இருபதுகளின் ஆரம்பத்திலும் முப்பதுகளின் நடுப்பகுதியிலும் 89,000 இற்கு மேற்பட்ட துணை இழந்த பெண்கள் போர் இடம்பெற்ற பகுதிகளில் இருப்பதாக அரசாங்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 49,000 துணை இழந்த பெண்களும் - இவர்களில் பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களின் மனைவிமார் - வடக்கில் 40,000 துணை இழந்த பெண்களும் இருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் எம்.ஏ.எம். கிஸ்புல்லா கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

தனது சொந்த மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்தில் 25,000 துணை இழந்த பெண்கள் இருப்பதாகவும் அவர்களில் 8,000 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மூன்று குழந்தைகள் இருப்பதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த துணை இழந்த பெண்களுக்கு உதவுவதற்காகதான் இந்தியாவின் உதவியை நாடியிருந்ததாக பிரதி அமைச்சர் கிஸ்புல்லா தெரிவித்தார். ''ஆடைத் தொழிற்சாலை ஒன்றை நாம் இங்கு ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்'', என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரான ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பெண்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு திட்டங்கள் வரையறுக்கப்படாததினால் பெண்கள் பொதுவாகவே தமக்கான நிரந்தர தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களுக்கு வேலை கிடைத்தாலும் மிகக்குறைந்தளவு ஊதியமே வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு, மட்டக்களப்பு மாவட்டத்தின் புல்லுமலையைச் சேர்ந்த ரவிந்திரநாதன் வளர்மதி வாரத்தில் 6 நாள்களுக்கு பால் சேகரிப்பதன்மூலம் மாதம் 17 டொலர்களே சம்பாதிக்கிறார்.

போர் முடிவுற்றதால் தமது வாழ்வு வளம்பெறும் என எதிர்பார்த்த பலருக்கு இத்தகைய சூழ்நிலை குறிப்பாக துணை இழந்த பெண்களுக்கு அவநம்பிக்கையையே ஏற்படுத்துகிறது.

''உங்களுக்கு கணவன் இல்லாமல், உங்களுக்கென குடும்பம் இல்லாமல் நீங்கள் தனியே இருப்பது மிகவும் கடினமானது'', என்கிறார் வாகரை உதவி அரச அதிபர் ராசநாயகம் ராகுலநயனி.

''உதவிகள் இல்லாதபோது, பெண்கள் மிகவும் பலவீனமானவர்களாக உணர்வார்கள்'', என்கிறார் போரில் தனது தந்தையை இழந்ததாகக் கூறும் அவர்.

ராகுலநயனி எம்முடன் கதைத்துக் கொண்டிருந்த போது கூட, அரை டசினுக்கும் அதிகமான துணை இழந்த பெண்கள் இழந்த தமது அடையாள ஆவணங்களைப் பெறுதல் மற்றும் சொத்து தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொறுமையுடன் வெளியே காத்திருந்தனர்.

''ஆணாதிக்க சமூக முறைமைக்குள் துணை இழந்த பெண்களும், கணவனில்லாத பெண்களும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்'', என்றார் ராகுலநயனி.

பாரம்பரியமாக, ஆண்கள் குடும்பத்தைத் தலைமை தாங்க அவர்களைச் சார்ந்து பெண்கள் வாழும் முறைமையையே தமிழ் சமூகம் பின்பற்றி வருகிறது. இந்நிலையில், ஆண்களின்றி குடும்ப விடயங்களைக் கவனிப்பது, தனியார் மற்றும் அரச நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களைத் தொடர்புகொள்ளல் போன்ற புதிய பாத்திரத்தை ஏற்றுக் கொள்வதில் இந்த துணை இழந்த பெண்கள் சங்கடங்களை எதிர்கொள்கின்றனர்.

ராகுலநயனியை சந்திக்க வந்திருந்த இரு பிள்ளைகளின் தாயாரான 27 வயதுடைய சரோதேவியின் கணவர் [illegible] தப்பி வரும் போது காணாமல்போய்விட்டார். ''அவர் எங்கே இருக்கிறார், உயிருடன் இருக்கிறாரா என்பதுகூட எனக்குத் தெரியாது'',என்கிறார் தேவி.

தொடர்ந்து, தேவி தனது சொந்த இடமான வாகரைக்குத் திரும்பிவிட்டார். ''அவர் உதவி செய்ய மறுத்ததால் புலிகள் அவரை தடுத்து வைத்திருந்தனர். எறிகணைகள் வெடித்துக் கொண்டிருந்தபோது நாம் ஓடும்போதே அவர் காணாமல் போனார். நாள் முழுவதும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது. நாம் எவ்வாறு தப்பினோம் என்பதே எமக்குத் தெரியாது''.

இந்தவேளையில், தனது கணவனைத் தேடுவதே தேவிக்கு எல்லாவற்றையும்விட நம்பிக்கை தருவதாக உள்ளது. அதேவேளையில், அவள் தனது குடும்பத்தையும் காப்பாற்றவேண்டியுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள வாகரையில் மக்களின் பிரதான சீவனோபாயம் விவசாயமும் மீன்பிடியுமாக இருப்பதால் அங்கு வேலை வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும்.

''தற்போது நான் எதுவும் செய்யவில்லை. நான் எனது குடும்ப உறவினர்களுக்கு வயலில் உதவி செய்வேன். அவர்கள் எனக்குப் பணம் தருவார்கள்'', எனும் தேவிக்கு தனது தங்க நகைகளை விற்பதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை.

தேவிக்கு அடுத்ததாக வரிசையில் நின்ற 29 வயதுடைய நவுனாத் சுதாவிடம் எந்த நகையும் இல்லை. யாவற்றையும் விற்றுவிட்டார். சுதாவின் கதையும் தேவியினுடையதைப் போன்றதே.

வாகரையைச் சேர்ந்த அவரும் வடக்கைச் சேர்ந்த ஒருவரை மணந்து ஓடிவரும்போது கணவரைப் பிரிந்துவிட்டார். ஆனால் தேவியைப் போலன்றி, ஏப்ரல் 2009இல் காணாமல்போன தனது கணவன் இராணுவத்தின் தடுப்பில் இருப்பதாகவே சுதா நம்புகிறார்.

''எனக்கு ஆதாரம் ஏதாவது கிடைக்கும்வரை நான் அவரைத் தேடிக்கொண்டிருப்பேன்''. அதேவேளையில், நாளாந்த வாழ்க்கைப் போராட்டம் சுதாவை அழுத்துகிறது. அரசாங்கப் பணியாளர்களின் உதவியுடன் தையல் இயந்திரம் ஒன்றை வாங்குவதற்காக அவர் வந்திருந்தார்.

''நான் வீட்டில் ஆடைகளைத் தைத்து பணம் சம்பாதிப்பேன்'', என்கிறார் அவர்.

நன்றி:புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கான கடல் பயணத்தின்போது உயிரிழந்த ஈழத்தமிழரின் விவரங்கள்

கொழும்பு, நவ. 2

ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் பெறுகின்றமைக்காக மேற்கொண்ட சுமார் ஒன்றரை மாத படகுப் பயணத்தின்போது இம்மாதத்தின் இரண்டாம் வாரத்தில் உயிர் இழந்த இலங்கைத் தமிழரின் பெயர் விவரங்கள் தெரியவந்துள்ளன.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான ஜக்ஸன் (வயது-24), மற்றும் டிசான் (வயது 26), கிளிநொச்சி மாவட்டத்தின் உதயபுரம் நகர்ப் பகுதியைச் சேர்ந்த ரகுமார் செல்வரஞ்சினி ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

நடுக்கடலில் கப்பல் பழுதடைந்து நின்றபோது மீன்பிடிப் படகு ஒன்றைக் கண்ட ஜக்ஸன் அப்படகில் சென்று கொண்டிருந்தவர்களிடம் உதவி கோருகின்றமைக்காக உயிரைப் பணயம் வைத்து கடலில் குதித்தபோது நீரில் மூழ்கி இறந்துவிட்டார்.

மேலும், படகோட்டியின் உதவியுடன் கட்டு மரம் ஒன்று கட்டப்பட்டது. இக்கட்டு மரத்தில் சென்று அருகில் உள்ள ஏதேனும் ஒரு சிறிய தீவை சென்றடையலாம் என்ற நம்பிக்கையில் படகோட்டியும், டிசானும் பயணித்தனர்.

இடையில் கட்டுமரம் கடலில் மூழ்கத் தொடங்கியது. படகோட்டி ஒருவாறு நீச்சல் போட்டுத் தப்பினார். டிசான் உயிர் இழந்து விட்டார்.

இந்தோனேசியாவின் பனைடான் தீவை இவர்கள் சென்றடைந்தபோது கரை ஒதுங்குகையில் கருங்கல் பாறை ஒன்றுடன் தலை மோதுண்டு செல்வரஞ்சினி உயிரிழந்தார்.

இவர் ஒரு குழந்தையின் தாய் ஆவார். இத்தமிழர்களில் ஒரு தொகையினர் மன்னாரில் இருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி படகு ஒன்றில் புறப்பட்டிருந்தனர்.

இந்தியாவுக்கு அருகில் உள்ள கடல் பகுதி ஒன்றை இரு நாள்களில் சென்றடைந்தனர். இந்தியாவில் இருந்து வந்து இணைந்து கொண்ட இலங்கைத் தமிழர்கள் ஒரு தொகையினரையும் சேர்த்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்து இருந்தனர்.

கடந்த 14 ஆம் திகதி பனைடான் தீவை சென்றடைந்திருந்தனர். அங்கு பசிக் கொடுமையால் நத்தைகளைக் கூடச் சாப்பிட்டு இருக்கின்றனர். இவர்களை இந்தோனேசிய கடல் படையினர் கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவு நேரம் காப்பாற்றி இருக்கின்றனர்.

மறுநாள் இத்தமிழர்கள் தலைநகர் ஜகார்த்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டு மிகவும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். (சி)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்காணிக்க உபசெயற்குழு

கொழும்பு,நவ. 2

அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கு விசேட உப செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கிலும், துஷ்பிரயோகங்களை கண்காணிக்கும் நோக்கிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இந்த உப செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது என அதிகாரசபைத் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (சி)


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



நாகலிங்கம் தனபாலன் (மலையன்)

தோற்றம் 22.02.1962 மறைவு 04.10.2010

கடந்த 04.10.2010 திங்கட்கிழமை சுவிற்ஸர்லாந்தில் அமரத்துவமடைந்த எமது அருமை மகனின் மறைவையொட்டி துயரத்தில் நேரடியாகப் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தந்திமூலமாகத் தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினரின் நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன்,
நாளை (03.11.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(105381)

'வயலை இல்லம்', பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

திருமதி நாகலிங்கம் சின்னம்மா (தாய்).

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 06 . 1950



மறைவு 16 . 11 . 2006

திருமதி நகுலேஸ்வரி இராகவன்

(B.A., Diploma in Education)
(ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)
திதி: அபரபக்க ஏகாதசி

வீட்டுக்குத் திருவிளக்காய்
வீற்றிருந்த பெருமாட்டி
பாட்டுக்கு இசையாய்
பழகிவந்த சீமாட்டி
எம்மையெல்லாம் ஏங்கவிட்டு

ஓடி மறைந்து ஆண்டுகள்
நான்கு ஆனதுவோ
உந்தன் நினைவுத் தடத்தினிலே
எந்தன் இருப்புத் தொடர்கிறது.

ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அம்பலவாணர் பாதை, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(105403) கணவர், குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மழலையாக 13 . 06 . 1931



அமரராக 03 . 10 . 2010

அமரர் கந்தையா குலசிங்கம்

எங்கள் அன்புத் தெய்வமே!- நாள்கள்
எத்தனை சென்றாலும் பசுமையான
உங்கள் நினைவுகள் மட்டும்
எம்மிடமிருந்து எந்நாளும் அகலாது.

உங்கள் நினைவுடன்:

15, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1054156)

## மரண அறிவித்தல்

## செல்லத்துரை சிங்கராசா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இல.12, சுப்பிரமணியம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிங்கராசா (புகையிரத ஓய்வூதியர்), (30.10.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை- கண்மணி தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, சிவராசா, நாகேஸ்வரி மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரரும் பரமேஸ்வரன் (ஜேர்மனி), சுசீலாதேவி (கொழும்பு), விக்கினேஸ்வரன்(சுவிஸ்), ஜெயதேவி(சுவிஸ்), சுபத்திராதேவி (சுவிஸ்), காஞ்சனாதேவி, குகணேஸ்வரன் (சுவிஸ்), கமலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவதனி (ஜேர்மனி), யோகராஜா (இத்தாலி), சுதா (சுவிஸ்), சண்முகதேவன் (சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்), வசந்தன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி), அனுஜா (சுவிஸ்), சுதர்சினி (ஆசிரியை, நவக்கிரி அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரசாத், இந்துஜா, இலக்கியா, யசிந்தன், தர்சன், கௌதமன், நதுஷன், லக்ஷன், கசிதன், கசிதா, சாகித்தியா, மிருதாஞ்சன், தேனுஹர் ஷன், அஷானா, அஸ்வினா, விதுஷன், ரபீஷன், கிருஷ்ணாலினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 12, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.
T.P.: 021 222 7185.

(105431)

தகவல்:
மனைவி -மகேஸ்வரி, பிள்ளைகள், மருமக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்களில் தொடரும் பயணிகள் நெருக்கடி; கலாசார சீரழிவுகளுக்கும் கொள்ளைகளுக்கும் திறந்து விடப்படும் வழிகள்



மாலு சந்தியில் இருந்து 750 இலக்க மினிபஸ்ஸில் யாழ்ப்பாணம் நோக்கி எனது பயணத்தை ஆரம்பித்தேன். நேரம் செல்லச் செல்ல பஸ்களில் பயணிகள் நெருக்கடி ஏற்படத் தொடங்கியது. ''தம்பி கொஞ்சம் பஸ் ஓடுகிற பக்கம் திரும்பி நில்லுங்கோ. உந்த இடத்தில் ஐந்து பேர் நிற்கலாம்'' என்று பஸ் நடத்துநர் சொல்லியது காதிலே விழுந்தது. ''கால் வைக்கவே இடமில்லை. இந்த இடத்தில் ஐந்து பேரை எப்படி ஏற்றப்போகினம்?'' என்று எனக்குள் சிந்தித்தபடி பயணத்தைத் தொடர்ந்தேன். இன்னுமின்னும் பயணிகள் பஸ்ஸில் ஏற்றப்பட்டனர்.

நெருக்கடி குறித்து விசனித்தபடி 'திரும்பி நில்லுங்கோ' என்று சொன்ன நடத்துநரிடம் முதியவர் ஒருவர் சொன்ன வார்த்தை என் காதிலே விழுந்தது. ''தம்பி பஸ்டிக்கியினுள்ளும் ஐந்து பேரை ஏற்றலாம்; ஏற்றுங்கோவன்''

அவரின் நகைச்சுவையான வார்த்தையைக் கேட்டு சிரித்தாலும் அது ஒரு புலம்பலாகவே எனக்குப்பட்டது.

இவ்வாறு நிற்கமுடியாத, கால் வைக்க முடியாத இடத்தில் நின்று பயணித்தபடி (பயணித்த என்ற வார்த்தையை விட வௌவால் மாதிரி தொங்கியபடி) என் பயணம் தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கியவுடன் ஒரு முதியவர் சொன்னார். ''தம்பி இந்த பஸ்ஸில் வாறது என்றால் உலகசாதனை தான்'' எனவே உலக சாதனை ஒன்றை நிகழ்த்திய 'பெருமையுடன்' யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். இதுவே பஸ் பயணிகள் பலரின் நிலை.

இதேவேளை இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. மாலை வேளையில் யாழிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த பெண்ணொருவரின் கைத் தொலைபேசி அண்மையில் கொள்ளையடிக்கப்பட்டது நெல்லியடியில் வந்து இறங்கும் போதே தனது தோளில் கொழுவப்பட்ட பையினுள் இருந்த கைத்தொலைபேசி கொள்ளையடிக்கப்பட்ட விடயம் அவருக்குத் தெரிய வந்தது. அந்த அளவுக்கு குறித்த கைத்தொலைபேசி லாவகமாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த அந்தப் பெண்ணிடம் கேட்டபோது ''பஸ்ஸில் அளவிற்கு அதிகமாக நெருக்கடி இருந்ததால் என்னால் கவனிக்க முடியாமல் போய்விட்டது'' எனத் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் பஸ் ஒன்றில் பயணித்த போது நெருக்கடியால் மூன்று வயதுக் குழந்தை ஒன்று சுவாசிக்க கஸ்டப்பட்ட அவலமும் நிகழ்ந்திருக்கின்றது.

இதேவேளை இத்தகைய பஸ்களில் பயணம் செய்யும் பெண் பிள்ளைகள் பாரிய அசௌகரியங்களை சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நெருக்கடிகள் எதிர்காலத்தில் கலாசார சீரழிவுகளுக்கும் வழிவகுக்கலாம் அல்லவா?

ஆனால் பஸ் பற்றாக்குறை ஆளணி பற்றாக்குறை என்ற பழைய புராணத்தையே வட பிராந்திய போக்குவரத்துச் சபை திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை இது தொடர்பாக பருத்தித்துறை தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவரை தொடர்பு கொண்டு கேட்டபோது தற்போது இருக்கின்ற நேர இடைவெளியைக் குறைத்து கூடிய பஸ்களை சேவையில் ஈடுபடக்கோரி கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றோம். அனுமதி கிடைத்தால் கூடிய பஸ்களை குறைந்த நேரத்தில் சேவையில் ஈடுபடுத்த தயாராக உள்ளோம். இதன் மூலம் அதிகளவிலான மக்களை ஏற்றும் நிலை மாற்றம் அடையும் என்று தெரிவித்தார்.

இதேவேளை இரு தரப்பினரும் தமது தரப்பு நியாயங்களை முன் வைத்தாலும் மக்களின் அவலங்களை புரிந்து கொள்ளத் தயாராகவில்லை என்பதே வெளிப்படை உண்மை ஆகும். இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ''இருளை பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேலான செயல்.'' இல்லாத ஒன்றை பற்றி புலம்புவதை விட இருக்கின்றதை சிறப்பாக பயன்படுத்துவதே மேலான செயல். எனவே இருக்கின்ற மினிபஸ்களின் சேவை நேர இடைவெளியை குறைத்து குறைந்த நேர இடைவெளியில் பஸ்களை செல்ல அனுமதிக்கலாம். அதற்கு சிற்றூர்திச் சங்கத்துக்கு அனுமதியைக் கொடுக்க வேண்டிய தரப்பு மக்கள் நலன் கருதி உடனடியாக அனுமதியை வழங்கி சிறப்பான சேவை மக்களுக்குச் சென்றடைய ஆவன செய்யவேண்டும்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச்சபை தம்மை நியாயப்படுத்த முன்வருவதை விடுத்து தமது சேவை நேரங்களை ஒழுங்குபடுத்தி மேலதிக பஸ் பிரயாணங்களை ஏற்படுத்த வேண்டும். அப்படியில்லாமல் தொடர்ந்தும் இதேபோன்ற நிலை தொடருமானால் கொள்ளைகளுக்கும் ஏனைய பிரச்சனைகளுக்கும் வழிசமைத்து கொடுக்கும் இடங்களாக பஸ் பிரயாணங்கள் மாறிவிடக்கூடும்.

தொகுப்பு - ஹரீஸ்

# வெற்றிச் சாதனைப் பயணத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி




''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவன் மாய்ந்து விட்டான் - வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதன் தலைகவிழ்ந்தான்'' என்ற பாரதியின் வரிகளின் படி, மாதர்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி வரும் பாடசாலைகளில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் ஒன்று.

பருத்தித்துறை புலோலிப் பகுதியிலே அமைந்து அறிவொளி பரப்பி சைவத்தையும், உயிரினும் மேலான தமிழ் மொழியையும் பெண்களுக்கு ஊட்டி வரும் வடமராட்சியிலுள்ள பெண்கள் பாடசாலைகளில் இது முதன்மையானது.

மு.கார்த்திகேசு என்பவரின் அயராத முயற்சியின் பலனாக அவரது இல்லத்தில் 23.07.1944 உதயமான இப்பாடசாலையை வைத்திய கலாநிதி சபாபதி ஐயர் 46 மாணவர்களுடன் ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் 1945ஆம் ஆண்டு தற்போதைய அமைவிடத்துக்கு இப்பாடசாலை மாற்றப்பட்டு பின்னர் 'எஸ்.எஸ்.சி வரை கற்கும் 369 மாணவர்களுடன் 01.10.1946 இல் அரச உதவி பெறும் பாடசாலையாகப்பதிவு செய்யப்பட்டது.

''உன்னை அறி'' என்ற மகுட வாசகத்துடன் பல்வேறு கட்டுமானங்களையும் இப்பாடசாலை தாங்கி நிற்கிறது.

1944 இல் அடிக்கல் நாட்டப்பட்ட இப்பாடசாலையின் பிரார்த்தனை மண்டபம் 1954இல் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் எஸ்.இரத்தினசிங்கம் டாக்டர் எஸ்.சுப்பிரமணியம், வி.கே.சிவப்பிரகாசம் திருமதி நல்லையா போன்றோரின் முயற்சியால் வகுப்பறை கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. இரசாயனவியல் ஆய்வுகூடத்துக்கு சபாபதி என்பவரால் அடிக்கல் நடப்பட்டு அவரது மகனால் பூர்த்தி செய்யப்பட்டது. பின்னர் தாவரவியல் பௌதீகவியல் ஆய்வு கூடங்களும் இங்கு அமைக் கப்பட்டன.

1957 காலப்பகுதியில் பொன்னையா என்பவர் பாடசாலைக் கான விடுதி ஒன்றை அமைத்துக் கொடுத்தார். அதே காலப்பகுதியில் அதிபர் செல்வி சரவணமுத்துவின் அயராத முயற்சியின் விளைவாக 1ஏபி (முதலாந்தர) பாடசாலையாக இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டது.

ஆனால் பிற்காலப்பகுதியில் - 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் - இலங்கை அரசு பாடசாலைகளை பொறுப்பேற்ற சூழ்நிலையில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் தளம்பல் நிலை ஏற்படத் தொடங்கியது. ஆயினும் அத்தகைய சோதனைகளையெல்லாம் எதிர்கொண்டு அபிவிருத்திப்பாதையில் மிடுக்குடன் பயணிக்கத் தொடங்கியது வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

1967 காலப்பகுதியில் திருமதி காயத்திரி கணேசன் இக்கல்லூரியின் அதிபராகப் பதவி ஏற்றார்.

இவரின் காலப்பகுதியில் இப்பாடசாலையில் நடராஜபெருமானின் உருவம் அமைக்கப்பட்டு, சைவப்பாரம்பரியமும் இறை சிந்தனையும் மாணவர்கள் மத்தியில் மேம்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் இப்பாடசாலை அனைத்துச் செயற்பாடுகளும் ஏறுமுகம் காணத்தொடங்கியது. இக்கட்டான சூழ்நிலைகளிலும் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாத்து வரும் பாடசாலையாக இது விளங்குகிறது.

பின்னர் 1983 காலப்பகுதியில் இலங்கையின் அரசியல் குழப்ப நிலைகள் இப்பாடசாலையின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தின. யுத்த அனர்த்தங்களால் இப்பாடசாலையின் பௌதீக கட்டுமானங்களுக்குப் பெருஞ்சேதங்கள் உண்டாகின. இதனால் இப்பாடசாலையின் வளர்ச்சி பாதிப்படைந்தாலும் மீண்டும் அந்தப் பாதிப்புகளிலிருந்து உயிர்த்தெழுந்து இன்று பழையபடி சிறந்த பாடசாலையாக நிமிர்ந்து நிற்கிறது. பாட விதான அடைவுகளில் இப்பாடசாலை மாணவிகள் பாராட்டக்கூடிய இடத்தினைப் பெற்று வருகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

ஆசிரியர்
திரு.பி.பிரபாகரன்,
ப/மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம், பதுளை.
தொ.பே.இல: 077-1887035

G.C.E.(O/L) வலம்-4 வெளியீடு-2 பதுளை

## கணிதம் - I — 2 மணித்தியாலங்கள்


### பகுதி - A

01. ஒரு தோடம்பழத்தின் விலை ரூ 7.50 எனின், 8 தோடம்பழங்களின் விலை எவ்வளவு?

02. 3.2 லீற்றரை மில்லிலீற்றறில் தருக.

03. தீர்க்குக. $3/x = 5$

04. தரப்பட்ட உருவில் a யின் பருமனைக் காண்க.




05. இரண்டை துவித எண்ணாகத் தருக.

06. $4x^2 - 4x$ எனும் கோவையின் ஒரு காரணி $4x$ எனின், மற்றைய காரணியை எழுதுக.

07. 5, 6, 6, 7, 8 ,9, 10 என்ற எண் பரம்பலின் இடையம் யாது?

08. x = { 5454 எனும் எண்ணிலுள்ள இலக்கங்கள்} எனும் தொடையில் x இன் முதலிமை யாது?

09. $n = 3$ ஆகும் போது $n^2-2$ இன் பெறுமானம் யாது?

10. ரூ. 200 இன் 20% எவ்வளவு?

11. ஒரு வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான விகிதம் 7 : 3 ஆகும். ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையை அவ்வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக.


12. சுருக்குக. $10/(2a-3) - 4/(3-2a)$

13. ஓர் ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணமானது புறக்கோணத்தின் இரு மடங்காகும். எனின், அப்பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கையை காண்க.

14. $y = x^2 - 6x$ எனும் சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.

15. ஒரே உயரமுள்ள உருளை ஒன்றினதும் கூம்பு ஒன்றினதும் அடியின் ஆரைகளுக்கு இடையிலான விகிதம் 4 : 3 எனின், அதன் கனவளவுகளுக்கு இடையிலான விகிதம் யாது?

16. PQ என்பது வட்டமொன்றை A யில் தொடும் தொடலியாகும். B,C என்பன வட்டத்தின் பரிதியிலுள்ள புள்ளிகளாகும். தரவுகளை அவதானித்து < BAC யின் பருமனைக் காண்க.




17. காரணி அறிவை பயன்படுத்தி சுருக்குக. $91^2 + 819$

18. $V^2 = U^2 + 2as$ எனும் சூத்திரத்தில் U ஐ எழுவாயாக்குக.

19. $\lg 5 = 0.6990$ எனின், $\lg 2$ இன் பெறுமானத்தைக் காண்க.


20. 12% பங்கிலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூ. 8 பங்குகளை ரூ. 9 வீதம் வாங்கிய ஒருவருக்கு வருட வருமானமாக ரூ. 960 கிடைத்தது. எனின், அவர் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரையான பெறுமானத்தைக் காண்க.

21. $X^2, X^3, (X^2+3X)$ ஆகியவற்றின் பொ.ம.சியைக் காண்க.

22. சுருக்கி எளிய வடிவில் தருக. $\sqrt{32} - \sqrt{8}$


23. கமல், அமல் எனும் மாணவர்களின் கடிகாரங்கள் முறையே 20, 15 நிமிடங்களுக்கு ஒரு முறை மணி ஒலிக்கும். இருவரினதும் கடிகாரங்கள் நண்பகல் 12.00 மணிக்கு ஒன்றாக ஒலித்தன. எனின், மீண்டும் ஒலிக்கும் நேரத்தை 24 மணித்தியால நேரமாகத் தருக.

24. இணைகரம் PQRS இல் பக்கம் SR இன் நடுப்புள்ளி T ஆகும். முக்கோணி PST இன் பரப்பளவு $24cm^2$ எனின், இணைகரம் PQRS இன் பரப்பளவு யாது?




25. ஒருவர் தனது மோட்டார் வண்டியில் 80km தூரத்தை 4 மணித்தியாலத்தில் சென்று முடித்தார். அவர் அத்தூரத்தை 2 மணித்தியாலங்கள் முன்னதாக செல்வதாக இருந்தால், அவரது மோட்டார் வண்டியை செலுத்த வேண்டிய கதியை காண்க.


26. முக்கோணி ABC இல் < AXY = < ACB ஆகும். தரவுகளின்படி AY இன் நீளத்தைக் காண்க. AC = 15cm, AX = 6cm, BX = 3cm.




27. 12 இற்கும் 96 இற்கும் இடையிலுள்ள இரு கூட்டல் இடைகளை எழுதுக.

28. X என்பது நேர் முழு எண்ணாகும். $X+5 \leq 12$ எனும் சமனிலியை திருப்திப்படுத்தும் மிகப் பெரிய, மிகச்சிறிய பெறுமானங்களைத் தருக.

29. இங்கு A, B என்பன இரு நிலைத்த புள்ளிகளாகும். புள்ளி P ஆனது $< APB = 30^0$ ஆகுமாறு அசைகின்றது. P யின் ஒழுக்கினை மேற்படி பரும்படிப் படத்தில் வரைந்து காட்டுக.





30. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூ 52.50. ஒரு லீற்றர் பெற்றோலில் 12km தூரம் பயணம் செய்யும் வாகனம் ஒன்று 18km தூரத்தைச் சென்று மீண்டும் திரும்பி வர பெற்றோலுக்குச் செலவாகும் பணத்தைக் காண்க.

### பகுதி - B


01. நீர்த்தாங்கி ஒன்றில் 3/4 பங்கு நீர் உள்ளது. அதில் 15l பாவனைக்கு எடுத்த பின்னர், தாங்கியின் கொள்ளளவின் 3/5 பங்கு நீர் எஞ்சி இருந்தது.
   1) பாவனைக்கு எடுத்த நீர் முழுத்தாங்கியின் கொள்ளளவின் என்ன பின்னம்?
   2) தாங்கியின் கொள்ளளவு யாது?
   3) தாங்கியிலிருந்த நீரின் அளவு யாது?
   4) எஞ்சியுள்ள நீரில் 1/2 பங்கை வேறு தேவைக்கு பயன்படுத்திய பின் எஞ்சிய நீரின் அளவை முழுத்தாங்கியின் கொள்ளளவின் சதவீதமாகத் தருக.

02. துஷித், ஷான் ஆகிய இருவரிடமும் இருந்த பணத்தின் விகிதம் 4 : 5 ஆகும். ஷான் ரூபா 50 ஐ துஷித்திற்கு கொடுத்தால் தற்போதைய விகிதம் 2 : 1 ஆகும்.
   1) ஆரம்பத்தில் அவர்களிடம் இருந்த பணம் X மடங்கு எனக்கொண்டு, ஒவ்வொருவரிடமும் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகையை X சார்பாக எழுதுக.
   2) ஷான் ரூ. 50 ஐ துஷித்திற்கு கொடுத்த பின்பு ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற பணத் தொகையை X சார்பாக எழுதுக.
   3) தரவுகளின்படி X இல் ஒரு சமன்பாட்டை எழுதி, அதனை தீர்த்து X இன் பெறுமானத்தைக் காண்க.
   4) ஒவ்வொருவரிடமும் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகையைக் காண்க.

03. 14cm ஆரையுள்ள வட்டவடிவத் தகட்டிலிருந்து ABCD எனும் சதுரத்தகடு வெட்டி எடுக்கப்படுகின்றது.
   1) சதுரத்தின் மூலைவிட்டம் AC இன் நீளம் யாது?
   2) முக்கோணி ABC இன் பரப்பளவு யாது?
   3) சதுரம் ABCD இன் பரப்பளவு யாது?
   4) சதுரத்தை வெட்டி எடுத்த பின் எஞ்சியதகட்டின் பரப்பளவு யாது?




04. சர்வதேச பாடசாலை ஒன்றில் கற்கும் 33 மாணவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளில் ஒன்றாவது தெரிந்தவராக இருத்தல் வேண்டும். அத்தரவுகளை உள்ளடக்கிய வென்வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.
   (E - ஆங்கிலம், F - பிரெஞ்சு, J - ஜேர்மன்)




   1) ஒரு மொழியில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை யாது?
   2) தரவுகளைப் பயன்படுத்தி X இன் பெறுமானத்தைக் காண்க.
   3) ஆங்கிலம் தெரிந்தோர் எத்தனை பேர்?
   4) வெண்ணுருவில் 3ஆல் குறிக்கப்படும் பிரதேசத்தை தொடைக் குறியீட்டில் எழுதுக.
   5) இவர்களில் ஒருவரை எழுமாற்றாக தெரிவுசெய்தால் அவர் இரு மொழிகளில் மட்டும் தேர்ச்சி பெற்றவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

05. 1) தீர்க்குக. $5(2X - 3)-1 = 9$
   2) செங்கோணமுக்கோணி ஒன்றின் செம்பக்கம் 10cm ஆகும். எஞ்சிய பக்கங்களில் ஒன்று மற்றையதை விட 2cm கூடுதலாகும்.
      1. பைதகரஸ் தேற்றத்தை உபயோகித்து. ஒரு பக்கத்தை X என கொண்டு X இன் ஒரு சமன்பாட்டை அமைக்க.
      2. அதனை தீர்த்து முக்கோணியின் எஞ்சிய இருபக்கங்களையும் காண்க.

## கணிதம் - II — நேரம்: 2 மணித்தியாலங்கள்

### பகுதி A - எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 1) ஒருவர் இரு தையல் இயந்திரங்களை ஒன்று ரூபா 7,500 வீதம் வாங்கி அவற்றுள் ஒன்றை ரூபா 8,300 இற்கும், மற்றையதை ரூபா 7,900 இற்கும் விற்றார்.
      1. அவர் பெற்ற இலாபம் எவ்வளவு?
      2. அவர் பெற்ற இலாபச் சதவீதம் எவ்வளவு?
   2) ஒருவர் தனது வீட்டிற்குக் காலாண்டு ஒன்றுக்கு ரூ. 440 வரியாக செலுத்துகிறார். நகரசபை வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தின் 22% ஐ வரியாக அறவிடுகின்றது.
      1. ஆண்டு ஒன்றுக்கு செலுத்தப்படும் வரித்தொகையைக் காண்க.
      2. வீட்டின் ஆண்டுப் பெறுமானம் எவ்வளவு?

02. 1) ஒரு வீட்டு உரிமையாளர் திங்கட்கிழமை 5 இறாத்தல் பாணையும், 1kg சீனியையும் வாங்கினார். செவ்வாய்க்கிழமை 7 இறாத்தல் பாணையும், 2kg சீனியையும் வாங்கினார். எனின்,
      1. இத்தகவல்களை ஒரு தாயத்தினால் வகைகுறித்து அதன் வரிசையை எழுதுக.
      2. 3 இறாத்தல் பாணினதும் 1kg சீனியினதும் விலை ரூபா 21 ஆகும். 9 இறாத்தல் பாணின் விலையானது 4kg சீனியினது விலைக்குச் சமனாகும். இத்தகவல்களைக்கொண்டு ஒருங்கமைசமன்பாட்டுச்சோடி ஒன்றை உருவாக்கி ஓர் இறாத்தல் பாணினதும், 1kg சீனியினதும் விலையைத் தனித்தனியே காண்க.
      3. இதற்கேற்ப அவர் திங்கட்கிழமையை விட செவ்வாய்க்கிழமை எவ்வளவு கூடுதலான பணத்தை செலவிட்டார் என்பதைக் காண்க.
   2) $A=\begin{pmatrix} 3 & -6 & 4 \\ 5 & 9 & -7 \end{pmatrix}$ $A-B = \begin{pmatrix} 4 & 1 & -3 \\ 2 & -2 & 1 \end{pmatrix}$
      ஆக இருக்குமாறு தாயம் B ஐக் காண்க.

03. 1) $y=x^2+2x$ எனும் வரைபை வரைவதற்கு மாறிகள் x, y இன் பெறுமானங்கள் அடங்கிய அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 8 | 3 | 0 | ....... | 0 | 3 | 8 |

      1. x=-1 ஆக இருக்கும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.
      2. உகந்த ஓர் அளவிடையைத் தெரிந்தெடுத்து மேற்குறித்த அட்டவணையைக் கொண்டு சார்பின் வரைபை வரைக.
   2) உமது வரைபைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
      1. சார்பு மறையாக இருக்கும் x இன் பெறுமான ஆயிடையைக் காண்க.
      2. இழிவுப்புள்ளியின் ஆள்கூறு யாது?
      3. $y=-x$ எனும் நேர்கோட்டை அதே ஆள்கூற்றுத் தளத்தில் வரைந்து அதிலிருந்து $x^2+3x= 0$ இன் மூலகங்களை எழுதுக.

04. 1) ரவி ஒவ்வொரு நாளும் இரவு தொலைக்காட்சி பார்ப்பான். அல்லது கதைப்புத்தகம் வாசிப்பான். அவன் தொலைக்காட்சி பார்ப்பதற்கான நிகழ்தகவு 3/5. அவன் தொலைக்காட்சி பார்த்து நித்திரையாவதற்கான நிகழ்தகவு 2/3 ஆகும். புத்தகம் வாசித்து நித்திரையாவதற்கான நிகழ்தகவு 1/3 ஆகும்.
      1. அவன் இரு சந்தர்ப்பங்களிலும் நித்திரையாகும், ஆகாமையைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.
      2. அதிலிருந்து அவன் தொலைக்காட்சி பார்த்து நித்திரை ஆகாமைக்கான நிகழ்தகவைக் காண்க.
      3. அவன் நித்திரை ஆவதற்கான நிகழ்தகவைக் காண்க.
   2) வகுப்பறையொன்றிலுள்ள 35 மாணவர்களில் சிங்களம் பேசுவோர் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது. 13 பேர் பெண்களாவர். 6 ஆண்களுக்கு சிங்களம் பேசத்தெரியாது. தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தில் நிழற்றிய பிரதேசத்தைச் சொற்களில் விவரித்து a இன் பெறுமானத்தைக் காண்க.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டைக்கு நவ.18இல் முதல் கப்பல்

அம்பாந்தோட்டை,நவ.2

அம்பாந்தோட்டை சர்வதேச துறை முகத்திற்கு எதிர்வரும் 18ஆம் திகதி முதலாவது கப்பல் வருகை தரும் என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகும் தினத்தன்று இக்கப்பல் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# புத்தசாசன அமைச்சின் அனுமதியின்றி வழிபாட்டுத் தலம் அமைக்க முடியாது

## பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, நவ.2

புத்தசாசன சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அனுமதியின்றி இனிமேல் வழிபாட்டுத்தலங்களை அமைக்க முடியாது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றுநிரூபமொன்று அரச அதிபர்கள், பொலிஸ் நிலையங்கள், நகரசபைகள் மற்றும் பிரதேசசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என பிரதமர் தி.மு. ஜயரத்ன தெரிவித்தார்.


இந்த விதிமுறையை மீறும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக பாரபட்சமற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் தான்தோன்றித்தனமாக வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. சுய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவே சிலர் இவ்வாறு செய்கின்றனர்.

பல்வேறு சமயத் தலைவர்கள் இது குறித்து முறைப்பாடு தெரிவித்தனர். அதையடுத்தே இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருகின்றது - என பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கணிதம் - II

நேரம்: 2 மணித்தியாலங்கள்





05. ஒரு பாடசாலையிலுள்ள குறிப்பிட்ட மாணவர்களின் உயரங்கள் தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| உயரம் cm | 110-115 | 115-125 | 125-130 | 130-135 | 135-140 | 140-155 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (மா.எ) | 5 | 20 | 8 | 7 | 8 | 12 |

110-115 என்பது 110 அல்லது அதிலும் கூட ஆனால், 115 இலும் குறைவாகும்.

1) இப்பாடசாலையில் உயரம் கூடிய மாணவரின் உயரத்தின் முழு எண் பெறுமானம் எவ்வளவு?
2) இத்தகவல்களைக் காட்டும் வலையுருவரையத்தை பூரணப்படுத்துக.




3) அதிலிருந்து மீடிறன் பல்கோணியை வரைந்து அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள் எனக் காண்க.
4) 140cm இற்கு கூடிய உயரமுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக.


### பகுதி B - எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

06. 1) ஒருவன் தனது வீட்டு ஜன்னல் ஒன்றின் அலங்கார வேலைக்காக ஒரு நீளமான கம்பியில் இருந்து முதல் துண்டு 5cm, இரண்டாம் துண்டு 8cm, மூன்றாம் துண்டு 11cm என்றவாறு சிறிய துண்டுகளாக வெட்டினான். அவன் வெட்டிய மிகப் பெரிய துண்டின் நீளம் 50cm.
   1. அவன் வெட்டிய துண்டுகளின் நீளங்களை ஓர் ஒழுங்கு முறையில் எழுதினால் அது எவ்வகை விருத்தி எனக் காரணங்களுடன் கூறுக.
   2. அவன் வெட்டிய 10ஆவது துண்டின் நீளம் யாது?
   3. அவன் வெட்டிய துண்டுகளின் எண்ணிக்கை யாது?
   4. எவ்வளவு நீளமான கம்பியிலிருந்து இத்துண்டுகளை வெட்டி இருப்பான்.


07. 1) 1. ஆரை = r உம், உயரம் 4r உம் உடைய ஒரு கூம்பின் கனவளவிற்கும், ஆரை r உடைய ஒரு கோலத்தின் கனவளவிற்கும் இடையிலான விகிதம் யாது?
   2. மேலுள்ள விகிதத்தை திருப்திப்படுத்தும் ஆரை 15cm உடைய கம்பியின் உயரத்தைக் காண்க.
2) 1. நீளம் 12cm, அகலம் 8cm, உயரம் 5cm உடைய கனவுரு ஒன்றின் கனவளவைக் காண்க.
   2. உயரம் 16.9cm உடைய உருளை ஒன்றின் கனவளவும் மேற்படி கனவுருவின் கனவளவு சமனாயின், $r^2 = 480/16.9\pi$ எனக் காட்டுக.
   3. $\pi = 3.14$ என கொண்டு மடக்கை அட்டவணையை உபயோகித்து $r^2$ பெறுமானத்தைக் கிட்டிய முழு எண்ணில் காண்க. அதிலிருந்து r ஐ காண்க.

08. முக்கோணி PQR இல் S,T என்பன முறையே PQ, RP என்பவற்றின் நடுப்புள்ளிகளாகும். RS, QT என்பன G இல் இடைவெட்டுகின்றன.
1) மேற்படி தரவுகளுக்கு பொருத்தமான ஒரு பரும்படிப் படத்தை வரைந்து தரவுகளை அதில் குறிக்குக.
2) QR இற்கும் ST இற்கும் இடையிலான தொடர்பை உரிய காரணத்துடன் எழுதுக.
3) முக்கோணி RGT = முக்கோணி QGS என நிறுவுக.
4) முக்கோணி PRS இற்கு பரப்பளவில் சமனான A ஒன்றைக் காரணத்துடன் கூறுக.
5) நாற்பக்கல் PSGT = முக்கோணி QGR என நிறுவுக.

09. 1) ஒரு வட்டத்தின் ஒரே துண்டக்கோணங்கள் சமன் என நிறுவுக.
2) ABC எனும் முக்கோணியில் AB = AC ஆகும். C இலிருந்து AB இற்கு வரையப்பட்ட செங்குத்து முக்கோணி ABC யின் சுற்றுவட்டத்தை D யில் சந்திக்கின்றது.
   1. <DAB இற்கு சமனான கோணம் ஒன்றைக் காரணத்துடன் பெயரிடுக.
   2. <ABC = 90 - <DAB என நிறுவுக.
   3. < BAC = 2 < DAB என நிறுவுக.





10. 1) கமல் A யிலிருந்து வடக்கு நோக்கி 5km தூரம் சென்று B ஐ அடைந்தார். பின்னர் அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்று C ஐ அடைந்தார். A இலிருந்து C இன் திசைகோள் 054° ஆகும். பருமட்டான வரிப்படம் ஒன்று வரைந்து C இலிருந்து A இன் திசைகோளை காண்க.
2) 18m அகலமான ஒரு வீதியின் ஓரத்தில் உள்ள வீட்டின் W எனும் ஜன்னலிலிருந்து அதற்கு நேர் எதிரே உள்ள 50m உயரமுள்ள கட்டடமொன்றின் உச்சியினது ஏற்றக்கோணம் 68°10' ஆகும். தரப்பட்ட தரவுகளை வரிப்படத்தில் குறிக்குக.
   1. AB இன் நீளத்தை கிட்டிய முழு எண்ணில் காண்க.
   2. W எனும் ஜன்னல் நிலத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் உள்ளது.
   3. ஜன்னலிலிருந்து பார்க்கும்போது கட்டடத்தின் அடி X இன் இறக்க கோணத்தைக் காண்க.




(முற்றும்)

(நாளை ஆங்கிலபாட மாதிரி வினாத்தாள் வெளிவரும்)

# கல்விச்சாலைக் காட்சிகள்



யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பாடசாலை அதிபர் க.சந்திரசேகரம் பாடசாலைக் கொடி ஏற்றுவதையும் ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.ஞானச்சந்திரமூர்த்தி அவர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படங்கள்: சுழிபுரம் செய்தியாளர்)



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.



அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் பாடசாலைக்கு அருகில் உள்ள ஆலய வாயிலிலிருந்து மலர்ச்செண்டு கொடுத்து அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: கோப்பாய் செய்தியாளர்)



கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மத்திய கல்லூரி உதவி அதிபர் ஆலாலசுந்தரம், திருவையாறு மகா வித்தியாலய அதிபர் மதுரநாயகம் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை தேடுகிறீர்களா..? இது உங்களுக்கு...




## கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு பெண் தாதியர்கள் ஆள்சேர்ப்பு

கைதடி அரச முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்குத் தேவையான பெண்தாதி உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என வடமாகாண சமூக சேவைகள் அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 18 வயது முதல் 40 வயதுக்கு இடைப்பட்டோர் விண்ணப்பிக்க முடியும். இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலாகத்திலுள்ள சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக்கொௗள்ளலாம்.இது தொடர்பான மேலதிக விபரங்கள் யாழ். மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் அறிவித்தல் பலகைகளில் பார்வையிட முடியும். (ற-121)

## நில அளவை உபகரண தொழில் நுட்பவியலாளர் பதவி

நில அளவைத் திணைக்களத்தில் நில அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்யும் பகிரங்கப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் (தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி) சித்திபெற்ற, உயர்தரப் பரீட்சையில் தூய கணிதம்,பிரயோக கணிதம், பௌதிகவியல்பாடங்களில் சித்தியும், அரசாங்கத் தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றில் ஒரு வருட இலத்திரனியல் அல்லது இயந்திரவியல் பயிற்சி நெறி யைப்பூர்த்தி செய்தும் உள்ள 18 வயதுக்கும்45 வய துக்கும் இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்ப முடிவுதிகதி:-29.11.2010 ஆகும். மேலதிக விவரங்களுக்கு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிய 1678ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்வையிடவும். (க)

## வடக்கின் வளமான...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மீள்புனரமைப்புக்குப் பின் ஏற்படவுள்ள உடனடி நன்மைகள்

இத்தகைய புனரமைப்பு நிகழ்ந்த பின் னர் உடனடியாகவே 121000 ஏக்கர் அடி நீரை இரணைமடுக் குளத்தில் சேமிக்க முடியும். இதன் மூலம் பெரும் போகத்தில் 22050 ஏக்கரில் பயிர் செய்கையும் சிறு போகத்தில் 11600 ஏக்கர் பயிர் செய்கை யும் மேற்கொள்ள முடியும். அத்துடன் ஆயிரத்து 100 ஏக்கர் மேட்டு நிலப் பயிர் செய்கைக்கான நீரையும் வழங்க முடியும்.

### போருக்கு பின்னரான கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு

கிளிநொச்சியில் விரைவில் புதிய பரிமாணத்தில் மீள்கட்டுமானப் பணிகள், அபிவிருத்திகள் என்பன மேற்கொள்ளப் படவுள்ளன.

இப்பிரதேசத்துக்கான நகரமயமாக்கல் திட்டத்துக்கு 4 ஆயிரம் கனமீற்றர் குடிதண்ணீர் ஒரு நாளுக்கு வழங்கப்படவுள்ளது.

பின்னர் மேலதிக நீர் தேவைப்படுமிடத்து 8000 கனமீற்றர் குடிதண்ணீர் ஒரு நாளைக்கு வழங்கப்படும்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி - பளை பிரதேச மக்களுக்கு 2000 கனமீற்றர் குடிதண்ணீரும் யாழ். மாவட்ட நீர் வழங்கலுக்காக 27000 கனமீற் றர் குடிதண்ணீரும் நாளொன்றுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும்.

மேலதிகமாக 46761 கனமீற்றர் நீரைப் பயிர் செய்கைக்காகத் தினமும் பயன்படுத்த முடியும்.

அதாவது ஒரு நாளைக்கு 14028.5 ஏக்கர் அடி நீரை விவசாயத் தேவைக்குப் பயன்படுத்த முடியும்.

* மரபு ரீதியான விவசாயப் பாவனையாளர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வண்ணம், புதிதாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் முழுமையான நீரினை வழங்குதல்.
* அணைக்கட்டினை 2அடி உயர்த்துவதன் மூலம் அதிகரிக்கப்படும் கொள்ளளவில் குறிப்பிட்ட சிறு பகுதியை மட்டும் யாழ். குடாநாட்டுக்கு வழங்குதல்.
* மிகுதி அணைத்தையும் கிளிநொச்சி பூநகரி நகர பாவனையாளர்களுக்கு வழங்குதல் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளை பன்முகப்படுத்தல் - விவசாய ஸ்தாபனக் கட்டமைப்பை மேம்படுத்தல் என்னும் நடவடிக்கைகளின் ஊடான அபிவிருத்தியை நோக்கி நகர முடியும்.

இவ்வாறான மக்களின் நல்வாழ்வு - அபிவிருத்தி - என்பவற்றுக்கான முன்னோடித் திட்டத்திற்கு அனைவரும் பங்களிக்க முன்வர வேண்டும். இவ்வாறு எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

## சேவை

கூலர்மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்கு கடல் உணவு வகைகள் அனுப்பி வைக்கப்படும். சாதாரண றெஜிபோம் பெட்டி ஒன்றிற்கு 275/= மட்டுமே.

தொடர்பு:0778694274

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 20.12.2010 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் எல்லோரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விலாசங்கள் மாறி இருப்பவர்கள் தயவுசெய்து எங்களுடன் தொடர்புகொள்ளவும். தீர்மானங்கள், பிரேரணைகளை 30.11.2010 இற்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

திரு.சி.இராசதுரை
செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அரியகுட்டி திலகவதி



அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு, முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியகுட்டி திலகவதி 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - சீனிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான இளையவி -பார்வதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அரியகுட்டியின் அன்பு மனைவியும், சாந்தகுமாரி, தெய்வேந்திரன், வசந்தராசா, புஸ்பராசா, புஸ்பவதி, உதயகுமாரி, இந்திரகுமாரி, சிவனேந்திரன், ரேவதி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகநாதன் (ராசு) செழுங்கதிர், செல்வி (கௌரி), யோகேஸ்வரி, தங்கவேல், யோகராசா, ரிச்மன், ஜெனட் (விஜி), றொபேட் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற குணவதி மற்றும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாமூலை கற்பூரப்புல்வெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு. (105421)

தகவல்:
குடும்பத்தினர்.
077 0774269, 077 4353955 (மகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
29 . 02 . 1928



உதிர்வு
03 . 10 . 2010

### திருமதி துரைரத்தினம் திருநாவுக்கரசு

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியாவிலும், கோண்டாவிலிலும் வசித்தவருமான காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - சொர்ணம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் ) சிவப்பிரகாசம் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் எமது தாயுமான

**திருமதி துரைரத்தினம் திருநாவுக்கரசு**

கடந்த 03.10.2010 ஞாயிறன்று இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து உடன்வந்து உதவியவர்களுக்கும் இறுதிச் சடங்கு வரை எம்மோடு நின்று சகலவழிகளிலும் உதவியவர்களுக்கும் மலர் வளையம் சாத்தியும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபத்தை தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (105441)

என்றும் நினைவுடன்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

## ஆறாம் வருட நினைவலைகள்

உதயம்
10 ★ 05 ★ 1946



அஸ்தமனம்
02 ★ 11 ★ 2004

### அமரர் கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஊர்காவற்றுறை)

ஈர்மூன்று வருடங்கள் உருண்டோடிப் போனாலும்
தீராது என்றும் உனைப்பிரிந்த பெருந்துன்பம்
மாறாத மனங்கள், மமதையின் சிரங்கள்
போராடித்தினங்கள், புழுவாகிப் போனேன்
கல்விக்கரைதனிலே நீ நடந்த பாதைகளை
திண்ணமுடன் நாம் கடக்க
எண்ணுகின்றோம் தரணியிலே
மன்னவனே கேட்கிறதா? ஆத்மாவின் ராகமிது!
விண்ணவனாய் நீ இருந்து வேண்டுதல்கள் தீர்ப்பாயோ!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

இல.36, மூன்றாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (105434)


★ UK இல் ஆங்கிலக்கல்வியை கற்பதற்கும், உயர் கல்வியைக் கற்பதற்குமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.
★ மாணவர்கள் விண்ணப்பித்து குறுகிய காலத்தில் STUDENT VISA பெற்றுத்தரப்படும்.
★ Depend down visa ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.
★ Sponsor Arrangement
★ part time Job Arrangement
★ தங்குமிட வசதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.
எமது நிறுவனத்தின் அனுபவமிக்க சட்டத்தரணிகள் மூலம் விசா ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.
தொடர்பு கொள்ள: 0214910436 (office)
0778098592

STUDY IN UK

IELTS அவசியமில்லை

ISC LANKA (PVT) LTD
533,ஸ்ரான்லி வீதி,இராசாவின் தோட்டம்,
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பெண் கெரில்லா போராளி பிரேஸிலின் ஜனாதிபதியாகத் தெரிவு

பிரேஸியா,நவ.2

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக டில்மா ரௌஸெப் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்ட டில்மா ரௌஸெப் 58 சதவீத வாக்குகளையும், எதிரணி வேட்பாளரான சா போலா மாநில முன்னாள் ஆளுநர் ஜோஸ் ஸெரா 42 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

62 வயதான டில்மா ரௌஸெப், பிரேஸிலின் முதலாவது பெண் ஜனாதிபதியாவார். பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள தற்போதைய ஜனாதிபதி லூலா டி சில்வாவின் ஆதரவாளரான டில்மா, எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்பார்.

இவர் ஒரு முன்னாள் கெரில்லா போராளி என்பது குறிப்பிடத்தக்கது. 1964-1985 காலப்பகுதியில் பிரேஸிலிலிருந்த இராணுவ சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய தேசிய விடுதலைப் படை எனும் தீவிரவாத இயக்கத்தின் அங்கத்தவர் இவர்.

1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரச படைகளால் கைதுசெய்யப்பட்ட டில்மா ரௌஸெப், கொலைகள், வங்கிக்கொள்ளைகள் ஆகியவற்றில் ஈடுபட்ட பாதாள



உலகக் குழுவுடன் தொடர்புபட்டவர் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டு 6 வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

1972 ஆம் ஆண்டு இறுதியில் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் வரை தான் மின்சார அதிர்ச்சி கொடுத்து சித்திரவதை செய்யப்பட்டார் என டில்மா கூறியிருந்தார்.

அதன்பின் தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட டில்மா, இறுதியாக லூலா டி சில்வாவின் தொழிலாளர் கட்சியில் 1986 ஆம் ஆண்டு இணைந்தார். இவரை அந்நாட்டு ஊடகங்கள் இரும்புப் பெண்மணி என வர்ணித்துள்ளன.

2000ஆம் ஆண்டு தனது இரண்டாவது கணவரை டில்மா ரௌஸெப் விவாகரத்துச் செய்தார். அத்தம்பதியின் மகள் போலா குழந்தையொன்றுக்குத் தாயானதால் டில்மா பாட்டியானார்.

2002 ஆம் ஆண்டு லூலா டி சில்வாவின் அரசில் எரிசக்தித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட டில்மா, பின்னர் பிரதமர் பதவிக்கு ஒப்பான அமைச்சரவைத் தலைவர் பதவியில் நியமிக்கப்பட்டார்.

தென்னமெரிக்காவின் மிகப் பெரிய நாடான பிரேஸிலின் ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள டில்மா ரௌஸெப், உலகின் மிக சக்திவாய்ந்த பெண்ணாக விளங்குவார் எனக் கருதப்படுகிறது.

பிரேஸிலில் வறுமையை ஒழிப்பதற்காக தான் பாடுபடப் போகிறார் என டில்மா கூறியுள்ளார். அதேவேளை, பிரேஸில் நடைபெறவுள்ள 2014 ஆம் ஆண்டின் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள், 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதும் இவர் எதிர்நோக்கும் முக்கிய சவால்களாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

# தற்கொலைத் தாக்குதலில் துருக்கியில் 32 பேர் காயம்

இஸ்தான்புல்,நவ.2

துருக்கியில் குர்தீஷ் இன தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, அவர்களை ஒடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதனால் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே சண்டை நடந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 மாதங்களாகப் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்து வந்தது. ஞாயிற்றுக்கிழமையுடன் அது முடிவடைந்தது. இந்த நிலையில் தலைநகர் இஸ்தான்புல்லில் சுதந்திர நினைவுச் சின்னம் அமைந்துள்ள தக்சிம் சதுக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் பஸ்ஸில் குர்தீஷ் தற்கொலைத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

பஸ் தூள், தூளாக வெடித்து சிதறி தீப்பிடித்தது. இதில் பஸ்ஸிலிருந்த 15 பொலிஸார் உட்பட 32 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இச்சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக அரங்கில்

# தேவாலயத்தில் துப்பாக்கிச் சண்டை ஈராக்கில் 37 பேர் பலி; 90 பேர் மீட்பு!

பக்தாத்,நவ.2

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பங்குச் சந்தை அலுவலகம் உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை அங்கு துப்பாக்கியுடன் 9 தீவிரவாதிகள் புகுந்தனர். அவர்களைப் பார்த்ததும் அங்கிருந்த பாதுகாவலர்கள் அவர்களை துப்பாக்கியால் சுட்டனர்.

இதைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பாதுகாவலர்களை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். தகவல் அறிந்ததும் இராணுவத்தினர் அங்கு விரைந்து சென்றனர்.

இராணுவத்தினரைப் பார்த்த தீவிரவாதிகள் அதன் அருகேயுள்ள சயிதாத் அல்- அநஜாத் என்ற கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்தனர். அப்போது அங்கு பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.

அங்கு பிரார்த்தனைக்கு வந்த 120 பேரையும், 2 பாதிரியார்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். அவர்களை துப்பாக்கி முனையில் வைத்து மிரட்டிக் கொண்டிருந்தனர்.

தீவிரவாதிகளிடம் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். அவர்களுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இராணுவத்தினரும் இறங்கினர்.

இதைத் தொடர்ந்து இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தச் சண்டை சுமார் 4 மணி நேரம் நீடித்தது. முடிவில் இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுக்கு 8 தீவிரவாதிகள் பலியாயினர்.

முன்னர் தேவாலயத்துக்குள் இராணுவச் சிப்பாய்களின் அதிரடிப்படை நுழைய முயன்றது. உடனே ஒரு தீவிரவாதி தான் இடுப்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தார். இதனால் உடல் சிதறி அவர் பரிதாபமாக இறந்தார்.

இதில் தேவாலயத்தின் சில பகுதிகள் சேதமடைந்தன. இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் இருந்த 30 பேர் உயிரிழந்தனர்.

இராணுவச் சிப்பாய்கள் 7 பேர் பலியானார்கள். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் பாதிரியாரும், கன்னியாஸ்திரியும் அடங்குவர்.

இவர்கள் உட்பட 90 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். இச்சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதிகள் ஈராக்கிலுள்ள அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

கிறிஸ்தவ தேவாலயத்தில் பிடித்து வைத்திருந்த பணயக்கைதிகளை விடுவிக்க சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என தொலைபேசியில் தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்தனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.



கம்போடியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், போனேபென்ஹ் மாகாணத்திலுள்ள 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற அங்கோவார்ட் ஆலயத்தைப் பார்வையிடுகிறார்.

# 20 வருடகால இராணுவ ஆட்சிக்கு முடிவுகட்ட வரும் 7ஆம் திகதி மியான்மரில் பொதுத்தேர்தல்

யாங்கூன்,நவ.2

மியான்மரில் 20 ஆண்டுகள் இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து ஜனநாயகம் மலரச் செய்ய எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தின் இரு சபைகள், 14 சட்டப்பேரவைகள் ஆகியவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்தத் தேர்தலை ஜனநாயகத்திற்கான தேசிய லீக் புறக்கணிக்கிறது. எனவே இக்கட்சியின் தலைவி ஆங் சான் சூகி தேர்தலில் போட்டியிடமாட்டார். இராணுவ ஆட்சிக்கு ஜனநாயக முகங்களை முன்நிறுத்த இந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது எனவும் கருத்துக் கூறப்படுகிறது.

2 ஜண்டா ஆதரவு கட்சிகள் சுமார் 3 ஆயிரம் வேட்பாளர்களை நிறுத்துகின்றன. எனினும், ஜனநாயக ஆதரவு கட்சிகள் களம் இறங்குவதால் அரசியல் மாற்றம் ஏற்படும் எனக் கருதப்படுகிறது.

1,160 நாடாளுமன்றத் தொகுதிகள், 14 சட்டமன்றங்கள் ஆகியவற்றில் உள்ள தொகுதிகளுக்கான தேர்தலில் மொத்தம் 37 கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்துகின்றன.

# இந்தோனேசிய ஆழிப்பேரலைக்கு பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

ஜகர்த்தா,நவ.2

இந்தோனேசியாவில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பலியானோரின் எண்ணிக்கை 449 ஆக உயர்ந்துள்ளது. காணாமற்போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ள 96 பேரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த ஒரு வார காலமாக இந்தோனேசியா, எரிமலைச் சீற்றம், பூகம்பம், ஆழிப்பேரலை என அடுத்தடுத்து இயற்கை அனர்த்தங்களில் சிக்கித் தவித்து வருகிறது. சுமத்ரா தீவு அருகேயுள்ள மெண்டாவாய் தீவுகள்தான் ஆழிப்பேரலையால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை வடக்கு பகாய் தீவில் காணாமற்போயுள்ளனர் என முதலில் கருதப்பட்ட 135 பேர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில், ''ஆழிப்பேரலையில் சிக்கி இறந்தோரின் எண்ணிக்கை 449 ஆக உயர்ந்துள்ளது. 96 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஆழிப்பேரலையில் சிக்காமல் உயிர் பிழைத்த தனி நபர்கள் சிலர், தனித்தனியாக முகாம்களுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். ஒருசிலர் தங்கள் சொந்த கிராமத்துக்குச் சென்றுள்ளனர். இறந்தவர்களில் பெரும்பான்மையோர், மண்ணில் சிக்கித்தான் பலியாகியுள்ளனர்'' என்று இயற்கை அனர்த்த மேலாண்மை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மீட்புப் பணியில் கூடுதலாக இரண்டு ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரான் உதவியுடன் அணுசக்தி நிலையம்; பொலிவியா திட்டம்

லாபாஸ்,நவ.2

ஈரான் உதவியுடன் பொலியாவில் அணுசக்தி நிலையம் ஒன்று அமைக்கப்படும் என பொலிவிய ஜனாதிபதி இவோ மோரல்ஸ் சனிக்கிழமை அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில், ''ஈரான் உதவியுடன் அணுசக்தி நிலையம் அமைக்கும் திட்டம் குறித்து மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அந்நாட்டு உதவியுடன் அணுசக்தி நிலையம் அமைக்க பெலிவியா திட்டம் வகுத்து வருகிறது.

அணுசக்தி நிலையம் என்றவுடன் அணு குண்டு தயாரிப்பு என மக்கள் நினைக்கக் கூடும். அணு குண்டு பற்றி எந்தத் திட்டமும் இல்லை. அணுசக்தியை மின்சாரம் தயாரிக்கவும் பிற ஆக்கப் பணிகளுக்காகவுமே அணுசக்தி நிலையம் அமைக்கப்படுகிறது.

அணுசக்திக்குத் தேவையான மூலப் பொருளான யுரேனியம் பெலிவியாவில் நிறைய கிடைக்கிறது. பொலிவியாவால் பிற அணுசக்தி நாடுகளுக்கும் யுரேனியத்தை ஏற்றுமதி செய்ய முடியும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிவியாவும் ஈரானும் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் பொலிவியாவுக்கு ஈரான் குழு சென்று பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

பல எதிர்ப்புகளுக்கிடையே ஈரான் மேற்கொண்டுவரும் அணுசக்தித் திட்டத்துக்குப் பொலிவியாவும் வெனிசுவேலாவும் யுரேனியம் விநியோகம் செய்யக் கூடும் என்று இஸ்ரேல் ஏற்கனவே சந்தேகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பொலிவிய ஜனாதிபதி ஈரானுடன் இணைந்து அணுசக்தி நிலையம் அமைக்க இருக்கிறார் என அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மூன்று பதக்கங்கள் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், நவ.2

கண்டி, போகம்பரையில் நடைபெற்று முடிந்த 36ஆவது தேசிய விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டத்துக்கு மூன்று பதக்கங்கள் கிடைத்துள்ளன.

இலங்கை விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இப்போட்டி கடந்த சனிக்கிழமை கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நேற்று திங்கட்கிழமை முடிவடைந்தது.

இதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் யாழ். மாவட்ட வீரரான கரிகரன் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

குத்துச்சண்டைப்போட்டியில் ஆண்கள் பிரிவில் 52 கிலோகிராம் பிரிவில் நாராயணமூர்த்தி கதிரவன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினையும், 60 கிலோகிராம் பிரிவில் சின்னத்துரை செந்தில்நாதன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

## வவுனியாவுக்கும் ஒன்று கிடைத்தது

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தணபாலசிங்கம் அனுஷியா தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்திருந்தார்.

வடக்குமாகாணத்துக்கு மொத்தம் நான்கு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

கடந்த வருடம் இரு பதக்கங்களே வடக்குக்குக் கிடைத்திருக்கின்றன. (ஐ -23 -86)



கடந்த வாரம் லொயலஸ் மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியி லான இவ்வாண்டுக்கான கராத்தே சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகள் தமது ஆசிரியர் சென்சேய் விஜயராஜுடன் நிற்பதைப் படத்தில்காணலாம்.
(படம்: தமிழினியன்)

# கொக்குவில் தாச்சிப் போட்டியில் பண்டத்தரிப்பு விநாயகர் சம்பியன்



வெற்றிக் கிண்ணத்துடன் வீரர்கள்

யாழ்ப்பாணம், நவ.2

கொக்குவில் மேற்கு ஸ்ரீவராகி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை யொட்டி அமரர் சிவகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்டு வந்த தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் வி.க. வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி மோதியது.

பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணியை 8:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு சம்பியன் ஆனது.

சிறந்த வீரனாக உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி வீரன் எஸ். பிரபா தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த விளையாட்டுக்கழகமாக கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணி தெரிவு செய்யபட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக ஆர்.வி.ஜி. நிறுவன ஸ்தாபகர் எஸ்.பரமானந்தராஜா, இலங்கைப் பாதுகாப்பு சபை உத்தியோகத்தர் முகமது எம்.சி.எம்.அமின் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-23)

## இரு விளையாட்டு கழகங்களுக்கு இடைக்காலத் தடை விதிப்பு

யாழ்ப்பாணம், நவ.2

உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அல்வாய் மனோகரா, தேவரையாளி யங்லைன்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணிக்கும், தேவரையாளி யங்லைன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு பின்னர் அடிதடியில் முடிவடைந்தது.

இதில் மூவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பலர் சிறுசிறு காயங்களுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் மேற்கொண்ட முதற் கட்ட விசாரணைகளின் படி இரு அணிகளுக்கும் இடைக்கால தடை விதிப்பதாக முடிவெடுத்துள்ளது. (ஐ - 23)

# பிரிமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி; வதிரி டயமன்ஸை வென்றது போக்குவரத்து வி.க

யாழ்ப்பாணம், நவ.2

பிரிமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் இலங்கை போக்குவரத்துச் சபை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிமியர் லீக் - 2010 உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாரஹேன்பிட்டி சாளிகா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்து சபை வி.க. அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒரு அணியை மற்றைய அணிக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபிக்கும் வகையில் இறுதிவரை ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை அணி ஒரு கோலைப் பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த போது இரு அணியினரும் கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு உற்சாகத்தோடு தமது ஆட்டத்தினை வேகப்படுத்திக் கொண்டனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்துச் சபை கழக அணி 5 நிமிடத்தில் இரண்டாவது கோலினைப் பெற்றது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் கோல் களைப் பெற எடுத்த முயற்சி வெற்றியளிக்காத போதிலும் இலங்கை போக்குவரத்து சபை கழக அணியினர் 18 நிமிடத்தில் தமது அணிக்கான மூன்றாவது கோலினையும் 22 நிமிடத்தில் நான்காவது கோலினையும் பெற்றனர்.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் கடைசி நிமிடம் வரை கோல் அடிக்க முயற்சி மேற்கொண்ட போதும் இது எதிர் அணியினரால் தடுக்கப்பட்டது.

ஆட்டம் நிறைவில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கழக அணி 4:0 என்ற கோல்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (ஐ - 23)

உள்ளூர் விளையாட்டு அரங்குகளில்

# யாழ். வீரன் கணதீபன் சாதனைப் பட்டியலில்

வலிவடக்கு, நவ. 2

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியின் சாதனையாக யாழ். மாவட்டத்தின் வீரர் கே. கணதீபன் 3.70 மீற்றர் உயரம் சாதனையாக பதியப்பட்டுள்ளது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண சாதனைப் பட்டியலை தயாரித்துள்ளது.

2007ஆம் ஆண்டு யாழ். மாவட்டம் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த எஸ். நவநீதன், எஸ். குமாரகேசன் ஆகியோரின் 3.25 மீற்றரும்,

2009ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கே.கணதீபன் 3.70 மீற்றரும், 2010ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மோகுநாத் 3.60 மீற்றருக்கும் பாய்ந்து இருந்தார்கள்.

இதனடிப்படையில் 2009ஆம் ஆண்டின் கே.கணதீபனின் 3.70 மீற்றர் உயரம் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ - 16)

# தெல்லிப்பழைக் கோட்டமட்ட உதைபந்தாட்டம்; பரபரப்பான ஆட்டத்தில் யூனியன் வென்று அசத்தியது

வலிவடக்கு, நவ.2

தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டதுடன், ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் மோதி இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் தமது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தி மோதிக் கொண்டனர்.

முதல் பாதி ஆட்டத்தில் கோல் பெறாது விட்டதனை ஈடுசெய்யும் வகையில் யூனியன் கல்லூரி தனது முதலாவது கோலைப் பெற்று தன்னை நிலைப்படுத்திக் கொண்டது.

இந்நிலையில் போட்டி சுறுசுறுப்படைந்து வேகம் அடைந்து பார்வையாளர்களை உற்சாகப்படுத்திய நிலையில் மீண்டும் ஒரு கோலை யூனியன் கல்லூரி பெற்று வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது.

இந்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் யூனியன் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வென்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (ஐ - 86)







சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் - சம்பியனாகிய, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 3ம் இடத்தைப் பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு பாகிஸ்தான் பதிலடி!



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் அப்துல் ரஸாக்கின் நிலையான - அதிரடியான சதத்தால், ஒருபந்து மீதமிருக்க பாகிஸ்தான் அணி 'த்ரில்' வெற்றிபெற்றது. இதன்மூலம் தென்னாபிரிக்காவுடனான முதலாவது போட்டியில் கண்ட தோல்விக்குப் பதிலடி கொடுத்தது.

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் அபுதாபியில் நடைபெற்றுவருகிறது.

இதன் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. இந்நிலையில் இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, அம்லா (65), இங்ராம் (100), டுமினி (54) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களைச் சேர்த்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், ரியாஸ், அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், அக்தர், ரஸாக், ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 287 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, ஆரம்பத்தில் அதிர்ச்சியைச் சந்தித்தது. ஆரம்ப வீரரான அஸாட் ஷபிக் ஓர் ஓட்டத்துடன் ஏமாற்றிச் சென்றார்.

எனினும், பின்னர் வந்த வீரர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஒரு புறம் விக்கெட்டுகள் சரிந்த வண்ணமிருந்தாலும் மறுமுனையில் நிலைத்து நின்று அதிரடியாக ஆடி, கடைசிவரை ஆட்டமிழக்காது 109 ஓட்டங்களைச் சேர்த்த அப்துல் ரஸாக், ஒரு பந்து மீதமிருக்க அணியின் வெற்றியை உறுதிசெய்தார். பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 289 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் ஒரு விக்கெட்டால் 'த்ரில்' வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் வெற்றிக்காக கடைசிவரை களத்தில் நின்று துடுப்பெடுத்தாடிய அப்துல் ரஸாக் தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம், 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி 1-1 என்ற கணக்கில் சமனிலைப்படுத்தியுள்ளது. மூன்றாவது போட்டி இன்று நடக்கிறது.

# இளம் வீரர்கள் சாதிப்பார்கள்-வெற்றோரி

அஹமதாபாத், நவ. 2

''இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இளம் வீரர்கள் சாதிப்பார்கள்.'' - என்று நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் வெற்றோரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள நியூஸிலாந்து அணி 3 டெஸ்ட்கள், 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் அஹமதாபாத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சர்தார் படேல் மைதானத்தில், நேற்றுமுன்தினம் காலை முதல் நியூஸிலாந்து வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர். பயிற்சிக்குப் பின்னர் கருத்துக் கூறும்போதே வெற்றோரி மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியை வருமாறு:-

எமது அணியில் அனுபவம் வாய்ந்த இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் இத்தொடரில் சாதிப்பார்கள் என நம்புகிறேன். அவர்களது திறமையை வெளிப்படுத்த இந்தியத் தொடர் நிச்சயம் கைகொடுக்கும். இதன்மூலம் இவர்கள் தேசிய அணியில் நிரந்தர இடம்பிடிக்கவும் வாய்ப்பு ஏற்படும். - என்றார்.

# பாகிஸ்தான் வீரர்களின் மேன்முறையீடு தள்ளுபடி

துபாய், நவ. 2

பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமது ஆமீர் ஆகியோரது மேன்முறையீட்டை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தள்ளுபடி செய்துள்ளது. இவர்கள் மீதான தடை தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டின்போது, பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமது ஆஸிப், முகமது ஆமீர் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து விசாரித்த ஐ.சி.சி. ஊழல் தடுப்புக் குழு, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க இவர்களுக்குத் தற்காலிகத் தடை விதித்தது. இதை எதிர்த்து அவர்கள் மேன்முறையீடு செய்தனர். முகமது ஆஸிப் மட்டும் முறையீட்டை வாபஸ் பெற்றார். ஏனைய இருவர் மீதான மேன்முறையீட்டை, இரண்டு நாட்களாக விசாரித்த ஐ.சி.சி., இவர்கள் மீதான தடையை நீக்க மறுத்தது.

இதுகுறித்து ஐ.சி.சி. நடத்தை விதிகள் சங்கத் தலைவர் பெலாப் வெளியிட்ட அறிக்கையில்,

''சல்மான் பட், முகமது ஆமீர் இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்தனர். இருப்பினும், இந்த வழக்கின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்த பின்னர், அவர்களின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்வது என முடிவெடுத்தேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மும்பையில் களை கட்டியது விருது விழா

# சச்சினுக்கு இரட்டை விருதுகள்

மும்பை, நவ. 02

'சகாரா' விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் மும்பையில் வண்ணமயமாக நடந்தது. இதன்போது, கடந்த ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த நட்சத்திரம் உட்பட இரண்டு விருதுகளைச் சச்சின் பெற்றுக்கொண்டார்.

இந்திய விளையாட்டு அரங்கில், சிறந்து விளங்குபவர்களுக்கு சகாரா நிறுவனம் ஆண்டு தோறும் விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இரண்டாவது சகாரா விருது வழங்கும் நிகழ்ச்சி மும்பையில் நேற்றுமுன்தினம் நடந்தது.

தமது கணவர் சொய்ப் மாலிக்குடன் இந்த விழாவில் பங்கேற்ற டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஷா, தொகுப்பாளினியாகப் புதிய அவதாரம் எடுத்தார். இவர் சிறிது நேரம் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கிரிக்கெட் வீரரான ஸ்ரீசாந்த் தமது 'பிரேக் டான்ஸை' மீண்டும் அரங்கேற்றினார். இம்முறை பட்மின்டன் நட்சத்திரங்கள் ஜுவாலா கட்டா மற்றும் அஷ்வினி பொன்னப்பாவுடன் சேர்ந்து ஆடினார்.




இந்நிகழ்ச்சியில், பொலிவூட் நடிகைகளான கரீனா கபூர், பிராச்சி தேசாய், ஜாக்குலின் பெர்னாண்டஸ், சோனாக்ஷி சின்கா போன்றவர்கள், பிரபல ஹிந்திப் பாடல்களுக்குக் கவர்ச்சியாக நடனம் ஆடினர்.

இந்திய அணியின் சாதனை நாயகன் சச்சின், கடந்த ஆயிரம் ஆண்டுகளில் போற்றுதலுக்குரிய சிறந்த நட்சத்திரம் மற்றும் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய இரண்டு விருதுகளைக் கைப்பற்றினார்.

அப்போது சச்சின் கூறுகையில்,

''கவாஸ்கரின்'' ஆட்டத்தைப் பார்த்து வளர்ந்தேன். அவர் எனக்கு ஊக்க சக்தியாக இருக்கிறார். எனது 14 வயதில் வெங்கசர்க்கார் துடுப்பு மட்டை ஒன்றைப் பரிசாக அளித்தார். இவற்றை எல்லாம் மறக்க முடியாது. தொடர்ந்து மகிழ்ச்சியுடன் கிரிக்கெட் விளையாடி வருகிறேன்.'' - என்றார்.

விருது வழங்கும் நிகழ்ச்சியில் கவாஸ்கரின் 'மீனவ இரகசியம்' குறித்து ஷாருக்கான் கேட்டார்.

இதற்கு கவாஸ்கர் பதிலளிக்கையில், ''எனது மாமா சுதாகரிக்கவில்லை என்றால், நான் கிரிக்கெட் வீரனாகியிருக்க மாட்டேன். 1949 ஜூலை 10ஆம் திகதி பிறந்தேன். அப்போது, எனது இடது காதின் கீழப்புறத்தில் சிறிய குழி இருப்பதை மாமா பார்த்துள்ளார். அடுத்த நாள் அவர் வந்து பார்த்த போது, எனது தாய்க்கு அருகில் இருந்த குழந்தையிடம் அந்தக் குழி இல்லையாம். சந்தேகமடைந்த அவர் பிரச்சினை கிளப்ப, வைத்திய சாலை முழுவதும் தாதியர்கள் தேடியுள்ளனர். இறுதியில் மீனவப்பெண் ஒருவர் அருகில் நான் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். குளிக்க வைக்கும்போது, குழந்தைகளை மாற்றிய விவரம் பின்னர் தெரிய வந்ததாம்.'' - என்றார்.



சச்சின்

# வொஸ்னியாக்கி கரோலினை வீழ்த்தினார் கிம் கிளியஸ்டர்ஸ்

டேகா டெனிஸ் போட்டி



'டோகா' சர்வதேச மகளிர் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பெல்ஜியம் வீராங்கனையான கிளியஸ்டர்ஸ் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

முன்னணி வீராங்கனைகள் எட்டுப் பேர் பங்கேற்ற, டோகா டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டியில், முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் வொஸ்னியாக்கி, மூன்றாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கிளியஸ்டர்ஸுடன் மோதினார்.

ஆட்டத்தின் முதல் செற்றைத் தனது சிறப்பான அனுபவ ஆட்டத்தின் மூலம் 6-3 என்ற செற் கணக்கில் கிளியஸ்டர்ஸ் தனதாக்கிக்கொண்டார்.

பின்னர் சுதாகரித்துக் கொண்ட வொஸ்னியாக்கி, இரண்டாவது சுற்றை 7-5 என்ற கணக்கில் போராடித் தன்வசப்படுத்தினார்.

இறுதியாக வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கிளியஸ்டர்ஸ், 6-3 என்ற கணக்கில் அச்சுற்றைத் தனதாக்கினார்.

இறுதியில் 6-3, 5-7, 6-3 என்ற செற் கணக்கில் கிளியஸ்டர்ஸ் வெற்றிபெற்று, சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இதன்மூலம், உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் வொஸ்னியாக்கிக்கு இரண்டாவது இடமே கிடைத்தது.

## தேசிய விளையாட்டு விழா துளிகள்

### தொடர்ந்து 20ஆவது வருடமாக தங்கம்

சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்த்த பத்மா நந்தினி தொடர்ந்து 20ஆவது தடவையாக (20ஆவது வருடமாக) தங்கப்பதக்கத்தினைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

18 வயது முதல் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பரிதி வட்டம் வீசுதல் போட்டியில் பங்கேற்று வரும் நந்தினி (வயது - 39), தமது இருபதாவது தேசிய விளையாட்டுப் போட்டியில் நேற்றுப் பங்கேற்றார். இதில், இவர் 43.31 மீற்றர் தூரம் வரை வீசியுள்ளார்.

### மூன்றாவது முறையாக நதிகாவுக்குத் தங்கம்

தேசிய விளையட்டுப் போட்டிகளின், பெண்கள் பிரிவில் நடந்த ஈட்டி எறிதல் போட்டியில் நதிகா லக்மாலி, மூன்றாவது தடவையாகவும் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தென் மாகாணத்தைச் நேர்ந்த நதிகா, 50.46 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்து முதலிடத்தைப் பெற்றார்.

### வீரர்களிடையே சிறுநீர் பரிசோதனை

36ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களிடையே, எதேச்சை முறையில், பரிசோதனைக்காக சிறுநீர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

ஆரம்ப நாளில் ஓட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவிருந்த ஐந்து வீரர்களது சிறுநீர் மாதிரிகளையும், இரண்டாம் நாளில் குத்துச் சண்டை வீரர்களுள் ஒருவரது மாதிரியும், பாரம் தூக்கும் வீரரதும், ஜூடோ மற்றும் மல்யுத்த வீரர்களதும் சிறுநீர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரம்படி லேன், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரன் - இந்திரமலர் தம்பதியரின் புதல்வனும், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனுமாகிய

*செல்வன் ஈஸ்வரன் டிலான்*

புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தி யடைந்தமையைப் பாராட்டுவதோடு, மேலும் உயர் நிலைபெற வாழ்த்துவதோடு, ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
வசந்தா அன்ரி,
துரைராஜா மாமா.

(சி/572411)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



2010 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய மாணவி செல்வி சிவாஜி ஷிஜானியை கல்வியில் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துவதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா - சிவாஜி,
அம்மா - சியாமளா,
அக்கா - கஜானி,
தங்கை - சதுஷனா.

*சிவன் கோவில் வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(105446)

# தீபாவளியை முன்னிட்டு!

## மாபெரும் மலிவு விற்பனை

✱ சாறி, ஸ்கேட், பிளவுஸ், பஞ்சாபி மற்றும் பல.

## நியூ ராகம்ஸ் பட்டுச் சோலை

*(முன் கடை)*

இல, 7, 8, 24, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி/572407)


# சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக 16.07.2010 ஆம் திகதியும் அதற்கு முற்பட்ட திகதிகளிலும் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் கடந்த வாகன ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சைகளில் சித்தி யடையாதவர்களுக்குமான வாகன ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சை 03.11.2010 புதன்கிழமை அன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் முற்பகல் 10 மணி தொடக்கம் நடைபெறும்.

எனவே பரீட்சார்த்திகள் எம்மால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடனும் உரிய வாகன வசதிகளுடனும் மு.ப. 9.30 மணிக்கு முன்னதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி றா.கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி/572414)


# இலகுவான இறுதிச் சந்தர்ப்பம்
## STUDY IN LONDON

- ✱ பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்புகளுக்கு IELTS இன்றி 5 வாரங்களில் LONDON பயணமாகலாம்.
- ✱ A தரம் வாய்ந்த கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பத்திரம்.
- ✱ குறைந்த தகுதி O/L மாத்திரம்.
- ✱ 100% VISA உத்தரவாதம் 10 வருட அனுபவமிக்க சட்டத்தரணிகளால் ஆவணப்படுத்தப்படும்.
- ✱ SPONSER ஏற்பாடுகள்.
- ✱ 3 வருடத்துக்கு மேற்பட்ட VISA
- ✱ வெளிநாடுகளுக்குச் சென்ற மாணவர்களின் புகைப்படம் எமது நிறுவனத்தில் பார்வையிடலாம்.
- ✱ தைமாத அனுமதிப்பத்திரம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படும்.
- ✱ அடுத்த வருட மாணவர் அனுமதிக் கட்டுப்பாடுகள் கடினமானது. (UK BOADER AGENCY)
- ✱ அலுவலகத்தில் நடைபெறும் இலவசக் கருத்தரங்குகளுக்கு மாணவர் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது. (புதன், வியாழன்)
- ✱ முன்கூட்டித் தொலைபேசியூடாகப் பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு : SEC (Pvt.) Ltd.
620, K.K.S *வீதி, யாழ்ப்பாணம்.*
*(நாச்சிமார் கோயிலுக்கு எதிரில்)*
0212220555, 0777919293

5 வருட அனுபவம்


## COLOMBO STOCK EXCHANGE (CSE)

பங்குச்சந்தை யாழ்ப்பாணம்
கார்த்திகை 01, 2010

பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,752.43↑
மிலங்கா(MPI) 7,276.25↑

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,370.27Mn
பங்குகளின் அளவு(No.) 40,67Mn
வியாபாரம்(No.) 11,160
சந்தை முதல்(Mkt.Cap)Rs. 2,233.70Bn

விலை அசைவுகளின் அடிப்படையில்

| அதிகரிப்பு(Top 5 gainers) | விலை Rs. |
|---|---|
| ஹன்ரேர்ஸ் | 1300.00 |
| காகோ போ(b)ட் | 134.20 |
| தண்கொட்டுவ போசலன் | 60.50 |
| சிலிங்கோ இன்சூரன்ஸ்(x) | 288.80 |
| குருவிற்ற ரெக்ஸ்ரைல்ஸ் | 32.70 |

| குறைவு(Top 5 losers) | விலை Rs. |
|---|---|
| ஹுய்ஜே | 57.60 |
| மேக்கன்ரைல் சிப்பிங் | 175.10 |
| மெற்றோபொலிரன் றிசோசஸ் | 41.20 |
| சிகிரியா விலேஜ் | 101.40 |
| ஒனாலி ஹொல்டிங்ஸ் | 65.00 |

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பிரதிப் பணிப்பாளர் நியமனம்

வடமாகாண மீள் எழுச்சித்திட்டப் பிரதிப் பணிப்பாளராக சா.சுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் நேற்று முதல் உடனடியாக அமுலுக்கு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபரான வி.விஸ்வலிங்கம் இப் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதை தொடர்ந்தே சுதர்சன் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை புனர்வாழ்வுக் கிளையின் பிரதித் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக சட்ட மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீடிப்பது தொடர்பில் விசாரணை நடத்தி வரும் தனிநபர் தீர்ப்பாயம் முன்பாக அவர் நேற்று அரச தரப்பு வாதங்களை முன்வைத்தார்.

தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன என அவர் தீர்ப்பாயத்தின் முன்னால் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக இந்தியா கொண்டிருந்த கொள்கையை எதிர்த்து அந்த அமைப்பின் தலைவர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் தெரிவித்த கருத்துக்களை அவர் வாசித்துக் காட்டினார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் சில பிரிவுகள் இன்னமும் சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார். எஞ்சியிருக்கும் புலி உறுப்பினர்களையும் உள்ளூர் கடத்தல்காரர்களையும் புலி ஆதரவாளர்களையும் பயன்படுத்தி இந்தப் பிரிவுகள் வெடிமருந்துகள், வெடிக்க வைக்கும் சாதனங்கள், இரசாயனங்கள் மற்றும் ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் பல்வேறு குழுக்களும் தமது ஆதரவை அதிகப்படுத்தி, பொதுக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலானது என்பதையும் மேலதிக சட்ட மா அதிபர் தீர்ப்பாயத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். ''இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்தின் ஒரு பகுதியினரிடம் அமைதியின்மையை ஏற்படுத்தி உள்ளன.'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இணையத் தளங்களில் வெளியிடப்படும் ஆக்கங்களில் ''விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்கு இந்திய அரசியல் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களும்தான் காரணம் என்று கூறுவதன் மூலம் புலம்பெயர் சமூகம் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளை இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தக்க வைக்கிறது. அவ்வா[illegible] மோசமானதாகக்கும்'' - என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ)


# கல்வி உலகில் புதிய உதயம்
## தென்மராட்சியில் ACCA



மிக வேகமாக வளரும் நிதி, கணக்கீடு, முகாமைத்துவக் கல்வி வலையமைப்புடன் நாமும் இணைந்திடுவோம்.

ACCA

மேலதிக விவரங்களுடன் தொடர்புக்கு :

உதவி இணைப்பாளர்,
மீனாட்சியம்மன் கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

T.P : 0777111205
e-mail : accajaffna@gmail.com
website : www.accaglobal.com

புதிய மாணவர்களுக்குரிய பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கலந்துரையாடல் : 03.11.2010 புதன்கிழமை, மு.ப.10 மணிக்கு

# தீபாவளி மலிவு விற்பனை

**Sony, Philips, J.V.C. Sharp**
**Hitachi - Japan T.Vகள்.**

25" --- 17,000/= Stereo Flat Screan.
20" --- 23,000/= Stereo Flat Screan.
34" --- 32,000/= Picture & Picture Stereo.
P4 Computers (Full Set) 14,000/=

மொத்தமாகவும், தனியாகவும் பெற்றுக்கொள்ள்லாம், வியாபாரிகளுக்கும் முகவர்களுக்கும் விஷேட விலைக் கழிவு வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு : இலங்கை வங்கி அருகில்,**
*அச்சுவேலி.*
Tel No : 0773222712

(105504)





# மரண அறிவித்தல்

## *விநாசித்தம்பி சிவசுப்பிரமணியம்*



(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சிவசுப்பிரமணியம் நேற்று (01.11.2010) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி விநாசித்தம்பி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை (சேது காவலர்)-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தனலட்சுமிஅம்மாவின் அன்புக் கணவரும், விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார், விஜயறஜனி (ஆசிரியை, யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), காலஞ்சென்ற நிமலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஞ்சினி (லண்டன்), மகாலஷ்சுமி (ஆசிரியை, ஞா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி), ஆகியோரின் அன்பு மாமனாரும், நவடினி (லண்டன்), திரிசன் (லண்டன்), நதுர்ஷிகன், அபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவஞானம், காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பரமகுரு (உதவி வைத்திய அதிகாரி) மற்றும் யோகலட்சுமி (கமலா), ஆனந்தராசா (ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர், மக்கள் வங்கி), தவராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு நீர்வேலி சீயாக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனலட்சுமியம்மா(மனைவி),
விஜயறஜனி(மகள்), ஜெயக்குமார்(மகன்).

இல. 88, குறுக்குத் தெரு,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(சி/572422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்ந்தது 11.09.1965



விண்ணில் மலர்ந்தது 05.11.2007

## அமரர் பூபாலன் கமலாகரன் (பாபு)

சுவிஸ் (லுகானோ) (திதி: 02.11.2010)

அன்பே! என்னுயிரே அத்தானே! பாசம் நிறைந்த எங்கள் அப்பாவே! பூத்து மணம்வீசிய எம்வாழ்வை வஞ்சித்தவர் யார்தான் அப்பா! நீங்கள் இல்லாத தேசத்தில் பூக்களுமே மலர மறுக்கின்றன. புன்னகைகளும் மறந்துபோயிற்று அத்தானே! வசந்தம் தொலைந்து மூன்றாண்டு ஆகியும் உங்கள் வாசனை மட்டும் என்றும் அழியாது எம்முடன் வாசனை பரப்பிக்கொண்டு இருக்கின்றது! தினம் தினம் கை கோர்த்த காலங்களை எண்ணியெண்ணி தனிமையில் தத்தளிக்கின்றோம் அத்தான். அப்பா! நாங்கள் மட்டும் என்ன பாவம் செய்தோம். நீங்கள் எம்மை வேறுவிதமாக தண்டித்து இருக்கலாமே அத்தான். அப்பா! நித்தம் பூத்துக் குலுங்கிய என் இதய நாயகனே அத்தான்.

அன்று (05.11.2007) பேரிடிபோல் வந்த காலனவன் தங்கள் இன்னுயிர் பறித்த கோலமதை மறக்கமுடியவில்லையே. கற்பனையில் நிறைந்த என் இதயத்தின் உயிரே!

அன்பே! அப்பா! எம்மோடு நீங்கள் வாழ்ந்துகொண்டு வழி நடத்துவது மட்டும் நிஜமாகத் தெரிகின்றது. நம் தேசத்தின் சிறார்களுக்காக நீங்கள் விதைத்துச் சென்ற நற்பணிகள் இன்று ஆலமரமாய் வியாபிக்கின்றதே விழுதாக தாங்கி நின்று உங்கள் பணி தொடரும் நண்பர்கள் பாபு, பாபு என்று உச்சரித்து நினைவுகொள்ளும் கணம் என் இதயம் இயங்க மறுக்கிறதே! உங்களின் ஒவ்வொரு பாதச் சுவடுகளின் வழி நடப்போம் அப்பா! காலத்தால் அழியாத உங்கள் உருவம் என்றென்றும் எம்முயிரில் கலந்திருக்கும் உங்களுக்காக எதையும் தாங்கும் இவள் இன்று உங்களையே தேடுகின்றாள். உங்கள் அருகே வரும் வரை என் ஆத்மா உங்களோடு சாந்திபெறும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உன்னை பிரியாது வாழும்
உங்கள் அன்பிற்கினிய மனைவி கமலாகரன் மதனிகா
பாசம் நிறைந்த எம் பிள்ளைகள் அபிசா, சகிதன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## இராசரத்தினம் அழகம்மா

தோற்றம்
02.10.1925

மறைவு
04.10.2010

கடந்த 04.10.2010 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத்தாயின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும் அன்னாரின் இல்லத்தில் நாளை 03.11.2010 காலை 5.30 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளைகள்:-
இ.அழகரத்தினம்,
இ.குணரத்தினம்,
பா.சரோசாதேவி,
இ.தர்மரத்தினம்.

பெரியன் சீமா,
கரணவாய் வடக்கு,
நவிண்டில், கரவெட்டி.
T.P: 021 2264307

(104473)

# மரண அறிவித்தல்



திருமதி
## தங்கராஜா பரமேஸ்வரி

ஏழாலை மத்தி, களபாவோடையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா பரமேஸ்வரி 31.10.2010. ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பூமணி தம்பதியரின் அன்பு மகளும், தங்கராஜாவின் அன்பு மனைவியும் ஈஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயச்சித்திரா (பிரான்ஸ்), துஸ்யந்தன் (டோகா) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணியம், மனோகரன், பிரேமராணி, யோகராணி, ஆகியோரின் சகோதரியும் செல்வராசா, யோகராசா, புஸ்பராணி, ஜசிந்தா ஆகியோரின் மைத்துனியும், துஸ்யந்தனின் (பிரான்ஸ்) மாமியும், பவித்திரா (பிரான்ஸ்), சினிசியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம். (572409)

தகவல்:
குடும்பத்தினர்.

# மாற்றுத்திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், நவ. 02

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

இப்பயிற்சிப் பட்டறையில் மாற்றுத் திறனாளர்களது தேவைகள், மருத்துவச் சிகிச்சை தொடர்பாகவும் அவர்களின் உள விருத்தி தொடர்பாகவும் சமூக சேவை திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றியதாகவும் இடம்பெறும் என சண்டிலிப்பாய் பிரிவு களப்பணியாளர் த.புலேந்திரன் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்கள், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள், ஜெய்ப்பூர் நிறுவன நிகழ்ச்சித் திட்ட அலுவலக குழாம் ஆகியோர் கலந்து தமது நிறுவன செயற்பாடுகள் தொடர்பாகவும், தமது நிறுவனத்தினூடாக இவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர்.

மேலும் இதம் உளவள நிறுவனமானது மாற்றுத் திறனாளர்களுக்கான உளவளத் துணை, சுயதொழில் விருத்திக்கு உதவி செய்வதுடன் மருத்துவச் சிகிச்சை மற்றும் செயற்கை அவையங்கள் பொருத்துதல், நடமாடுவதற்கான மருத்துவ உதவி போன்றவற்றை ஏனைய நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடனும் இணைந்து செயற்பட்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (ற)

# கஞ்சாவுடன் பெண் கைது

கொழும்பு, நவ. 02

மாதம்பை பொலிஸாரால் சுதுவெல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது விற்பனைக்காக வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த 500 கிராம் கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

(ஒ-5)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளுக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 0729570367

## விற்பனைக்கு

ஒரு பாக் சிமெந்து கொங்கிறீட் மிக்சி மெசின் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771569294

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் 17' Black Monitor என்பன ஒருவருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக் குண்டு. (விலை ரூபா 16750/= மட்டுமே).
தொடர்பு: SKY Computer System
162, Main Street, Jaffna. (பேமிந் பீஸ் மோட்டர் கம்பனிக்கு முன்பாக)
T.P.021 222 1417

## வாடகைக்கு

14 அடி நீளமான கூலர் சாரதியுடன் நாளாந்தம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0778694274

## வீடு வாடகைக்கு உண்டு

மீசாலை சியாமளா வீதியில் வீரசிங்கம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.இல.
0772719323,0776102559
தற்பொழுது தான் மீள்குடியேற்றத்தில் இந்தவீடு கையளிக்கப்பட்டது.

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா NO.1 புறோயிலர் குஞ்சுகள் 03.11.2010 அன்றுகாலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன்,
நல்லூர்.
0212226944

## தவறிவிட்டது

இராஜ வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய் (குழந்தை யேசு கோயிலடி)என்னும் முகவரியைச் சேர்ந்த திருமணி திருக்குமார் என்பவரது தே.அ. அட்டை (813335409V), விசேட அடையாள அட்டை, சாதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கட்டப் [illegible] டுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த [illegible])
T.P-0775717187,0776617900

# ACCA புதிய பிரிவுகள் ஆரம்பம்

ACCA கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் 06.11.2010, 07.11.2010 ஆகிய திகதிகளில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றன.

Business English - 9.00 Am
Business Application - 10.00 Am

மேலதிக விவரங்களுக்கு: ACCA Administrator
No. 46, Clock Tower Road,
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)
Jaffna.
T.P.: 0215670345

ACCA

JOB Skills எந்த வேலையில் சேர்வதற்குமான ஆளுமை விருத்தியுடன் கூடிய தொழில் பயிற்சி

"Certified Medical Assistant" (An US Curriculum)

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்தியசாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை லாவா வைத்தியசாலையில் சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகத் தகுதியான வைத்திய விரிவுரையாளர்கள் மூலம் பெற்றிடுங்கள்.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02)

CMA US Curriculum

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.

யாழ் வைத்தியசாலை வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.www.kugroup.info
Call: 0777302882
உள்ளக பயிற்சி வழங்குவோர்:
Lava Hospitals

Quality Assured
City Guilds Qualified

Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி அ.சத்தியபாமா அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் செல்லத்துரை இராசலிங்கம்** அவர்களின்

திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.

(105448)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.பெ.வசந்தன் அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் செல்லத்துரை சிங்கராசா**


அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(இ/572406)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.03.1932

மறைவு
24.10.2008

மீசாலை

## அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

B.A., Dip. in Edu., M.A.
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

**திதி: அபரபக்க ஏகாதசி (02.11.2010)**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

நாள் ஒன்று விடிந்ததில்லை
நாம் நினைத்துக் கலங்காமல்
ஆண்டு இரண்டு ஆயிடினும்
ஆறிடுமோ எம் துயரம்.

குடும்பத்தினர்.
16/1, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

சிவகிரி,,
மீசாலை வடக்கு, மீசாலை.

(105425)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவந்துறைப் படிப்பகம் நகர சபை, யாழ்ப்பாணம்

# வலி.வடக்கில் மீள் குடியமர்வு; பஸிலின் வருகை மிக விரைவில்

யாழ்ப்பாணம், நவ.2

வலி.வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள இன்று வருகை தரவிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சீன விஜயம் காரணமாகவே பஸிலின் யாழ். வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

வலி.வடக்கில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு, அங்கு மீள்குடியமர்வுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அமைச்சர் பஸிலின் விஜயம் விரைவில் சாத்தியமாகும் என செயலக வட்டாரங்களும் உறுதிப் படுத்தின.

(ஒ)

## விலைவாசி உயர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு தழுவிய ரீதியில் இதுபோன்ற ஆர்ப் பாட்டங்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட உள்ளன என ஜே.வி.பி யின் ஊடகப் பேச்சாளர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கொழும்பு மெனிங் மார்க்கட்டில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் நாட்டில் பொருள்களின் விலை உயர்வடைந்துள்ளதோடு, வரி விதிப்புகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2005ஆம் ஆண்டில் நாட்டில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அரசு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியது. அதாவது, தற்போது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது. பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக எதுவும் செய்யமுடியாது. யுத்தம் நிறைவடைந்த பின்னர் விலை குறைக்கப்பட்டு, மக்களின் வாழ்க்கைச் செலவு, வரி விதிப்புகள் ஆகியவை குறைக்கப்படும் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால், ஜனாதிபதி மக்களுக்கு அளித்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. யுத்தம் நடைபெற்றதால் அனைத்துச் சுமைகளையும் மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். தற்போது பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்டு செயல்பட முடியாது என அன்று அரசு வழங்கிய வாக்குறுதிகளை மக்கள் ஏற்றனர். ஆனால், யுத்தம் நிறைவடைந்து 17 மாதங்கள் கழிந்தும் மக்களின் வாழ்க்கைச் செலவு இதுவரை குறைவடையவில்லை.

நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 46.6 வீதமானோரின் நாளாந்த வருமானம் இரண்டு அமெரிக்க டொலர்களுக்கும் குறைவு.

அது மட்டுமன்றி, பிறக்கும் குழந்தைகளில் 29.4 சதவீதமானவர்கள் நிறை குறைந்தவர்கள். குறை வருமானம் பெறுபவர்களில் 20 சதவீதமானவர்களுள் தேசிய வருமானத்தில் 4.6 சதவீதம் வருமானத்தையே பெறுகின்றனர்.

இதனால் மூன்று நேர உணவு உண்ண வேண்டியவர்கள் உணவு வேளையை இரண்டு நேரமாகக் குறைத்துக் கொண்டுள்ளனர்.

எனவே, நாட்டில் தற்போது காணப்படும் பொருள்களின் விலை உயர்வு, வரி விதிப்பு அதிகரிப்பு ஆகியவற்றுக்குச் சிறந்த தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.

- இப்படி அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இமெல்டா சுகுமாரை சாட்சியம் அளிக்க அழைக்கிறது நல்லிணக்க ஆணைக்குழு

*சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக*

யாழ்ப்பாணம், நவ.2

இறுதி யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு, அவ்வேளை முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமாரை சாட்சியமளிக்க வருமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அழைப்பு விடுத்துள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் சாட்சியமளித்துள்ளனர். இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் அவர்கள் தமது சாட்சியங்களில் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகத் திருமதி இமெல்டா சுகுமார் கடமையாற்றி இருந்தார்.

எனவே தமக்குள்ள சந்தேகங்கள் சிலவற்றைத் தெளிவு படுத்துமாறு நல்லிணக்க ஆணைக்குழு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதனையடுத்துத் தற்போது யாழ்.அரச அதிபராகப் பதவிவகிக்கும் அவர் நாளை மறுதினம் வியாழக்கிழமை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உணவு, மருந்து வகைகள் எவ்வாறான ஒழுங்கில் விநியோகிக்கப்பட்டன என்பது தொடர்பாக அரச அதிபர் இந்தச் சாட்சியத்தில் விளக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(த-15)

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் கயந்த கருணாதிலக்க நேற்று கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் யுத்தவெற்றி சரத் பொன்சேகாவுக்கே உரித்தானது என இலங்கையர்களுக்கும், முழு உலகத்துக்குமே தெரியும். அவரே யுத்தத்தை முன்னின்று வழி நடத்தியவர். ஆனாலும், அரசு அவரை கைதுசெய்து தடுத்து வைத்துள்ளது.

## பிரான்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த சு.ப.தமிழ்செல்வன் 2007 நவம்பர் மாதம் 2ஆம் திகதி கிளிநொச்சியில் விமானக் குண்டுவீச்சில் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல கட்சிகளின் இணக்கப் பாட்டைப் பெற்ற பின்னர் முன்வைக்கப்படும் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். தீர்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அரச வேலைகளில் கட்டாயமாகக் கணிசமான தமிழர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அரசின் கடமையாகும். இல்லாவிட்டால், இனப் பிரச்சினை வன்முறைப் பாதை நோக்கி மீண்டும் திரும்புவதற்கு இதுவே வழிவகுப்பதாக அமைந்து விடும்''- என்று பதிலளித்தார்

''வடக்கில் அண்மையில் வழங்கப் பட்ட நில அளவையாளர் நியமனங்களில் ஐந்து மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. ஏனைய 95 நியமனங்களும் சிங்களவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன'' என்ற விடயத்தை கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் ஜனாதிபதியின் அவசரக் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார். (உ-சி)

## தவறிவிட்டன

தாட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் முகவரியையுடைய நாகராஜா நந்தபாலன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், Commercial Bank ATM Cart என்பன நல்லூருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பி.வ. தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே. 0773655626

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானம் இராசம்மா (சின்னக்கர்)



வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் இராசம்மா நேற்று (01.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூரணம் மற்றும் செல்லத்துரை (கனடா), பாக்கியம் (கனடா), இலட்சுமி (கனடா), கார்த்தியேசு ஆகியோரின் உடன்பிறப்பும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, இராசம்மா, சொக்கலிங்கம் மற்றும் அருணகிரி (கனடா), விஜயராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் தில்லைச்செல்வி இராசேஸ்வரன் (ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் இராசரத்தினம் இராசேஸ்வரன் (ஆசிரியர் - யா/கோப்பாய் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் மோகனசரன் (சித்த மருத்துவத்துறை, 2ஆம் வருட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்), விதுரசரன், கேதுசன் (2011- A/L, யா/இந்துக்கல்லூரி), கௌஷிகா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஜெயலக்சி (தரம்-8, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் வேலணை அம்பலவி இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*359/16, நல்லலக்சுமி அவனியு,*
*(மாங்கோஸ் ஹொட்டல் ஒழுங்கை),*
*கோயில் வீதி, நல்லூர்.*

*தகவல் :*
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

(105506)


PAPER CLASS
பொருளியல்: திரு.சண்
ஆரம்பம்
பிறஸ்மன் மானிப்பாய் புதன் 3.30 pm
யூனிவேர்சல் யாழ்ப்பாணம் செவ்வாய் 4.30 pm

A/L - Day Class
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 03.10.2010 புதன் 8.00 மணி
பாடம் மாறிக் கற்போருக்கு விசேட பிரிவுகள்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வங்கியியல் கற்கை நெறிகள்
CBF மற்றும் DBF
* Managing information.
* HRM
* CRM
* Marketing
By:-R.Kumaran Contract No:- 0776577359
7 வருட அனுபவம்.

கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 01 07.11.2010
பிரிவு 02 08.11.2010
இக்கல்வியாண்டுக்குரிய இறுதிப்பிரிவுகள் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர், IIS
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2831, 021 4922741


COM. Maths
K.சயந்தன் B.Sc. Med
A/L DAY CLASS
wed, Sat, Sun 7 - 8.30 am
ஆரம்பம் 03.11.2010 7 am (நாளை)
A/L 2011 [illegible]
Mon, Thur 4 - 5 pm
A/L 2012 [illegible]
Mon, Thur 5 - 6 pm
ஆரம்பம் 02.11.2010 (இன்று)
NEC
பருத்தித்துறை, ஆனைப்பந்தி, யாழ்.

Model PAPER CLASS
கலைப்பிரிவு
Log: திரு.கமல் சனி,ஞாயி 4 Pm
H.cu: திரு.ஜெயக்குமார் சனி,ஞாயி 12 Pm
P.sc: திரு.செந்தூரன் ஆரம்: ஞாயி10.30 am
Geo: திரு.கரன் ஆரம்: ஞாயி9.30 am
வர்த்தகப்பிரிவு
Eco: திரு.சண் ஆரம்பம் செவ், வியா 4.30 pm
B.st: திரு.பிரதீபன் ஆரம்பம் செவ், புதன் 4.30 pm
Acc: திரு.தவா திங், வெள் 5 pm
தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
யூனிவேர்சல் யா/இந்துமகளிர் கல்லூரி அருகே

DELL BRANDED DESKTOPPCs 29,500.00
DELL BRANDED Dual Core 3.0GHz, 1 GB Ram, 80GB HDD, WITH 1 Yr WARRANTY
இச்சலுகை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மட்டுமே
E.City 149, Kasthuriar Road. Jaffna. T.P:0212228147.

Jaavary கற்கைத் துறைக்கான
EUROPEAN COLLEGE OF HIGHER STUDIE
மாபெரும் கட்டணக் குறைப்பினை வழங்கும் UK பயணம்.
STUDY IN UK
★ போலி வாக்குறுதி இல்லை
★ IELTS அவசியமில்லை
★ ஆரம்பக்கட்டணம் எதுவும் இல்லை
★ கல்லூரி கட்டணம் 2000 பவுன்ஸிலிருந்து
★ Sponsor வசதி (25லட்சம் ரூபா - 130, 000/=)
நம்பிக்கை மிக்க பயணம்
தொடர்பு: European College of Higher Studies
315 1/2, Parameshwara Juntion, Palaly Road, Jaffna.
T.P: 0773537378, 0773823872, 0213734747

விவசாயிகளே!
களைகள் இல்லை வயலில்
சொலிட்டோ இருக்கும் வரையில்


நெற்பயிருடன் போட்டியிடும் அனைத்துக் களைகளையும் ஒரே தடவையில் சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்கு,
"களைகள்"
2 தொடக்கம்
3 இலைப் பருவத்தில்
உள்ளபோது சொலிட்டோ பாவியுங்கள்.
விவசாயிகளின் தெரிவு - சொலிட்டோ.
CIC சி.ஐ.சி இல்லம், 199, கியூ வீதி, கொழும்பு - 02.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.